> காலுயர் வட்டணை யிட்டு நட்ட
> மழலு மிழ்ந்தோரி கதிக்க வாடு
> மப்ப னிடந்திரு வாலங்காடே'' [29]

26. Chidambaranatha Chettiyar, A. 1943, *Advanced Studies in Tamil Prosody,* Annamalai University, Annamalainagar. P. 94.
27. **தொல்காப்பியம்**, பொருளதிகாரம், செய்யுளியல், நச்சினார்க்கினியருரை, 1965, கழக வெளியீடு, சூ. 149, ப. 176-76.
28. **மேற்படி**, சூ. 138.
29. **காரைக்கால்**, பதிகம் 1, செய். 7.

என்று காரைக்காலம்மையார் படர்க்கையிலே அப்பனைப் பாடுகின்றார். அவருடைய இரு பதிகங்களில் அமைந்துள்ள செய்யுட்கள் இவ்வாறே பாடப் பட்டுள்ளன :

"விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை சொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றறைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரோ"[30]

என்ற பாடலைப்போல பதினொரு பாடல்கள் கொண்ட பதிகம் முழுவதிலும் சுந்தரர் இறைவனை முன்னிலையிலே நிறுவிப் பாடுகிறார்.

பல்லவர் காலப் பக்திப் பாடல்கள் கலிப்பாவின் உறுப்பின் வளர்ச்சி என்பதை முன்பு குறித்தோம். தாழிசைகளால் முன்னிலையிற் பரவுதலையே தொல்காப்பியர் குறித்துள்ளார். படர்க்கையிற் பரவுதலையும் அவர் குறிப் பிட்டுள்ளார் என உரையாசிரியர்கள் கூறுவர். "தரவின்றாகித் தாழிசை பெற்றும்" என்று கொச்சக ஒருபோகு இலக்கணங் கூறும் தொல்காப்பியர், "யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது" என்று கூறிய சூத்திரப் பகுதிக்கு உரை வகுக்கும் பேராசிரியர்:—

"முற்கூறிய வகையாலும், மரபு வேற்றுமையாலும் ஏற்ற வகையான் வந்து பொருள் வேறுபடுதல்; அஃதாவது தேவரை முன்னிலையாக்கி நிறீஇச் சொல்லாது, படர்க்கையாகச் சொல்லுதலும்..."[31]

என்று கூறிச் செல்வார். ஆகவே தேவரை முன்னிலையிற் பரவும் வண்ணக வொத்தாழிசைப் பொருளில் வேறுபாடுடையதாய்க் கொச்சக ஒருபோகு அமைந்துள்ளது என்பது அவர் கருத்து. எனவே தேவர்ப்பரவும் ஒத்தாழிசைக் கலியிலேயே முன்னிலைப் பரவலும் படர்க்கைப் பரவலும் இடம் பெற்றுள்ளன என்பதை ஊகித்தறிய முடிகின்றது.

தாழிசைகளால் இறைவனை முன்னிலையிலும் படர்க்கையிலும் பாடும் தொல்காப்பியர் கால மரபு **சிலப்பதிகாரத்திலேயே** வளர்ச்சியடைந் துள்ளதைக் காணலாம்.

"வட வரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ண பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடை கயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத் தே"[32]

---

30. **சுந்.**, பதிகம் 8, செய். 2.
31. **தொல்காப்பியம்**, பொருளதிகாரம், செய்யுளியல், பேராசிரியருரை, 1943, கணேசையர் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம். சூ. 149, ப. 510-11.
32. **சிலப்பதிகாரம்**, சாமிநாதையர் பதிப்பு, 1892, வெ. ந. ஜுபிலி அச்சுக் கூடம், ப. 412.

என்பது போல மூன்று தாழிசைகள் ஒரு பொருண்மேல் அடுக்கி முன்னிலைப் பரவலாக அமைகின்றன.

"மூவுலகு மீரடியான் முறை நிரம்பா வகை முடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே"[33]

என்பது தொடக்கம் மூன்று தாழிசைகள் ஒரு பொருண்மேல் அடுக்கிப் படர்க்கைப் பரவலாக அமைகின்றன. இன்னும், இறைவனைப் பாடுங்கால் மூன்றுக்கு மேற்பட்ட தாழிசைகளாற் பாடும் மரபு **சிலப்பதிகாரக்** காலத்திலே இருந்தது என்பதற்குக் குன்றக் குரவைப் பாடல்கள் சான்றாகின்றன. இப் பகுதியில் வரும் மடைகள் எல்லாம் முருகனைப் படர்க்கையிலே பரவுவன வாக நான்கு நான்கு தாழிசைகள் கொண்டனவாயமைந்துள்ளன. ஆகவே, இறைவனை முன்னிலையிலும் படர்க்கையிலும் பரவும் பத்துப் பாடல்கள் கொண்ட பல்லவர்காலப் பதிக வடிவம் சங்ககாலக் கலிப்பா வகைகளிலே தோற்றம் பெற்று, **சிலப்பதிகார** காலத்தில் வளர்ச்சி பெற்றுப் பின்னர் பூரண வடிவம் பெற்றதெனலாம்.[34]

## 4. பதிக வடிவத்தின் வளர்ச்சி

காரைக்காலம்மையாராலே தொடங்கிவைக்கப்பட்ட பதிக வடிவம் பல்லவர்கால அடியார்களின் பக்திப் பாசுரங்களிலே எவ்வாறு வளர்ச்சிபெற்ற தென்பதை இனி ஆராயலாம். காரைக்காலம்மையார் பதிகத்திற் பத்துப் பாடல்கள் பாடியதற்குக் காரணம், அவர் காலத்துக் கோயிலைச் சுற்றிப் பாடியாட அவை போதுமானவையாக இருந்திருக்கலாமென எண்ணவும் இடமுண்டு. அம்மையார் தன்னுடைய பதிகத்தில் இறைவனைப் பாடப் பத்துப் பாடல்கள்தான் அமைக்கப்பட்டுள்ளன என்று கூறினும், அவருடைய பதிக வடிவம் பதினொரு பாடல்களைக் கொண்டமைகின்றது. இவ்வமைப் பினையே பல்லவர்கால அடியார்கள் பெரும்பாலும் பின்பற்றியுள்ளனர். எனினும், 10, 11, 12, 13, 14, 21 ஆகிய எண்ணிக்கைப் பாடல்கள் கொண்ட பதிகங்களும் பாடப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு :

**திருஞானசம்பந்தர்** : சம்பந்தருடைய பெரும்பாலான பதிகங்கள் பதினொரு பாடல்களைக் கொண்டன. ஆனால் 3-ஆம் திருமுறையில் 295-ஆம் பதிகம் பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. பின்வரும் பதிகங்கள் பன்னிரண்டு பாடல்களாலானவையாகும் :

I : 45, 63, 90, 117, 127

II : 142, 206, 29

III : 312, 325, 368, 371

33. மேற்படி, ப.413.
34. செல்வநாயகம், வி, 1960, "தமிழிலக்கிய மரபும் பக்திப் பாடல் களும்", **கணேசையர் நினைவு மலர்**, ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், சுன்னாகம், ப 213-22

12 பாடல்களாலானவற்றையும் சம்பந்தர் 10 பாடல்கள் கொண்டவையே யெனத் தமது முத்திரைக் கவியிற் குறிப்பிடுகின்றார். அவற்றை அவர் "பழுதில் சம்பந்தன் மொழிகள் பத்துமே"[35] என்றும் "ஒலிகொள் சம்பந்த னொண்டமிழ் பத்தும் வல்லார்கள் போய் .."[36] என்றும் குறிப்பிடுகின்றார். ஆனால் அப்பதிகங்களுள் ஒன்றின் முத்திரைக் கவியில்

"பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாய்
பத்திமையாற் பனுவன் மாலை"

என்று குறிப்பிடுகின்றார். ஆகவே சம்பந்தருடைய திருப்பதிக வடிவங்கள் பத்து, பதினொரு, பன்னிரண்டு பாடல்கள் கொண்டனவாயமைந்துள்ளன.

**திருநாவுக்கரசர் :** அப்பரடிகளுடைய பெரும்பான்மையான பதிகங்கள் பத்துப் பாடல்கள் கொண்டமைந்துள்ளன. எனினும் பதினொன்று, பன்னிரண்டு பாடல்களைக் கொண்ட பதிகங்களும் அவராற் பாடப்பட்டுள்ளன.

பதினொரு பாடல்களான பதிகங்கள் பின்வருமாறு :—

IV : 3, 14, 15, 17, 19, 22, 61, 84, 86, 98, 112, 114

V : 115, 124, 126, 128, 130, 131, 133, 134, 139, 144, 147, 151, 153, 158, 161, 163, 165, 177, 178, 179, 206, 208, 209

VI : 216, 217, 218, 222, 229, 232, 233, 236, 239, 242, 252, 260, 265, 267, 269, 278, 284, 285, 289, 310, 311

பன்னிரண்டு பாடல்களானவை பின்வருமாறு :—

IV : 9

V : 121, 167

VI : 221

அப்பர் ஒரேயொரு பதிகத்தைத் தவிர வேறு எந்தப் பதிகத்திலும் பாடலெண்ணிக்கை கூறினாரில்லை. நான்காம் திருமுறையில் 61-ஆம் பக்கத்தில் தான்,

"திரைகள்முத் தால்வணங்கும் திருவிரா மேச்சரத்தை
உரைகள் பத் தாலுரைப்பா ருள்குவாரன்பினாலே"

என்று கூறுகிறார். இப்பதிகம் பதினொரு பாடல்கள் கொண்டமைந்த போதிலும், அது பத்துப் பாடல்கள் கொண்டதே என்று அப்பர் கூறுவதிலிருந்து, பத்துப் பாடல்கள் கொண்டதாகப் பதிக வடிவம் அமைவதே சிறப்பு என அவர் கருதியிருக்க வேண்டுமெனக் கொள்ளலாம். அத்துடன் அவர் சம்பந்தர் போல் முத்திரைக் கவி அமைக்காது பத்துப் பாடல்கள் கொண்டதாகவே தன்னுடைய அநேக பதிகங்களைப் பாடியருளியுள்ளார். அவர் முத்திரைக் கவி அமைக்காதது பற்றிப் பின்பு விளக்குவாம்.

35. திருஞா., I : 90 : 12
36. திருஞா., II : 142 : 12

**சுந்தரர் :** சுந்தரர் பாடிய நூறு பதிகங்களுள்ளும் அறுபத்தேழு பதிகங்கள் பத்துப் பாடல்கள் கொண்டனவாக அமைந்துள்ளன. மிகுதிப் பதிகங்கள் பதினொரு பன்னிரு பாடல்களாலானவையாகும். பதினொரு பாடல்களான பதிகங்கள் பின்வருமாறு:-

VII : 2, 7, 9, 12, 13, 16, 17, 19, 30, 34, 36, 37, 39, 40, 43, 45, 46, 56, 59, 61, 67, 69, 72, 73, 77, 89, 93, 95, 98, 99.

பன்னிரு பாடல்களானவை பின்வருமாறு:-

VII : 14, 51, 57.

சுந்தரர் பத்துப் பாடல்கள் கொண்ட தம் பதிகங்களின் இறுதிப் பாடல்களில் பதிகப் பாடலெண்ணிக்கையைக் குறிப்பது போன்று, பதினொரு பாடல்கள் கொண்ட பதிகங்களின் இறுதிப் பாடல்களிலும்,

"அருத்தியாலா ரூரன்றொண்டனடியன் கேட்ட பத்துங்"[37]

என்றும்,

"ஆரூரனந் தமிழைந் தினொடைந்
தழகா லுரைப்பார்களுங் கேட்பவரும்"[38]

என்றும் குறிப்பிட்டு அவை பத்துப் பாடல்கள் கொண்டனவே எனக் கூறுதல் நோக்கற்பாலதாகும். பன்னிரு பாடல்கள் கொண்ட மூன்று பதிகங்களிலும் முத்திரைக்கவியில் 'பத்துப்பாடல்' என்று அவர் குறிப்பிட்டாரில்லை.

**மாணிக்கவாசகர் :** திருவாதவூரர் பாடியருளிய 'பதிகங்கள்', 'பத்துக்கள்' ஆகியனவற்றுள் நான்கினைத் தவிர ஏனையவை யாவும் பத்துப் பாடல்கள் கொண்டனவேயாம். 'பிரார்த்தனைப் பத்து' பதினொரு பாடல்களைக் கொண்டுள்ளது. 'திருக்கழுக்குன்றப் பதிகம்', 'எண்ணப் பதிகம்', 'அச்சோப் பதிகம்' ஆகியன முறையே ஏழு, ஆறு, ஒன்பது பாடல்களைக் கொண்டனவாயமைந்துள்ளன.

**பெரியாழ்வார் :** பெரியாழ்வாரும் தமது பெரும்பாலான பதிகங்களைப் பத்துப் பாடல்கள் கொண்டனவாகவே அமைத்துள்ளார். முதலாம் பத்தில் மூன்றாம் திருமொழி இருபத்தொரு பாடல்களாலாயது. அதன் இறுதிப் பாடலிலும்,

"விருப்பாலுரைத்த விருபதோடொன்று"

எனக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் பத்தில் மூன்றாம் திருமொழி பதின்மூன்று பாடல்களுடையதாகும். ஆனால் அதன் இறுதிப்பாடலில்,

"பாரார் தொல்புகழான் புதுவை மன்னன்
பன்னிரு நாமத்தால் சொன்ன"

என்று கூறியுள்ளது நோக்கற்பாலதாகும். பின்வருவன பதினொரு பாடல்களானவையாகும்:-

---

37. சுந்., VII : 7 : 11
38. சுந்., VII : 9 : 11

I : 6, 8, 9.
II : 2, 9.
III : 1, 5, 6, 7, 9.
IV : 2, 3, 6, 7, 9.
V : 4.

பெரியாழ்வாரும் பதினொரு பாடல்களாலானவற்றையும்

"இன்னிசை மாலைகளிப் பத்தும் வல்லார்"[39]

என்றும்

"செந்தமிழ்த் தென்புது வைவிட்டு சித்தன் சொல்
ஐந்தினோ டைந்து வல்லார்க் கல்ல வில்லையே"[40]

என்றும் குறிப்பிடுகின்றார்.

**ஆண்டாள் :** ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியில் மூன்று பதிகங்களே பதினொரு பாடல்களாலானவை. அவை 4ஆம், 5ஆம், 6ஆம் பதிகங்களாகும். ஏனையவை பத்துப்பாடல்களாலமைக்கப்பட்டுள்ளன. பதினொரு பாடலானவற்றில் இறுதிப்பாடல்களில் 'பாடல் பத்து' என்பதே குறிப்பிடப்பட்டுள்ளது.

**குலசேகரர் :** பெருமாள் திருமொழியில் 1, 3, 4, 7, 8, 9, 10 ஆகிய பதிகங்கள் பதினொரு பாடல்களாலமைய ஏனையவை பத்துப் பாடல்கள் கொண்டுள்ளன. இங்கும் பதினொரு பாடல் கொண்டவற்றில்

"நடை விளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்"[41]

என்ற கருத்து இறுதிப் பாடல்களிற் காணப்படுகிறது.

**திருமங்கையாழ்வார் :** பெரிய திருமொழியில் ஒரு பதிகமும் ஆழ்வாருடைய திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ஆகியனவும் தவிர ஏனையவை யாவும் பத்துப் பாடல்கள் கொண்டனவாகும். பெரிய திருமொழியில் பத்தாம் பத்து ஏழாம் திருமொழியில் பதினான்கு பாடல்களுண்டு. இறுதிப் பாடலும்,

"இன்னிசை மாலைகளீரேழும்
வல்லவர்க்கேது மிடரில்லையே"

என்றே குறிப்பிடுகின்றது. குறுந்தாண்டகமும் நெடுந்தாண்டகமும் முறையே இருபது, முப்பது பாடல்களைக் கொண்டுள்ளன.

**நம்மாழ்வார் :** திருவாய் மொழியில் இரண்டாம் பத்து ஏழாந் திருவாய் மொழி பதின்மூன்று பாடல்களாலாயது. எனினும் அதன் இறுதிப் பாடல்

---

39. **நா.பி,** பெரியாழ்வார், திருமொழி I :10 : 11
40. **மேற்படி,** III : 5 : 11
41. **மேற்படி,** குலசேகராழ்வார், 1:1 1

"பண்ணிய தமிழ் மாலை யாயிரத்
துள்ளிவை பன்னிரண்டும்"

என்று தான் குறிப்பிடுகின்றது. ஏனைய பதிகங்கள் யாவும் சம்பந்தரின் பதிகங்களைப் போன்று பதினொரு பாடல்களாலமைக்கப்பட்டுள்ளன.

**திருப்பாணாழ்வார் :** 'அமலனாதி பிரான்' என்று தொடங்கும் ஒரே யொரு பதிகமே இவ்வாழ்வாரால் பாடப்பட்டுள்ளது. அதுவும் அப்பருடைய பதிகத்தினைப் போன்று முத்திரைக் கவியோ பாடல் எண்ணிக்கை கூறுவதோ இன்றிப் பத்துப் பாடல்களாலமைந்துள்ளது.

**மதுரகவியாழ்வார் :** இவரும் 'கண்ணினுண் சிறுத்தாம்பு' என்று தொடங்கும் ஒரேயொரு பதிகமே பாடியுள்ளார். அது சம்பந்தருடைய பதிகத்தினைப் போன்று முத்திரைக் கவியுடையதாய் பதினொரு பாடல் களாலமைக்கப்பட்டுள்ளது.

இனி, மேற்குறிப்பிட்ட அடியார்களுடைய பதிகங்களிடையே காணப்படும் பண்புகளையும், அவற்றின் துணைக்கொண்டு, பதிக வடிவத்தினுடைய வளர்ச்சியையும் ஆராய்வோம். காரைக்காலம்மையார் பதிக வடிவத்தைத் தோற்றுவிக்க, ஒரே காலத்தில் வாழ்ந்த சம்பந்தரும் அப்பரும் அதனைத் தம் நோக்கத்திற்கேற்ப நன்கு பயன்படுத்தினர். இவர்களுக்குப் பின் வந்த அடியார்கள் யாவரும் இவ்விருவரும் பதிக வடிவத்தைக் கையாண்ட முறையையே பின்பற்றினர். காரைக்காலம்மையார் பதினொரு பாடல்கள் கொண்ட பதிக வடிவத்தை அமைக்கச் சம்பந்தர் அதனையே பெரும்பாலும் கைக்கொண்டார். அப்பர் பத்துப்பாடல்களே அமைத்தார். ஆனால் இரு வரும் பன்னிரண்டு பாடல்கள் வரையுமுள்ள சில பதிகங்களைப் பாடி யுள்ளனர். அப்பருடைய பதிகங்கள் முத்திரைக் கவியின்றிப் பெரும்பாலும் பத்துப் பாடல்களால் அமைந்துள்ளதை நோக்கிய வி. சோதிமுத்து அம்மை யாரும் சம்பந்தரும் தம்முடைய பதிகங்களில் இடம் பெறும் பத்துக்கு மேற் பட்ட இறுதிப் பாடல்களைப் பாடவில்லை எனக் கருத்துத் தெரிவித் துள்ளார்.[42] அவர் சம்பந்தருடைய இறுதிப் பாடல்கள் அவராற் பாடவில்லை என்பதற்குப் பின்வரும் தடைகளைக் கூறுவார்:-

1. சம்பந்தர் தம்மைக் 'காழியர்கோன்', 'தமிழ் ஞான', 'இசை ஞான' என்று தற்புகழ்ச்சியாகக் கூறமாட்டார். அத்துடன் அவருடைய பெயர் படர்க்கையில் அச்செய்யுட்களிலே இடம் பெறுவதால் அவை வேறு யாராலோ பாடப்பட்டிருக்க வேண்டும்.

2. பாடலிவை பத்தும் என்று திருக்கடைக் காப்பில் நூற்றுக்கு மேற் பட்ட இடங்களில் குறிக்கப் பெற்றிருப்பதால் பதினொராம் பன்னிரண்டாம் பாடல்களைப் பாடியவர், முதல் பத்துப் பாடல்களைப் பாடியவர் அல்லர் என்பது தெளிவாம்.

---

42. சோதிமுத்து, ப. 'சம்பந்தன் தன்னைப்பாடினான் என்றதின் ஆராய்ச்சி' **கணேசையர் நினைவுமலர்,** ப. 223-33.

3. பதிகத்திலுள்ள முதற் பத்துப் பாக்களுக்கும் திருக்கடைக்காப்புச் செய்யுள்களுக்கும் செய்யுள் யாப்பிலும் வேறுபாடு காணப்படுகின்றது.

4. பதிகத்தில் தன்மை ஒருமை பயின்று வந்திருக்கத் திருக்கடைக் காப்பில் தன்மைப் பன்மையே வழங்கப் பெற்றிருக்கின்றது.

5. "மந்த மாம்பொழில் சூழ்மங்க லக்குடி மன்னிய
எந்தை யையெழி லார்பொழிற் காழியர் காவலன்
சிந்தை செய்தபடி சேர்ந்திடு ஞானசம்பந்தன் சொல்
முந்தி யேத்தவல் லாரிமை யோர் முதலாவரே"

என்ற செய்யுளில் 'எந்தையை' என்ற சொல் ஞானசம்பந்தரினின்றும் அச் செய்யுளை ஆக்கியோனைப் பிரித்துக் காட்டுகின்றது.

இனி, சோதிமுத்தினுடைய மேற்காட்டிய தடைகளை ஆராய்ந்து அவற்றிற்கு விடை காண்போம்.

முதலாவது தடையிலுள்ள தற்புகழ்ச்சிக் குற்றத்தினை முதலில் ஆராய்வோம். சம்பந்தருடைய பதிகங்கள் யாவற்றினையும ஆராய்பவர்கள் அவற்றிடையேயுள்ள ஒரு பொதுப் பண்பினைக் கண்டுகொள்வர். அவருடைய ஒவ்வொரு பதிகத்திலும் நான்கு விடயங்கள் இடம்பெறும். அவை இராவணன் கைலை மலையை அசைத்துச்சிவபிரானால் தண்டிக்கப்பட்டமை, திருமாலும் பிரமனும் சிவனின் அடிமுடி தேடி அடையாமை, சமண பௌத்தரைக் கண்டித்தல், முத்திரைக் கவி என்ற வகையில் அமைந்துள்ளன. பதினொரு பாடல்கள் கொண்ட பதிகங்களில் அவை முறையே எட்டாம், ஒன்பதாம் பத்தாம், பதினோராம் பாடல்களிலே அமைந்துள்ளன. பன்னிரண்டு பாடல்கள் கொண்ட பதிகங்களிலே அவை முறையே ஒன்பதாம், பத்தாம், பதினோராம், பன்னிரண்டாம் பாடல்களிலே அமைந்துள்ளன, பத்துப் பாடல்கள் கொண்டதாகச் சம்பந்தராற் பாடப்பட்டுள்ள ஒரேயொரு பதிகமாகிய 295ஆம் பதிகத்திலும் எட்டாவது பாடலிலேயே இராவணனைத் தண்டித்தல் அடிமுடி தேடல் ஆகிய இரு விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.[43] இத்தகைய ஒருமைப்பாட்டுடன் சம்பந்தருடைய பதிகங்கள் அமைந்திருப்பதை நோக்குமிடத்து அவர் ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தமது பதிகங்களை அமைத்துள்ளாரென்ற முடிபுக்கு வரலாம். அந்நோக்கம் அவர் காலத்துச் சூழ்நிலையாலேயே உருவாகியதெனலாம்.

சம்பந்தர் வாழ்ந்த தமிழகத்திலே மக்களும் மன்னர்களும் சமண பௌத்த மதத்தினைத் தழுவியவர்களாயிருந்தனர். இச் சூழ்நிலையிலே சைவ சமயத்தினைத் தழைத்தோங்கச் செய்வதற்கு முனைந்தார் சம்பந்தர். சிவனின் அருட்டிறனை உணராத மன்னர்களுக்கு இலங்கை வேந்தனாம் இராவணன் கதையை நினைப்பூட்டியும், சிவனே முழுமுதற் கடவுள் என்பதைக் காட்ட அடிமுடி தேடிய கதையை அமைத்தும், பிற சமயிகளாகிய சமண பௌத்தருடைய கொள்கைகள் ஏற்கக் கூடியனவல்ல என்பதை அடுத்துக்கூறியும்

43. திருஞா., III : 295 : 8

சைவசமயமே சிறந்த சமயமென்றும் நிலைநாட்ட முயன்றுள்ளார். இம் முயற்சியிலே அவருக்குச் சில தடைகளிருந்தன. ஒன்று மதுரையிலே தமிழ்ச் சங்கம் அமைத்தும், தமிழ் நூல்கள் பல ஆக்கியும், கல்விதானம் செய்தும் பல் வேறு வகையிலே தமிழ்த் தொண்டாற்றினார் சமணர். இவ்வாறு தமிழ்த் தொண்டாற்றிய சமண பௌத்தர்களுடைய கொள்கைகளை மனதிற் கொண்ட தமிழ் மக்கள் மத்தியில் அக்கொள்கைகளைக் கண்டிக்கவும் சைவ சமயத்தை நிலை நிறுத்தவும் முயலும் சம்பந்தருக்கும் தமிழுக் கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியது அவசியமாயிற்று. ஆகவே அவர் தம்மை "நண்ணிய செந்தமிழ் ஞானசம்பந்தன்" என்றும், "நாடவல்ல தமிழ் ஞான சம்பந்தன்" என்றும் "நற்றமிழ் ஞானசம்பந்தன்" என்றும் "முத்தமிழ் நான் மறை ஞானசம்பந்தன்" என்றும் "தமிழ் விரகன்" என்றும் பல்வேறு வகை யில் தம்மைத் தமிழுடன் தொடர்புபடுத்திப் பாடவேண்டியது அவசிய மாயிற்று.

இரண்டாவதாக, அவருக்கிருந்த தடை அவருடைய வயதாகும்.அவரோ வயதில் இளையவர். பல்லவர் காலப் பக்தி இயக்கத்தினையே முன்னின்று நடத்திய அவர் மக்களுடைய மனத்திலேயிருந்து சமண பௌத்தக் கொள்கை களை அகற்றி, சைவநெறிகளைப் போதிப்பதற்கு வல்லவரோவென்று மக்கள் ஐயுறுவதற்கு இடமுண்டு. பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரே அவர் பாலியத்தை எண்ணி ஐயுறுகிறாரென்றால்[44] சாதாரண மக்களைப் பற்றிப் பேசவேண்டியதில்லை. ஆகவே தம்முடைய திறமைகள் பலவற்றை வெளிப் படையாக எடுத்துக்கூற வேண்டிய தேவையேற்பட்டது. அதனால் அவர் தம்மை "நண்ணிய கீர்த்தி நலங்கொள் கேள்வி நான்மறை ஞானசம்பந்தன்" என்றும், "கலைஞான சம்பந்தன்" என்றும், "ஞானத்துயர் சம்பந்தன்" என்றும் "நல்ல கேள்வி ஞானசம்பந்தன்" என்றும், "மறைகொள் வல்ல வணிகொள் சம்பந்தன்" என்றும் எடுத்துக்கூற வேண்டியதாயிற்று. ஆகவே சம்பந்தர் தன்னைப் பாடியது தன்னைப் புகழ்வதற்கல்ல, தன் நோக்கம் நிறைவேறவே என்பதை இதுகாறும் கூறியவற்றால் தெளிவாயறியலாம்.

இனி, சம்பந்தருடைய பெயர் முத்திரைக் கவியிற் படர்க்கையிற் குறிக்கப் பட்டிருப்பது பற்றி ஆராய்வோம். உதாரணமாக, "அணிகொள் சம்பந்த னுரை" என்று ஒரு முத்திரைக் கவியில் அமைந்திருப்பதைத் தன்மை ஒருமை யிற் கூறுவதென்றால் "அணிகொள் சம்பந்தனே னுரை" என்று அமைய வேண்டும். 'சம்பந்தனே னுரை' என்னுஞ் சொற்றொடரில் 'ஏன்' என்ற தன்மை ஒருமை விகுதி தொக்குவரின் 'சம்பந்தன் உரை' என்று அமையும். அதனை நாம் படர்க்கையிற் கூறப்பட்டுள்ளது என்று கூறவேண்டியதில்லை. ஆகவே, இதுகாறும் கூறியவற்றால் சோதிமுத்துவினுடைய முதலாவது தடை நீங்குவதைக் காணலாம்.

இரண்டாவது தடை, நூற்றுக்கு மேற்பட்ட பதிகங்களில் 'பாடலிவை பத்தும்' என்று குறிப்பிடுவதால் பதினோராம், பன்னிரண்டாம் பாடல்கள்

---

44. திருஞா., III : 297 : 1

சம்பந்தராற் பாடப்பட்டனவல்ல என்பதாம். முதலாவது தடைக்கு விடை காணும் போது சம்பந்தர் பதிகங்களிலுள்ள பொதுத் தன்மைபற்றிக் கூறினோம். இவருடைய கருத்தின்படி பன்னிரண்டு பாடல்கள் கொண்ட பதிகங்களெல்லாம் பத்துப் பாடல்கள் கொண்டன என்பதேயாகும். அப்படியாயின் அப்பதிகங்களில் நாம் குறிப்பிட்ட பொதுத்தன்மைக்குரிய விடயங்கள் நான்கும் அடங்காமற் போய்விடும். ஏனைய பதிகங்களையெல்லாம் அம்முறை தவறாது அமைத்து வந்த சம்பந்தர் இப்பதிகங்களைக் குறைப் பதிகங்களாக அமைத்திருப்பார் எனக் கூறமுடியாது. இன்னும் சோதிமுத்து தன்னுடைய கட்டுரையின் ஆரம்பத்தில் "சுந்தரர் தேவாரங்களை முடித்த பின்னர், அப்பர் பதிகங்களைப் படிக்கத் தொடங்கினேன். அப்பர் பதிகங்களிலுள்ள இறுதிச் செய்யுள்களில் எவ்விதமான கேள்விக்கோ ஐயத்துக்கோ இடமில்லையென்பதறிந்தேன்...... ![45] என்று கூறியுள்ளார். ஆனால் அப்பருடைய நான்காந்திருமுறையில் 61ஆம் பதிகத்தில் பன்னிரண்டு பாடல்களுள்ளன. ஆனால், அப்பதிகத்தின் இறுதிப் பாடலில் "உரைகள் பத்தாலுரைப்பார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியாயின் இப்பதிகத்தில் அப்பர் பத்துப் பாடல்கள் மட்டுந்தான் பாடினார் என்று கொள்ளலாமா? சோதிமுத்துவுக்கு இதில் உடன்பாடேயில்லை. அப்படியென்றால் 'பாடலிவை பத்தும்' என்று சம்பந்தர் பதிக இறுதிச் செய்யுளில் வருவதால், பதினோராம் பன்னிரண்டாம் பாடல்களை அவர் பாடவில்லை என்று எப்படிக் கூறலாம்?

ஒரு பதிகத்தின் முதற் பத்துப் பாக்களுக்கும் திருக்கடைக்காப்புச் செய்யுளுக்கும் பொருளிலும் யாப்பிலும் வேறுபாடு காணப்படுகின்றது என்பது மூன்றாவது தடையாகும். பொருளிலுள்ள வேறுபாட்டிற்கு அவர் மூன்றாந் திருமுறையில் 262-264 ஆகிய பதிகங்களை உதாரணங்களாக அடிக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் உதாரணத்துக்காக 264ஆம் பதிகத்தை எடுத்து ஆராய்வாம். அதில் முதலாவது பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

"கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தனையார் தொழ
நல்கு மாறருணம்பனே"

இப்பாடலிலே அமைந்துள்ள இறுதி இரண்டு அடிகளும் அப்படியே ஏனைய ஒன்பது பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. ஆனால் பதினோராவதுபாடல்:-

"கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுண் ஞான சம்மந்தன்
இன்று சொன்மாலை கொண்டேத்தவல்லார் போய்
என்றும் வானவ ரோடிருப்பாரே"

என்று அமைந்துள்ளது. ஏனைய பத்துப்பாக்களுக்கும் இதற்கும் யாப்பில் எவ்வித வேறுபாடுமில்லை. ஆனால் அவற்றில் வரும் இறுதியிரண்டடிகளும்

45. சோதிமுத்து, ப. முன் குறிப்பிடப்பட்டது, பக். 224.

இதிலே இல்லை. இது பொருளில் வேறுபாட்டைக் காட்டுகின்றதென சோதிமுத்து கருதுகின்றார். இவ்வேறுபாடு பதிகவடிவ அமைப்புக்குத் தவிர்க்கமுடியாததொன்றாகும். பதிகத்தில் முதற் பத்துப் பாடல்களும் கலிப்பா உறுப்பாகிய தாழிசை போல் இறைவனை வர்ணித்துவர இறுதிப் பாடல் சுரிதகத்தினைப் போல், அப்பத்துப் பாடல்களின் பயனைக் கூறுவதாக அமையும். ஆகவே 264ஆம் பதிகத்தில் முதற் பத்துப் பாடல்களிற் குறிப்பிட்ட பொருளின் பயனைப் பதினோராவது பாடல் குறிப்பிடுவதால் அது ஏனைய பாடல்களினின்று வேறுபட்டதாகத்தான் அமைய வேண்டும்.

இன்னும், செய்யுள் யாப்பு வேறுபாட்டிற்குச் சோதிமுத்து 366ஆம் பதிகத்தினை உதாரணமாகக் காட்டியுள்ளார். இதில் முதல் பத்துப் பாடல் களும் பின்வரும் அமைப்பிலுள்ளன.

“வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே”

இப்பாடலிலுள்ள இறுதி ஈரடிகளும் அப்படியே ஏனைய பாடல்களிலும் வந்தமைந்துள்ளன. ஆனால் பதினோராவது பாடலோ:

“கூடலாலவாய்க் கோனை விடைகொண்டு
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தவிப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே”

என்றே அமைந்துள்ளது. இது யாப்பில் வேறுபட்டுள்ளது என்பது உண்மையே. ஆனால் இது சம்பந்தராற் பாடப்படவில்லை என்று கொள் வதற்கு ஆதாரமெதுவுமில்லை. முத்திரைக்கவி பாடும் சம்பந்தர் முதற் பத்துப் பாடல்களிலும் வரும் இறுதியீரடிகளையும் இதில் அமைத்தால் அது பொருளற்றதாகிவிடும். ஆகவே அவர் அவ்விரு அடிகளையும் நீக்கிவிட்டு, ஏனைய பாடல்களில் பொருள் உடைத்தாய் வரும் நான்கடிகள் கொண்ட செய்யுளமைப்பினை இங்கு அமைத்துள்ளார் என்று கொள்ளலாம்.

மூன்று தடைகளுக்கும் மேற்காட்டிய விடைகளை நோக்குமிடத்து இறுதி இரண்டு தடைகளும் அவ்வளவு முக்கியமானவையல்ல என்பது பெறப்படும். தன்மை ஒருமையும், தன்மைப் பன்மையும் மயங்கி வரப் பாடுகின்ற வழக்கு பல்லவர்காலப் பாசுரங்களிடையே காணப்படுகிறது. “மந்த மாம் பொழில்...” என்ற பதிகத்தில் “எந்தையை” என்ற சொல் ஞானசம்பந் தனின்றும் ஆக்கியோனைப் பிரித்துக்காட்டுகின்றதென்ற கூற்று ஆதார மற்றதாகும். ஆகவே, இதுகாறும் கூறியவற்றால் சம்பந்தர் பாடிய திருக் கடைக்காப்புகள் அவராலேயே பாடப்பட்டன என்பதே தகும்.

சம்பந்தருடைய திருப்பதிகங்களில் இரண்டு சிறப்புப் பண்புகள் உண்டு. ஒன்று தனிப்பட்டவரை முன்னிலையிற் பாடியமை. மற்றையது இரண்டு யாப்புக்களால் ஒரு பதிகம் அமைத்தமையாகும். பல்லவர் காலப் பக்திப் பாடல்கள் பாடியவர்களெல்லாம் இறைவனை முன்னிலைப் படுத்தி அல்லது படர்க்கையிற் பாடினார். ஆனால் மனித குலத்தைச் சேர்ந்தவராகிய பாண்டி மாதேவியை "மானினேர்விழி மாதராய்" என்று முன்னிலைப்படுத்திப் பாடியவர் சம்பந்தர் ஒருவரேயாம்: ஆகவே பதிக வடிவம் தனிப்பட்டவரையும் முன்னிலைப்படுத்திப் பாடுவதற்குப் பயன்பட்டது எனச் சம்பந்தருடைய 297ஆம் பதிகத்தினைச் சான்று காட்டலாம். பல்லவர் காலப் பதிக வடிவங்கள் பெரும்பாலும் ஒரே யாப்பிலேயே அமைந்துள்ளன. ஆனால் சம்பந்தருடைய 312 ஆம் பதிகம் கலித்துறை கலிவிருத்தமாகிய இரு யாப்புக்களாலமைந்துள்ளன. பதிகத்தின் முதன்மூன்று பாடல்களும் கலித்துறையிலமைய, ஏனைய ஒன்பது பாடல்களும் கலிவிருத்தத்திலமைந்துள்ளன.

திருநாவுக்கரசர் சம்பந்தரைப் போல பதினொரு பாடல்கள் கொண்ட பதிக வடிவம் அமைக்கவில்லை. அவர் பெரும்பாலும் பத்துப் பாடல்களே பாடினார். அத்துடன் சம்பந்தரைப் போல திருக்கடைக்காப்புப் பாடியது மில்லை. சம்பந்தர் திருக்கடைக்காப்புப் பாடியதற்குரிய காரணங்களை முன்பு விளக்கினோம். அப்பர் அவ்வாறு பாடாததற்குரிய காரணங்களை இனி ஆராய்வோம். அப்பர் சம்பந்தரைவிட வயதிலே மூத்தவர். பழுத்த அனுபவசாலியாயமைந்தவர். சம்பந்தர் சிறுவராக இருந்த குதூகலத்துடன் பாடியது போன்று அப்பராற் பாடமுடியவில்லை. அவருடைய பாடல்கள் பெரும்பாலும் துன்ப நோக்குடையனவாயமைந்துள்ளன. இத் துன்ப நோக்குக்கும் பல காரணங்களுள. முதலாவது அவருடைய தங்கையாரின் கணவர் மணம் முடித்தவுடனே இறந்தமை; இரண்டாவது அவர் சமணத்திற்குச் சேர்ந்து பின்பு சைவ சமயத்தைச் சேர்ந்ததால் இறைவன் தன்னை மன்னிப்பாரோ என்ற எண்ணம்; மூன்றாவது சமணசமயத்திலிருந்த வேளை மேற்கொண்ட தீவிர நோன்பு, உடலை ஒறுத்தல் ஆகியவற்றாற் பிற்காலத்தில் ஏற்பட்ட மூப்புத்துன்பம் ஆகியனவாகும். இக்காரணங்களாற் சம்பந்தர் உரிமையுடன் தன்னைப் பற்றிப் பாடுவது போல இவர் பாட விரும்பியிருக்கமாட்டார். அத்துடன் அப்பருடைய அறிவிலோ, அனுபவத்திலோ எவர்க்கும் ஐயமேற்படும் சூழ்நிலையே இல்லை. காரைக்காலம்மையார் பதினொரு பாடல்கள் பாடினாலும் "பத்துப் பாடல்களே" என்று குறிப்பிட்டுள்ளதையும், அவையே இறைவனைப் பாடுகின்றன என்பதனையும் நோக்கிய அப்பர் இறைவனைப் பற்றிப் பாடுவதே தனது கடன் என்று எண்ணிப் பத்துப் பாடல்களை மட்டுமே பாடியிருக்கலாம். சமண சமயத்திற் சேர்ந்த குற்றத்தினை எண்ணித் தன்னைத் தாழ்வாக நினைத்து இறைவனைப் பாடும் பாடல்களின் பயனைத் தான் கூறுவதற்கு அருகதையுடையவனோ என்று எண்ணி அவர் திருக்கடைக்காப்புப் பாடாமல் விட்டிருக்கலாம். அவருக்கிருந்த இம்மனோ நிலையை அவருடைய பெரும்பான்மையான பதிகங்களுக்குள்ளே காணப்படும் ஒரு பொது அம்சம் விளக்குகிறது. அப்பொது அம்சமாவது, ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப் பாடலிலும் இராவணனைப் பற்றிக் குறிப்பிடுவதாகும். இராவணன் திருக்கைலாயமலையை அசைக்கமுயன்றான்; அதற்குத் தகுந்த

தண்டனை பெற்றான். இவரும் சிவனை மதியாது சமணசமயத்திற் சேர்ந் தார். தகுந்த தண்டனையாகச் சூலை நோய் பெற்றார். ஆகவே தன் குற்ற மனப்பான்மையைப் புலப்படுத்துவதற்கே இக்கதையினை ஒவ்வொரு பதிகத் திலும் குறிப்பிட்டுள்ளார்.

அப்பர் பத்துப் பாடல்கள் கொண்ட பதிகங்களைப் பெரும்பான்மை யாகப் பாடியபோதிலும் காரைக்காலம்மையார் பதினொரு பாடல்களிலும் பதிக வடிவம் அமைத்துள்ள மரபினைக் கைவிட்டுவிடாமல், அதனைப் பின் பற்றியும் சில பதிகங்களைப் பாடியுள்ளார்.

அப்பர், சம்பந்தருக்குப் பின்பு பல்லவர் காலத்திலே பதிகங்களைப்பாடிய அடியார்கள் பெரும்பாலானோர் அப்பரைப் பின்பற்றிப் பெரும்பாலும் பத்துப் பாடல்களே அமைத்தனர். ஆனால் அவர்கள் அப்பரைப் போல திருக்கடைக்காப்புப் பாடாமல் விட்டிலர். சுந்தரர், பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரர், திருமங்கையாழ்வார் ஆகியோருடைய பதிகங்களை ஆராயின் அவற்றுட் பெரும்பாலானவை பத்துப் பாடல்களாலமைந்துள்ளன. பத்தாவது பாடல் திருக்கடைக்காப்பாக அமைந்து முடிவுறுகின்றது. ஆகவே அப்பருடைய பத்துப் பாடல் பாடும் பண்பும், காரைக்காலம்மையார் சம்பந்தர் ஆகியோருடைய முத்திரைக் கவிபாடும் பண்பும் சேர்ந்து பல்லவர் காலத்திலே பதிக இலக்கிய வடிவம் வளர்ச்சியடைந்துள்ளது என்று கொள்ளலாம்.

பதினொரு பாடல்கள் கொண்டதாகப் பல்லவர் காலத்திலே தோன்றிய பதிக வடிவம் அக்காலத்திலேயே முப்பது பாடல்கள் கொண்ட வடிவமாக வளர்ச்சியடைந்துள்ளது. காரைக்காலம்மையாருடைய பதினொரு பாடற் பதிக வடிவம் சம்பந்தரில் பன்னிரண்டு பாடலுடையதாயிற்று. பெரியாழ் வாரில் பதின்மூன்றுடையதாகி, திருமங்கையாழ்வாரில் பதினான்கும் இருபதும் உடையதாகி, பெரியாழ்வாரில் இருபத்தொன்றுடையதாகித் திருமங்கையாழ்வாரில் முப்பதுடையதாயிற்று. ஆனால் பன்னிரு பாட்டியல் காரரோ பத்தும் இருபதும் ஆகிய பாடல்கள் கொண்டதாகவே பதிகம் என்னும் பிரபந்தம் அமையுமென இலக்கணம் கூறியுள்ளார். இவர் இவ்வாறு இலக்கணம் வகுத்ததற்குரிய காரணம் தெளிவாக விளங்கவில்லை. இவ் விலக்கணச் சூத்திரத்திற்கு உரையெழுதியவரும், அதன் பொருள் தெளிவா யில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பாட்டியல்காரர் பதிகம் என்னும் பிரபந்தம் ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வெண்பா ஆகியவற்றினாலேயே பாடப்படும் எனக்குறிப்பிட்டுள்ளார். ஆனால், பல்லவர் காலத்திலே வெண்பா தவிர்த்த எல்லாப் பாவினங்களிலும் பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களில் வெண்பாவினாலமைந்த பத்துப் பத்துச் செய்யுட்களாயமைந்துள்ளவற்றைப் பதிகம் என்று பன்னிருபாட்டியலார் கருதினாரோ தெரியவில்லை.

இனி, காரைக்காலம்மையாருடைய பதிக அமைப்பினைப் பின்பற்றிப் பல்லவர் காலப் பிற்பகுதியில் நம்மாழ்வாரும், மதுரகவியாழ்வாரும் பதினொரு பாடல்கள் கொண்ட பதிகங்களைப் பாடியுள்ளனர். நம்மாழ் வாருடைய பதிகங்களிற் பதிக வடிவத்தின் வளர்ச்சி நிலையை நன்கு காணக்

கூடியதாயுள்ளது. நூறு பதிகங்களைக் கொண்டு விளங்கும் திருவாய்மொழியில், அவர் தாம் பெற்ற தெய்வானுபவங்களையெல்லாம் முறைப்படுத்திப் படிப்படியாக அந்தாதித் தொடையிற் கூறிச்செல்கின்றனர். பத்துப் பதிகங்கள்கொண்ட ஒவ்வொரு பத்தும் நாடகத்தின் ஒவ்வொரு அங்கம் போலமைந்துள்ளது. அப்பத்திலுள்ள ஒவ்வொரு பதிகமும் தன்னளவிற் பூரணத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது. உதாரணமாக 6ஆம் பத்தில் 4ஆம் திருவாய்மொழிப் பதிகத்தை எடுத்துக் கொண்டால் அதில் உணர்ச்சி படிப் படியாக ஏறிச்சென்று எட்டாவது பாடலிலே உச்சநிலையடைந்து ஒன்பதாம் பாடலில் குறைந்து பத்தாம் பாடலில் சமநிலையடைகிறது. பதினோராவது பாடல் முத்திரைக் கவியாக அமைகின்றது. ஆறாவது பாடலில் வையமளந்த மாயவனின் மாயங்களை,

"பகலி ராப்பரவப்பெற் றேனெனக் கென்ன மனப்பரிப்பே"

என்று கூறும் நாயகியின் உணர்ச்சி மேலிட ஏழாவது பாடலில் துழாய்முடி மாலையானின் மாயங்களை

"நினைக்கும் நெஞ்சுடையேன்..."

என்று கூறுகிறாள். அவன் மாயங்களிலிருந்த ஈடுபாடு அதிகரிக்கின்றது. மகிழ்ச்சி பொங்குகிறது. உணர்ச்சி பெருகுகின்றது. அதன் பலனாக எட்டாவது பாடலில்,

"காணும் நெஞ்சுடையேன்......"

என்று கூறுகிறாள். நினைக்கின்ற நெஞ்சு காணக்கூடியதாயமைந்தால் அதைவிட வேறு என்ன வேண்டும்? நெஞ்சு காணவேண்டுமென முதற் பாடலிலிருந்து துடித்துக் கொண்டிருந்தது. எட்டாவது பாடலிலே காணத் தொடங்கிவிட்டது. ஆகவே அக்காட்சியும் அதனாலேற்பட்ட அனுபவ பூரணத்துவமும் ஒன்பதாம் பத்தாம் பாடல்களாகின்றன. 'வலக்கையாழி இடக்கைச் சங்க' முடையவனாக நெஞ்சு காண நாக்கு அசைந்து அவனை ஏத்துகின்றதாக ஒன்பதாம் பாடலமைய, பத்தாம் பாடல்,

"விண்மி சைத்தன தாமமேபுக மேவிய சோதிதன்றாள்
நண்ணி நான்வணங்கப் பெற் றேனெனக் கார்பிறர் நாயகரே"

என்று பூரணத்துவம் அடைகிறது. இவ்வாறு ஒவ்வொரு பதிகமும் பூரணத் துவமும் அடைந்து நிற்பதை நோக்குமிடத்து, சம்பந்தர் கையாண்ட பதிக வடிவம் வளர்ச்சி நிலையிலிருந்து, நம்மாழ்வாரில் பூரண வளர்ச்சியடைந் துள்ளது என்பதை அறியலாம்.

அப்பருடைய பதிக அமைப்பினைப் பின்பற்றித் திருப்பாணாழ்வாரும் மாணிக்க வாசகரும் பதிகங்கள் பாடியுள்ளனர். முத்திரைக்கவியின்றிப் பத்துப் பாடல்கள் கொண்ட இவர்களுடைய பதிகங்கள் நம்மாழ்வாருடைய பதிகங்கள் போல் பூரணத்துவம் பெற்றுள்ளன என்று கூறலாம். திருப் பாணாழ்வார் சிறீரங்கப் பெருமானின் பாதத்திலிருந்து கேசம் வரை ஒவ்

வொரு அங்கமாகப் பார்த்துக்கொண்டு வருகிறார். அது எட்டுப்பாடல்களிற் கூறப்படுகின்றது.[46] அங்கம் அங்கமாகப் பார்த்த ஆழ்வாருக்கு அரங்கன் முழுமையாகக் காட்சியளிக்கிறான். அது ஒன்பதாம் பாடலாக அமைகின்றது.[47] அக்காட்சியைக் கண்ட திருப்தியும் அனுபவ பூரணத்துவமாகப் பத்தாவது பாடல் அமைகிறது.[48] இவ்வாறு தான் பெற்ற அனுபவத்தைப் படிப்படியாகக் கூறிச்சென்று அதனை முற்றாகப்புலப்படுத்தும் திருப்பாணாழ்வாரின் பதிகத்தினைப் போலப் பூரணத்துவம் பெற்ற பதிகங்கள் பல்லவர் காலப் பாசுரங்களிற் சிலவே உள. மாணிக்கவாசகருடைய ஆசைப்பத்து முதலாய பதிகங்களும் இச்சிலவற்றுள் அடங்கும்.

---

46. **நா. பி.** திருப்பாணாழ்வார், ''அமலனாதிபிரான்'' செய். 1-8.
''கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே''
''அரைச் சிவந்த ஆடையின் மேற்சென்ற தாமென் சிந்தனையே''
''உந்தி மேலதன் றோஅடி யேனுள்ளத் தின்னுயிரே''
''திருவயிற் றுதர பந்தமென் னுள்ளத்துள்நின் றுலாவு கின்றதே''
''திருவார மார்பதன் றோஅடி யேனை ஆட்கொண்டதே''
''உண்ட கண்டங்கண்டீரடியேனை யுய்யக் கொண்டதே''
''செய்யவா யையோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே''
''பெரியவாய கண்க ளென்னைப் பேதைமை செய்தனவே''
47. **மேற்படி**, செய். 9.
48. மேற்படி, செய். 10.
''அண்டர்கோ னணியரங்கன் என்னமு தினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''

# தமிழ் வரலாற்றுக் கதை இலக்கியத்தின் பார்வையும் அமைப்பும்

**நீல பத்மநாபன்**

1. இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பது உண்மையானால் சமூகக்கதை இலக்கியம் (Social fiction), வரலாற்றுக்கதை இலக்கியம் (Historical fiction) இவை இரண்டின் பாகுபாட்டுக்கோடு எங்கே இருக்கிறது? ராஜா ராணி வரலாறு மட்டுமே வரலாற்றுக் கதை இலக்கியம் என்றால், மன்னராட்சி காலத்தில் வாழ்ந்த சமூகத்தைப் பற்றிய படைப்புக்களை எதில் உட்படுத்துவது? நமது சுதந்திரப் போராட்டம் இன்று சரித்திரமாகிவிட்டது. அதைப் பின்னணியாக்கி எழுதப்படும் போது அத்தகைய படைப்புக்களில் ராஜா ராணிகளுக்குப் பதில் தலைவர்கள், அடிமைச் சங்கிலியை அறுத்தெறியக் கிளர்ந்தெழுந்த சமூகத்து ஆயிரமாயிரம் பிரஜைகள் இவர்கள் இடம் பிடித்துக் கொள்வது தவிர்க்க முடியாததல்லவா? இந்தப் படைப்புக்களைச் சமூகக் கதை இலக்கியமாய் கொள்வதா, சரித்திரக் கதை இலக்கியமாய் கூறுவதா?

2. 1775-இல் எழுத்தாணியால் ஏட்டுச்சுவடியில் எழுதப்பட்டு 1895-இல் அச்சில் வெளிவந்த முத்துக்குட்டி ஐயரின் 'வசன சம்பிரதாய கதை', வீரமாமுனிவரின் 'பரமார்த்த குரு கதை' (1822), தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்து எழுதிய 'பஞ்ச தந்திர கதை' (1826), 'ஈசாப்பின் கட்டுக் கதைகள்' (1853), 'மதன காமராஜன் கதை' (1855), 'தமிழறியும் பெருமாள் கதை' (1869) முதலிய தமிழ் கதைப் புத்தகங்கள் சாதாரண நாட்டு மக்களின் இடையில் வாசிக்கப்பட்டு ரசிக்கப்பட்டு வந்ததேயானாலும், இந்திய நாவல்களில் முதலாவது என்ற அந்தஸ்து 1865-இல் வங்க மொழியில் வெளியான பங்கிம் சந்திரரின் 'துர்கேச நந்தினி'க்குத்தான் போய்ச் சேருகிறது. அந்நிய ஆட்சியில் அடிமைப்பட்டு வலிவும் பொலிவும் இழந்து தன்னம்பிக்கை குலைந்து கிடந்த இந்திய மக்களுக்கு எதிர்த்து நிற்கும் ஆத்ம சக்தியை— துணிவை எழுப்ப நமது மண்ணில் முன்னொரு காலத்தில் வாழ்ந்து அபாய காலங்களில் அனாயாசமாய் வீரச்செயல்கள் புரிந்த அசகாயசூரர்களைப் பற்றிய மிகைப்படுத்திய கதைகள் உதவின. இந்தியாவின் இரண்டாவதும், தமிழின் முதலாவதுமான வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் (1879) பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் வெளியாயிற்று. இந் நாவலின் தேசிய மரபு, குடும்ப வாழ்க்கை, மக்களின் நாட்டுப் பழக்க வழக்கங்கள் இவற்றுடன் மேலே குறிப்பிட்டிருக்கும் பழைய தமிழ் புத்தகங்களில் சொல்லப்பட்டிருந்த கதைகள், கர்ண பரம்பரையாக வந்த நாட்டுக் கதைகள் இவைகளும் எடுத்தாளப் பட்டிருந்ததினால்தானோ என்னவோ சமூக நாவலாக இது கருதப்படுகிறது. எட்டு ஆண்டுகளுக்குப்பின்—1887இல்

வெளியான வேதநாயகம் பிள்ளையே எழுதிய 'சுகுணசுந்தரி' நாவல் புவன சேகரம் நகரத்து அரசன் நராதிபனின் மகள் சுகுணசுந்தரியின் கதையைச் சொல்கிறதேயானாலும் எந்த வரலாற்றின் அடிப்படையிலும் எழுதப்பட்ட நாவல் அல்ல இது. முழுக்க முழுக்க ரசமான கற்பனை (Romance).

3. 1885—இல் வெளியான ஈழத்து எழுத்தாளர் சித்திலெவ்வை மரைக்காரின் 'அசன்பே சரித்திரம்', 1893 - இல் வெளியான சு. வை. குருசாமி சர்மாவின் 'பிரேம கலாவத்யம்' இந்த இரண்டு நாவல்களுக்குப் பிறகு 1895-இல் வெளியான தமிழின் ஐந்தாவது நாவல் தி.த. சரவணமுத்துப் பிள்ளையின் ''மோகனாங்கி'' தான் தமிழில் வெளியான முதல் வரலாற்று நாவலாய் இன்று கணிக்கப்படுகிறது. காரணம் நாவலாசிரியர் வாழ்ந்த கால கட்டத்து நடப்பியலை எல்லாம் கதை நடக்கும் சென்ற காலத்துக்கும் எடுத்துச்செல்லும் வீண் கற்பனைகளைச் சாராமல், நிஜவரலாற்று நிகழ்ச்சிகளைச் சரித்திரப் பிரக்ஞையுடன் இந்நாவலில் கையாண்டுள்ளார். பதினேழாம் நூற்றாண்டில், தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கரின் மகள் மோகனாங்கியை விரும்பி அவளை மணம் செய்ய, திருச்சி மன்னன் சொக்கநாத நாயக்கன் தன் மந்திரியைத் தூது அனுப்புகிறான். விஜயராகவ நாயக்கரின் இரண்டாவது மனைவியின் தம்பி அழகிரிக்கு மோகனாங்கியைத் திருமணம் செய்ய திட்டம் இருந்ததால் மந்திரியை அவமதித்து திருப்பி அனுப்பிவிடுகிறான். சொக்கநாத நாயக்கர் போர் தொடுத்து விஜயராகவ நாயக்கரை வென்று மோகனாங்கியைத் திருமணம் செய்கிறான். இந்நாவலில் மோகனாங்கி என்ற பெயர் மட்டுமே கற்பனை. இந்த பாத்திரம் தான் மதுரைக்குச் சரித்திரத்தில் பெருமை தேடித்தந்த ராணி மங்கம்மாள். ஏனைய கதாபாத்திரங்களுக்கு எல்லாம் வரலாற்றில் உள்ள நிஜப்பெயர்களே இடப்பட்டிருந்தன. இதை எழுதிய சரவணமுத்துப்பிள்ளை இலங்கை திரிகோணமலையைச் சேர்ந்தவர் ஆனாலும் சென்னையில் பிரஸிடன்ஸி காலேஜில் நூலகராய்ப் பணியாற்றியவர். அங்கிருந்து தஞ்சை நாயக்கரின் ஆட்சியைப் பற்றிய நிஜங்களைக் கவனமுடன் திரட்டித்தான் இந்நாவலை அவர் எழுதியிருக்க வேண்டும். 'தட்சிண இந்திய சரித்திரம்' எழுதிய பகடாலு நரசிம்மலு நாயுடு தஞ்சை நாயக்கர் வரலாறு எழுதும்போது தமது வரலாற்றுக்கு ஆதாரமாக இந்நாவலை மேற்கோள் காட்டும் அளவுக்கு இந்த நாவல் நிஜத்தின் அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டிருந்தது. அப்படியென்றால், வரலாற்றுச் செய்தியை அறிந்து கொள்ளவா வரலாற்று நாவலை வாசிக்கிறோம் என்ற கேள்வி இங்கே எழலாம். இல்லாமல் இருக்கலாம். ஆனால் வரலாற்றுச் செய்தி கலை நயத்துடன், கற்பனை வளத்துடன் வரலாற்று நாவலில் கையாளப்பட்டிருக்கவேண்டும் என்பதற்கு எதிர் அபிப்பிராயம் இருக்கமுடியுமென்று தோன்றவில்லை. ஒரு கோணத்தில் பார்க்கப் போனால், சமுதாய நாவலுக்கும் இன்னொரு விதத்தில் இந்த கூற்று பொருந்தும். பத்திரிகைச் செய்திக்கும் (journalism) சமுதாய நாவலுக்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்ந்தால் இது புலனாகும். சமகால சமுதாய வாழ்க்கை ஒரு சமூக நாவலுக்கு எத்தனை உதவுகிறதோ அத்தனைக்கோ, சற்று அதிகமாகவோ வரலாற்று உண்மைகள் வரலாற்று நாவலுக்கு உதவினால், அதை வெறும்

கற்பனை (Romance) என்ற நிலையிலிருந்து மீறி நம்மால் பகுத்துணர்வது எளிது. அண்டப் புளுகுகளை ஆயிரக்கணக்கில் வாரி இறைத்தும் கதை இலக்கியம் செய்யப்பட்டிருக்கிறதேயானாலும் எந்த நல்ல படைப்பும் சூன்யத்திலிருந்து—வெறும் கற்பனையிலிருந்து தோன்றிவிடுவதில்லை.

4. லத்தீன், கிரேக்கம் முதலான உலகப் புராதனச் சிறப்புடைய (Classic) மொழிகளில் கூட தலை நிமிர்ந்து நிற்க தகுதி வாய்ந்த இரண்டு இந்திய மொழிகள் தமிழும் சமஸ்கிருதமும். ஆனால் புராதனச் சிறப்புடைய இம்மொழிகளில் தமிழ் தவிர மற்ற மூன்று மொழிகளும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முந்தியே இறந்த மொழிகளாகி விட்டன. (சமஸ்கிருதத்தைத் தாய் மொழியாக, பேச்சு மொழியாகக் கொண்டவர்கள் இன்று இருக்கிறார் களா?) தமிழின் இன்னொரு தனித்தன்மை அது. இந்தியாவின் ஒரு மாநில மான தமிழ் நாட்டின் மொழி மட்டும் அன்று, இலங்கை, தென்ஆப்பிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் இப்படி வெளிநாடுகளிலும் பரவலாய் பேசுகிற மக்களைக் கொண்டு பிரச்சாரம் கிடைத்த மொழி இது. இக்காரணங்களால் இந்திய மொழிகளில் பழமையின் மகத்துவம் தமிழ் மொழியில் போல் இத்தனைக்கு அதிகமாய் ஆதிக்கம் செலுத்தும் வேறெந்த மொழியும் இருக்க வழியில்லை. தமிழின் சென்றகால பெருமை இன்றும் கதாசிரியர்களையும் வாசகர்களையும் புல்லரிக்க வைத்துக் கொண்டிருக்க இதுவும் ஒரு காரணம் என்று தோன்றுகிறது. எந்த நல்ல கலைப் படைப்பும் சத்தியத்தின் மறு படைப்புத்தான். ஆனால் சத்தியத்தைத் தேடி கண்டுபிடித்து அலசி ஆராயும் நாட்டம் எத்தனைபேர்களிடம் உள்ளது? பொய்யானாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பதைக் கூட தமிழில் வரலாற்றுக் கதை இலக்கியம் பண்ணும் எத்தனை பேர்கள் கடைபிடிக்கிறார்கள்? முன்பு குறிப்பிட்ட தமிழின் முதல் வரலாற்று நாவல் 'மோகனாங்கி'க்குப் பின் வந்தவர்கள் எத்தனை பேர்கள் பார்வை, அமைப்புப் பற்றி சத்திய சந்தமாய் செயல்பட் டார்கள்? வால்டர் ஸ்காட் (Walter scott) மத்தியகால ஐரோப்பிய வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு எழுதிக் குவித்த நாவல்கள், ராபர்ட் கிரேவ்ஸ் (ROBERT GRAVES)தொன்மையான கிரேக்க, ரோம வரலாறுக் களின் அடிப்படையில் எழுதிய நாவல்கள், இத்தனைக்குப் பிறகும் வரலாற்றுக் கதை இலக்கியம் அது தோன்றிய ஆங்கில மொழியில் இலக்கியத் தரமாய் இன்று கணிக்கப்படுகிறதா என்று தெரியவில்லை. நீண்டகால அடிமை வாழ்க்கை தமிழ் மக்களின் வாழ்க்கை, லட்சியம், சிந்தனை, உணர்ச்சி எல்லா வற்றையும் பாதித்திருந்தது என்பது உண்மை. கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்றி மூத்த தமிழ் என்று தமக்குத்தாமே பெருமிதம் கொள்பவன் தமிழன். கிருஸ்து தோன்றுவதற்கு முன்பே தோன்றி இப் போதும் புகழ் மணக்க பூத்துக் குலுங்கும் தொல்காப்பியம் (கி.மு. இரண் டாவது நூற்றாண்டு), திருக்குறள் (கி.மு. நான்காம் நூற்றாண்டு) போன்ற ஆதிநூல்கள், பின் சங்க காலத்தில் படைக்கப்பட்ட அக, புற இலக்கியங்கள், பிறகு புராண இதிகாசங்கள், காப்பியங்கள் இவை களைப் படித்துப் பெருமிதம் கொள்கிறான். இவையெல்லாம் ஏட்டுச் சுவடிகளில் மட்டும் படிந்திருக்கும் வெறும் கற்பனைகள் அல்ல என்பதைச்

சுற்றிலும் நிறைந்திருக்கும் அற்புதச் சிற்பங்களைத் தாங்கிய கற்பாறைகளில் கண் கூடாகக் காண்கிறான். கதைகள் ஆயிரம் சொல்லும் கற்கள், இதிகாசங்கள் விளம்பும் சிற்பங்கள், பல்லவர்கால ரதக்கோயில்கள், சோழர்கால கற்றளிகள், குன்றில் குடைந்தெடுத்த கோயில்கள், கோயில்களின் உள்ளே நிறைந்திருக்கும் சுவர் ஓவியங்கள், செப்புச்சிலைகள், கோயிலின் மேலே விமானங்கள் இந்த சாசுவத நினைவுச் சின்னங்களை எல்லாம் தரிசிக்கிறான், வியக்கிறான், பரவசமாகிறான். இத்தகைய மகேந்திர ஜாலங்களைச் செய்த சிற்பிகளை நினைத்து கையெடுத்து கும்பிடுகிறான், தலை வணங்குகிறான். சேர சோழ பாண்டிய முப்பேரரசுகளின் வரலாறுகளைப் படித்து, உள்ளம் சிலிர்க்க, உடல் வீறுகொள்ள, சிந்தைகுளிர, புத்துணர்ச்சியும் புதுத்தெம்பும் பொங்கிப் பிரவகிக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து முடித்த பெருமை, அந்த பழம்பெரும் நாட்டின் கம்பீரவாழ்வு, ஐஸ்வரியம் இவைகளுக்கு நேர்மாறாக நிகழ்கால சமுதாயச் சிக்கல், மதிப்பீடுச் சிதைவு, சிந்தனை வறட்சி, பொருளாதார சீர்குலைவு இவைகளினால் ஏற்படும் தாழ்மையுணர்ச்சி இந்த தாழ்மை உணர்ச்சியிலிருந்து தன்னையும் மக்களையும் விடுபடுத்த, சென்ற கால பெருமையை, கற்பனை உலகில் நிறைவாக்க அவன் பேனாவை நாடுகிறான். இப்படித்தான் தமிழில் வரலாற்று நாவல்கள் நூற்றுக்கணக்கில் அமைக்கத் துவங்கியிருக்க வேண்டும்.

5. வரலாற்றுக்கதை இலக்கியத்தில் மட்டுமல்ல, எந்த கலைப்படைப்பிலும் பார்வை, அமைப்புகள் (Vision and design) என்பவை படைப்பாளியின் கூர்மதி (genius) சம்பந்தப்பட்டவை. இதைமனதில் கொண்டு 'மோகனாங்கி' (1895)யில் இருந்து இன்று வரை இந்த 88 ஆண்டுகளில் வரலாற்றுக்கதை இலக்கியம் என்ற முத்திரையில் (label) தமிழில் வெளியாகிக் கொண்டிருக்கும் கணக்கற்ற எழுத்துக்களைப் பார்வையிடும்போது, இந்தியநாடு விடுதலை பெற்றபிறகும், இப்படி சரமாரியாய் இந்த வரலாற்றுக்கதை நாவல்களை எழுத தமிழ் எழுத்தாளர்களுக்கும், அவைகளை வாசித்து ரசிக்க தமிழ் வாசகர்களுக்கும் வேறெந்த இந்திய மொழிகளிலும் இல்லாத அளவுக்கு மிதமிஞ்சி இருக்கும் உற்சாகத்தின் காரணம் என்னவாக இருக்கும் என்று வியப்பாகத்தான் இருக்கிறது. செக்ஸ், சஸ்பென்ஸ் நிரம்பியமர்மக் கதைகள், துப்பறியும் நாவல்கள் போல் இதுவும் ஒருவகை தப்பித்துக் கொள்ளுதல் (escapism) என்று எளிதில் ஒதுக்கிவிடமுடியுமா? இந்தியா அந்நிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்த நிகழ்ச்சி வடஇந்தியாவைப் பொறுத்தவரையில் ரத்த வேள்வியாகவே இருந்தது. இந்தியா துண்டிக்கப்பட்டபோது லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டது தமிழ் உட்பட தென்னகமொழி எழுத்தாளர்களை அதிகமாய் பாதித்ததாய் தெரியவில்லை. கல்கியின் 'அலையோசை' (1948)யில் 1930 முதல் காந்தியைச் சுட்டுக் கொல்வது வரையிலான 18 ஆண்டுகாலகட்டம், சுதந்திரப் போராட்டம், இந்து-முஸ்லீம் கலவரம், காங்கிரஸ் கட்சியின் பங்கு, சோஷலிஸ்ட் புரட்சி, காந்தியின் மகத்துவம் இவை ஓர் அளவுக்கு எடுத்தாளப்பட்டிருந்தன. கல்கியின் 'சிவகாமியின் சபதம்' (1946) ஏழாவது நூற்றாண்டு பல்லவகால கட்டத்தை அடிப்படையாய்க் கொண்டு எழுதப்பட்டது. இவருடைய 'பொன்னியின் செல்வன்'

(1950) பிற்காலத்தில் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழனை அறிமுகப்படுத்துகிறது. தொடர்கதையாக வந்ததினால்தானோ என்னமோ அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்று வாரப்பத்திரிகை வாசகர்களின் ஆவலைத் தூண்டும்படி எழுதப்பட்டிருக்கும் இந்நாவலுக்கு இரண்டாயிரத்திற்கும் மேல் பக்கங்கள் வரும். வீரம், அரசியல் தந்திரம் இவைகளின் வேங்கையான ராஜராஜ சோழனின் மைந்தன் ராஜேந்திரர் காலத்தில் (கி.பி. 1012-1044) கதை நிகழும் அகிலனின் 'வேங்கையின் மைந்தன்' (1961) நாவலில் சோழமக்களின் நாட்டுப்பற்றிற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. சங்க காலமும் (கி.பி. 10 வரை) சிலப்பதிகாரத்தின் பூம்புகாரும் நா. பார்த்தசாரதியின் மணி பல்லவத்தில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. தில்லைக்கோயிலின் திருப்பணியை மையமாக வைத்து பின்னப்பட்டது, ஜெகசிற்பியனின் 'திருச்சிற்றம்பலம்' (1958), மகாராஷ்டிர வரலாற்றுப் பின்னணியில் வீரத்தையும் காமத்தையும் இரண்டற இணைத்து எழுதப்பட்ட சாண்டில்யனின் 'ஜலதீபம்' (1973), கி பி. 1769-1779 காலகட்டத்தில் ஹைதர் அலி, அவன் மகன் திப்புசுல்தான் இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை, ஆங்கிலேயரிடம், நடத்திய போராட்டங்களைச் சித்திரிக்கும் பாலகிருஷ்ண நாயுடுவின் டணாய்க்கன் கோட்டை (1955) தவிர கோவி. மணிசேகரனின் 'சேரன் குலக்கொடி', சி. என். அண்ணாதுரையின் 'கலிங்க ராணி', மு. கருணாநிதியின் 'ரோமாபுரி பாண்டியன்', சோமு, விக்கிரமன் முதலியவர்களின் நாவல்கள் தமிழ் வரலாற்றுக்கதை இலக்கியத்தை இப்படி மொத்தமாய் பார்க்கும்போது, கதை நடக்கும் காலத்து நிகழ்ச்சிகள் மனிதர்களின் இயல்புகள், வாழ்க்கை முறை, மனப்போக்கு இவைகளைவிட மன்னர்களின் வீரத்தையும் காதலையும் (காமத்தையும்) மட்டும் வெளிச்சம் போட்டுக் காட்டத் தகுந்த ரீதியில் படைக்கப்பட்டிருப்பதின் காரணம், தமிழின் தொன்மையான சங்கால இலக்கியம் அகமும் புறமும் காதலையும் வீரத்தையும் கையாண்டிருந்ததினால் மட்டும்தானா? தமிழக வரலாற்றில் பல நுணுக்கமான தகவல்கள் நீலகண்ட சாஸ்திரி, சதாசிவ பண்டாரத்தார் முதலிய சரித்திர பண்டிதர்களால் வரலாற்று நூல்களாய் எழுதப்பட்டுவிட்டதால் அவைகளைக் கதைக்கருவாக்குவது வரலாற்றுக்கதை இலக்கியம் செய்ய வந்தவர்களுக்கு எளிதாகியிருந்தும் இந்நிலைமை ஏன்? எது எப்படியோ, கல்கியின் காலத்திலிருந்து (1899-1954) இன்றுவரை தமிழ் வரலாற்று நாவல்கள் பெரும்பாலும் அவர் கால்சுவட்டில்தான் சென்று கொண்டிருக்கின்றன. அரசியல் தந்திரம் கொண்ட அறிவு, பெருந்தன்மை, சமயப்பற்றுச் செறிந்த எந்நேரத்திலும் எங்கும் தோன்றும் மாறுவேடதாரிகளான, நாட்டின் சகல மூலைகளிலும் நடக்கிறவைகளை அறிந்தும் ஒன்றும் அறியாதவர்களைப் போல் பாசாங்கு செய்து இறுதியில் அதிரவைக்கும் திரிலோக ஞானிகளான மாமன்னர்கள், வாள்வீச்சு, வாய்வீச்சு, சிலம்பவித்தை, குறும்புகள், சுரங்க வழி வியூக நிபுணர்களாக எழில்மிக்க இளவரசர்கள், அழகு, அறிவு, வீரம், குதிரையேற்றம், குத்துவாள் வீச்சு இவையெல்லாம் தெரிந்த இளவரசிகள், தவிர ராஜகுருக்கள், சமய ஒற்றர்கள், இவர்கள்தான் இப்போதும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். கோட்டை கொத்தளங்கள், போர்க்களங்கள், அரண்மனைகள், அந்தப்புரங்கள், சுரங்கவழிகள் ஒன்றுக்கும் பஞ்சமில்லை.

முன்பு குறிப்பிட்ட பார்வை, அமைப்புகள் சம்பந்தப்பட்ட படைப்பாளியின் கூர்மதிக்குச் சமகால சமூக பிரக்ஞை மட்டுமல்ல, சென்றகால நுண்ணறிவும் முக்கியம். காளிதாசன் கூட அவன் வாழ்ந்த காலத்தைவிட வியாசர்காலத்துக் கதைகளை, தான் மறுபடைப்பு செய்வதால் அதிக கவனம் செலுத்தியதாக பார்க்கிறோம். தமிழில் கம்பன், சேக்கிழார் முதலியோர்களும் அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தைவிட நூற்றாண்டுகளுக்குப் பிந்திய அவர்களின் சென்ற காலத்திலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தனர். நேரில் கண்டிராத, ஆனால் வாசித்து, கேட்டு, ஆய்ந்து அறிந்த சென்றகால மனிதர்கள், நிகழ்ச்சிகள், நாகரிகங்கள், பண்புகள் இவைகளை மறுபடைப்புச் செய்யும்போது யதார்த்த அம்சத்தை (REALISM) விட லட்சிய அந்தஸ்துக்கு (IDEALISM) உயர்த்த இவர்கள் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள் என்பதைக் கண்டு கொள்ள முடியும். கண்டறியா சென்றகாலத்திற்கு, நேரில் கண்டறிந்த நிகழ் கால மனிதர்களை, மனித பண்புகளை அறிந்தும் அறியாமலும் இவர்கள் கொண்டு சென்று சேர்த்திருக்கிறார்கள். இதுவே, காலத்திற்கேற்றாற் போல் அதிகமான அளவில்—இது வியாபார (Commercial) யுகமல்லவா, இன்றும் நடைபெறுகிறது என்று, வேண்டுமானால் ஆறுதல் கொள்ளலாம்.

References

1. சுந்தரராஜன், பெ. கோ., சிவபாத சுந்தரம், எஸ்., 1977, **தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்**, கிருஸ்துவ இலக்கியச் சங்கம், சென்னை.

2. **தமிழ் நாவல் 50 பார்வை**, 1978, பத்தினிக்கோட்டம் பதிப்பகம், பூம்புகார்.

# ஐயனார் வழிபாடும் ஈழத்து வன்னிமை மக்களும்

வைத்திலிங்கம் கனகரத்தினம்

தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் சைவமக்களால் ஐயனாரென்று போற்றி வழிபடப்படும் தெய்வத்தின் ஆரம்ப நிலையினை முழுமையாக இனங்கண்டு கொள்வது முடியாதுள்ளது. இதனை நடுகல் வழிபாடு, சாத்தன் வழிபாடு ஆகியவற்றின் அடிப்படைத் தன்மைகளையும் வளர்ச்சியினையும் கொண்டே அறியமுடிகின்றது. நடுகல், சாத்தன், ஐயனார் வழிபாடுகள் யாவும் தென்னாட்டிற்கே சொந்தமானவை எனலாம். இதன் தோற்று வாயை வேத இலக்கியங்களிலிருந்தோ இதிகாசங்களிலிருந்தோ அறிந்து கொள்ள முடியாது. இவ்வழிபாடு தென்னிந்தியாவை யொட்டியே குறிப்பாக தமிழ் நாட்டிலேயே தோன்றி வளர்ச்சி பெற்று வந்துள்ளதெனலாம்.

சங்ககால மக்களிடத்தே போரிலே இறந்துபட்ட வீரர்களுக்கும் கற்புடைய மங்கையைக் காப்பாற்றும் வேளையிலே உயிர் நீத்த வீரனுக்கும் ஆநிரை கவரச் செல்லும் பொழுது இறந்துபட்ட வீரர்களுக்கும் பீடும் பெயரும் குறித்து நடுகல் சமைத்து வழிபடும் மரபு இருந்து வந்தது. புற நானூறு, அகநானூறு, ஐங்குறுநூறுப் பாடல்கள் இச்செய்திகளைப் பற்றிக் குறிப்பிடும்.[1] அ நடுகற்களை அமைக்கும்போது இவ்வாறு பொழுது பட்டான் இன்னான் என்று அவன் பெயரை எழுதி, மரநிழலின் கீழே நட்டும் பெருங்கல் வளைவுப் புதைகுழிகளின் மேல் தனித்து நட்டும் அதனைத் தெய்வமாகப் போற்றினர். அக்காலத்திலே நடுகல் அமைத்தல் ஒரு சமயநெறியாகக் கருதப் பட்டமையால் அவற்றை அமைப்பதற்கான முறைகள் யாவும் ஒழுங்குபட

---

1. (அ) பாலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும். புறநானூறு. பா, 264.

கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து
இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்
ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்

அகநானூறு. பா. 297

விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோ
ரெழுந்துடை நடுக லன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை யிருஞ்சின முறைக்கும்
வெஞ்சுர மரிய வென்னார்
...... ...... ...... ...... ......

ஐங்குறுநூறு. பா. 352.

பின்பற்றப்பட்டன. அம்முறைகளைத் தொல்காப்பியர் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், விழா, வாழ்த்து என ஏழாக ஒழுங்காக இலக்கணம் வகுத்துள்ளார்.ஆ இவற்றை அடிப்படையாகக் கொண்டே வீரவணக்கமும் நடைபெற்று வந்தது எனலாம். சுமார் ஐந்நூற்றுக்கு அதிகமான நடுகற் கல்வெட்டுக்கள் ஏரிக்கரை, ஆற்றங்கரை ஊரின் எல்லைப் புறங்களிலே காணப்படுகின்றன. இக்கற்களிலே வெடியப்பன், முனியப்பன், மீனாரப்பன், அய்யனார் என்னும் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இதுவரை கிடைக்கப் பெற்ற நடுகற்களில் அமைந்த வீரன், அம்பு வில்லு ஏந்தியவனாகவோ, காணப்படுகின்றான்.[2] இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்ற பொழுது, பிற்காலத்தில் தமிழ் நாட்டிற் பல இடங்களிலும் காணப்படுகின்ற ஐயனார் கோயில்கள், வீரர்களுக்குக் கல்லமைக்கும் வழக்கத்தோடு தொடர்புடையன என்ற கூற்றுக்குச் சான்று பகர்வனவாகக் காணப்படுகின்றன[3]. இந் நடுகற்களில் இடம் பெறும் பெயர்களான ஒடுங்கினார், கதவசாத்தான், வடுகன், அய்யனார் முதலான பெயர்கள் கவனத்திற் கொள்ளத்தக்கன வாகும். இவை அர், ஆன் விகுதிகளைப் பெற்று, குழூஉக்குறிகள் போன்று ஐய்யனார், ஐயன் என்ற பதங்களை உணர்த்துவதையும் பிற்காலத்தில் இப் பெயர்களில் சில ஐயனாரோடு வந்து இசைவதையும் இங்கு கவனத்தில் கொள்ளுதல் அவசியமானதாகும்.

ஐயனார் வழிபாடு, சங்ககாலத் தமிழ் மக்கள் மத்தியில் முதன்மை பெற்று விளங்குவதற்கு முன்பாக, சாத்தான் வழிபாடே முக்கியத்துவம் பெற்று விளங்கியதென்றும்[4] சாஸ்தா பௌத்த-சமண தெய்வமென்றும் பிற்காலத்தில் இந்துக்கள் தமது தெய்வமாக ஆக்கிக் கொண்டனரென்றும் குறிப்பிடுவர்.[5] சங்ககாலப் புலவர்களும் சங்கமருவிய காலப் புலவர்களும் மன்னர்களும் சாத்தன் என்ற பெயர்களைத் தாங்கி இருந்தனர். சீத்தலைச் சாத்தனார், ஆமூர் சாத்தனார், ஆலம்பேரிச் சாத்தனார், மோசிச் சாத்தனார், உறையூர் கதுவாய்ச் சாத்தனார், வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தன், வடம வண்ணக்கன் பேரிச்சாத்தனார், பூதஞ்சாத்தனார், அந்துவன் சாத்தனார் முதலான புலவர்கள் சாத்தன் பெயரைத் தாங்கி இருந்தனர். பாண்டியன் கீரன் சாத்தன், கருவூர் கோமான் சாத்தன் என்ற

---

(ஆ) காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று மரபிற் கல்.

தொல்காப்பியம். செய். பே.

2. இராசேந்திரன், அ., 1972, தமிழகத்தில் நடுகற்கள், **இளவேனில்**, இளங்கோ மன்ற வெளியீடு, திருவனந்தபுரம். பக். 120.
3. வித்தியானந்தன், சு., 1954, **தமிழர் சால்பு**, தமிழ் மன்ற வெளியீடு, கண்டி. பக். 113.
4. A. சாமி, பி.எல்., 1974, 'சாத்தன் வழிபாடு', **ஆராய்ச்சி**, மலர்-4, இதழ்-2 பக். 152.
   B. வேங்கடசாமி, மயிலை சீனி, 1954, **சமணமும் தமிழும்**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. பக். 92-94.
5. மேலது நூல், பக். 94.

மன்னர்களும் சாத்தன் பெயரைத் தாங்கி இருந்தனர். பெருஞ்சாத்தான், பேரிச்சாத்தன் என்னும் பெயர்களின் மறு உருவமே தற்போது வழங்கும் மகாசாஸ்தா என்றும், மகாசாஸ்தா, தர்மசாஸ்தா என்று வழங்கிய சாத்தன் பெயர்களே மாசாத்தி, மகாசாத்தன், அறச்சாத்தன் என்று வழங்கின என்றும் இனம் காண்பர்.[6] சிலப்பதிகாரத்திலே அமரதருக் கோட்டம், வெள்ளையானைக்கோட்டம், உச்சிக்கோட்டம், கிழான் கோட்டம், மூர்க்கோட்டம், வேற்கோட்டம், வஞ்சிக்கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக்கோட்டம் முதலான கோட்டங்களுடன், புறம்பணையான் கோட்டம், பாசண்டச் சாத்தன் கோட்டம் பற்றியும் குறிப்பிடப்படுகிறது.[7] பாசண்டச் சாத்தன் என்பதற்குச் சாத்தன் என்கின்ற ஐயன்கோயில் என அரும்பத உரையாசிரியர் பொருள் கொள்வர்.[8] ஆனால், சிலர் பாசண்டம் என்பது வேதத்திற்குப் புறம்பான பௌத்தத்தையும் சைவத்தையும் குறித்து வந்தது என்றும் வைதிக மதத்தில் சேராத மதங்களை எல்லாம் பாசண்டம் என்பது பழமை என்றும் குறிப்பிடுவர்.[9] புறம்பணையான் என்பதற்கு மாசாத்தம் என்றும், புறம்பு அணைந்தவிடம் புறம் பணையாயிற்று என்றும் அரும்பதவுரை குறிப்பிடும்.[10] சிலர் ஊருக்குப் புறம்பாக அமைந்துள்ள இடத்தில் காணப்பட்ட ஐயனார் கோயில் என இதற்குப் பொருள் கொள்வர்.[11] நிக்கந்தக் கோட்டம் என்பது நிக்கந்தத் தேவரான அருகர் கோயிலென அரும்பதவுரை குறிப்பிடும்.[12] சங்ககாலம் முதலாக மதுரை, காஞ்சி போன்ற தலைசிறந்த நகரங்களிற் சமண, பௌத்தத் துறவிகள் தங்கித் தத்தம் சமண உண்மைகளைப் புகட்டுவதற்குப் பள்ளிகள் அமைத் திருந்தனர். சாத்தன், போதியார் என்ற பெயர்களுடைய மக்கள் இக்காலப் பகுதியில் வாழ்ந்தனர். போதியார், சாஸ்தா (சாத்தான்) என்னும் பெயர்கள் புத்தருக்குரிய பெயராதலின் சாத்தனார் என்ற பெயரும் புத்தர் பெயராகவே இருக்க வேண்டும் என்பர்.[13] எனவே, சங்ககாலம் தொட்டுப் பல்லவர்காலம் வரையும் தமிழ் மக்கள் மத்தியில் ஐயனார் வழிபாடு என்ற சாத்த வழிபாடு பௌத்த சமய வழிபாட்டின், வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்று வந்திருக்க வேண்டும் எனக் கூறத் தோன்றுகிறது. ஆனால், சங்ககால நடுகல் வழிபாடும்,

---

6. சாமி, பி.எல்., **ஆராய்ச்சி**, பக். 151-152.
7. அமரர் தருக்கோட்டம் வெள்ளையானைக் கோட்டம்
   உச்சிக் கிழான் கோட்டம் மூர்க் கோட்டம் வேற் கோட்டம்
   வச்சிரக் கோட்டம் புறம் பணையான் வாழ் கோட்டம்
   நிக்கந்தக் கோட்ட நிலாக் கோட்டம் புக்கெங்கும்
   தேவிர்கா ளெம்முறுநோய் தீர்மென்று மேவியோர்
   பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்கு
   **சிலப்பதிகாரம்** கனாத்திற முரைத்த காதை : வரி 9:15.
8. சுவாமி நாதையர், உ.வே., (பதிப்பு), 1968, **சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும்**, கபீர் அச்சகம், சென்னை.
9. சாமி, பி. எல்., 1974, **ஆராய்ச்சி**. பக். 152.
10. **சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும்**, 1968.
11. சாமி, பி.எல்., 1974, **ஆராய்ச்சி**. பக். 153.
12. **சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும்**, 1968.
13. வித்தியானந்தன், சு., 1954, **தமிழர் சால்பு**, பக். 152.

அதனுள் இடம் பெற்ற பெயர்களும் அரும்பதவுரையாசிரியர்களின் உரையும் ஐயனார் வழிபாடு, சாத்த வழிபாட்டினின்றும் விடுபட்டுத் தனியானதோர் வழிபாட்டு முறையாக வளர்ச்சி பெற்று வந்திருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தும். ஒரு விதத்திற் சாத்தன் வழிபாடு வணிகக் கணங்களின் மத்தியிலும் மன்னர்கள் மத்தியிலும் சமுதாயத்தின் உயர் மட்ட இனக்குழு மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றிருக்க, ஐயனார் வழிபாடு சமூகத்தின் கீழ் மட்ட மக்களிடத்தில் பெருவழக்குற்று வளர்ச்சி பெற்று வந்ததெனலாம். பல்லவர்-காலம் சைவசமய மறுமலர்ச்சிக் காலப்பகுதியாகும். பௌத்த, சமண, ஆதிக்கமே சைவசமய மறுமலர்ச்சிக்கு இக்காலப்பகுதியில் வித்திட்டதெனலாம். பௌத்தமும் சமணமும் தத்தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமிழ் மக்களிடையே பள்ளிகள் அமைத்து உண்டியும் உறையுளும் அளித்து அறக்கல்வியினை வளர்த்து வந்தனர். இவற்றினூடே அருகனையும் புத்தனையும் வணங்குவதன் மூலம் பரிநிர்வாணத்தை அடையலாமென்று மக்களிடையே கற்பித்தனர். இந்நிலையில், நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் சமயப்பிரசார வேகமும், மெய்யியல் சாதனைகளும், பிறசமயங்களுக்கிடையே கிடைக்கப் பெற்ற சிறப்பான பொதுப்பண்புகளைத் தமது கருத்துக்களோடு இணைத்துப் புதிய சிந்தனைகளை மக்களிடையே புகட்டியமையாற் பௌத்த-சமண சமயங்கள் தமது செல்வாக்கை இழக்கத் தொடங்கின. அப்பர் தூய சமண சித்தாந்த வாதியாக இருந்து சிவனடியாராக மாறியமையாற் சமணசமயக் கோட்பாடுகளைப் பெரிதும் ஒன்றிணைத்துச் சைவசமயத்தைப் பேரியக்கமாக வழிநடத்திச் சென்ற சிறப்பு அவருக்குண்டு. சங்ககாலம் தொட்டுச் சிறப்புற்று விளங்கிய சாத்தன் என்ற கடவுளைச் சைவத்தினுள் உட்படுத்திச் சிவனின் மகனாகப் போற்றிய பெருமை அப்பரைச் சார்ந்ததேயாகும்.[14] இக்கால கட்டத்திலே தான் ஐயனார் பற்றிய புராணக் கதைகளும் தோன்ற ஆரம்பித்தன எனலாம். இக் காலப் பகுதியிலே பௌத்த, சமண சமயங்களின் செல்வாக்கை நிலைகுலையச் செய்தற்குச் சைவ, வைணவ மதங்களிடையே பரஸ்பர உறவுகள் வலுப்படுத்தப்பட வேண்டியதின் அவசியம் ஏற்பட்டது. இவ்விரு மதங்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள் மறுபடியும் பௌத்த. சமண எழுச்சிக்கு வித்திட்டுவிடும் என்பதால், நாட்டின் சமுதாய சமய பரஸ்பர உறவுகளை இணைக்கக் கூடிய பொருளொன்று தேவைப்பட்டது. அதனைச் சமயவழி இணைக்கக் கருதிய சமயவாதிகள் ஒரு கடவுளை வேண்டி நின்றனர். அவரே ஐயனாராக உருவாக்கப்பட்டார் எனலாம். ஐயனாரின் தோற்றம் பற்றி தென்னாட்டிலே பல கதைகள் தோன்றியுள்ளன. அவற்றிற் சில பின்வருமாறு அமையும்.

1. கற்பகத்தில் தாருகாவனத்திலே ரிஷிகள் ஞானபத்திமார்க்கங்களைக் கைவிட்டு, ஆணவமேலிட்டு வேதவேள்விகளே முத்தி தருவனவாகக்

---

14. பார்த்தனுக் கருளும் வைத்தார் பரம்பரையாட வைத்தார்
சாத்தனை மகனாக வைத்தார் சாமுண்டி சாமவேதம்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதிய நல்ல
தீர்த்தமுள் சடையில் வைத்தார் திருப்பயற் றூரனாரே
திருப்பயற்றூர்ப் பதிகம். செய். 317.

கருதி வேள்விகளைச் செய்வதில் முனைந்து நின்ற வேளையில், அவர்களுடைய கர்வத்தைக் குலைக்கும் பொருட்டுச் சிவன் அழகிய தோற்ற முடையவராய்ப் பிச்சாடான வேடங்கொண்டு, இசையோடு பாடி ரிஷிபத்னிகளை மயக்கினர். திருமால் அழகிய மோகினி வேடங்கொண்டு ரிஷிகளை மயக்கினார். பின்னர் இவர்கள் இருவரும் கூடி ஐயனாரைப் பெற்றனர்.

(முனிசாமி முதலியார், பிரபஞ்ச உற்பத்தி)[15]

2. சூரபன்மன் முதலான அசுரர்களின் கொடுமைகளுக்கு அஞ்சி மூங்கிலுக்குள் ஒளிந்து கொண்டிருந்த இந்திரன் முதலானோருக்கு அபயமளிக்கும் பொருட்டு உருத்திர கணங்களையும் மாகாளன் முதலான பூதங்களையும் கொண்டு சூரபன்மனையும் ஆட்டுத் தலையையுடைய அசமுகி என்னும் பெண்ணையும் அடக்கி இந்திரனுக்கும் இந்திராணிக்கும் அருள் புரிந்தார்.

(கந்தபுராணம், அசுரகாண்டம் மகாசாந்தப்படலம்)[16]

3. ''பதுமசூரன் என்பவன் சிவனைக் குறித்துத் தவம் செய்து, தனது வலக்கரத்தை எவன் சிரசின்மீது வைத்தபோதிலும் அவர்கள் அந்தக் கணமே எரிந்து பற்பமாய் போகும்படியாய் வரம் சிவனிடம் வேண்டிக்கொண்டு, அவரிடத்திலேயே தனது வரத்தினைப் பரீட்சிக்க எத்தனித்தான். அதனால், சிவன் ஐவேலங்கையில் ஒளித்துக் கொள்ள, இதனை அறிந்த திருமால் அழகிய சுந்தரி மோகினி வேடங்கொண்டு பதுமசூரன் முன் தோன்ற, அவன் காமத்தனாகி அவனை அணுக, அவன் எந்தக் குளத்திலாவது குளித்து வா என்று அனுப்பி வைக்க, திருமாலின் திருவிளை யாடலால் நீர்நிலைகள் வற்ற, குளியாது திரும்பி வந்த சூரனைப் பார்த்து, மாட்டுத்தொழுவத்திலாவது நீராடி வரும்படி கூற, அவன் அங்கு சென்று சேற்றில் புதைந்து தண்ணீரை எடுத்துத் தலையிலே பூசிய மாத்திரத்தே சாம்பலாயினான். பின், திருமால் சிவனை அழைத்து வந்து நடந்தவற்றைக் கூறியபின் மோகினி உருவம் கொண்டபோது சிவன் சேர்ந்து ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தனர். அவரே அரிகர புத்திரர் என்றும் ஐயனார் என்றும் அழைக்கப் பட்டார்''.[17]

4. ''சிவனுக்கும் திருமாலுக்கும் பிள்ளையாகத் தோன்றிய ஐயனார் சிவனிடம் 'கர்வத்தோடு உன்னுடைய இரத்தத்தைக் குடிப்பேன்' எனக் கூறிய பொழுது, சினங்கொண்ட சிவன், 'நீ இரத்தத்தைக் குடிப்பவனாக இரு சூத்திரபூசை உனக்கு உண்டாகட்டும்' என்று

15. முனிசாமி முதலியார், **பிரபஞ்ச உற்பத்தி**, பக். 488-489.
16. கந்த புராணம் அசுர காண்டம், மகா சாந்தப் படலம் பாடல்
17. முனிசாமி முதலியார், **பிரபஞ்ச உற்பத்தி**, பக். 479-480.

*சபித்தாராம். பின், ஐயனார் வேண்டுதலின் பேரில் மூவரை பூசிக்கத் தகுதியில்லாதவரும் உன்னைப் பூசித்து நற்கதி அடையட்டும் என அபயம் அளித்தார்''.*[18]

இந்நான்கு கதைகளில் முதல் மூன்று கதைகளும் பொருள் மரபில் ஒற்றுமை உடையனவாகவும் நான்காவது கதை ஏனையவற்றினின்றும் சற்றே வேறுபட்ட பொருள் மரபினை உடையதாய்க் காணப்படுகின்றது. முதல் மூன்று கதைகளும் சைவ - வைணவ நெறிகளுக்கிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்த, அரிகரபுத்திரன் (ஐயனார்) வழிபாடு ஏற்படுத்தப்பட்டதென்று கருதப்பட்ட பொழுதும், ஒரு விதத்தில், இக் காலத்தில் எழுச்சி பெற்ற கடவுளர்களுடன் ஐயனார் (சாஸ்தா) பரத்துவமுடையவராகச் செய்தற்கும், மக்களிடையே பெருவழக்குற்றிருந்த சமயநெறியை வழுவாது பாதுகாத் தற்கும் ஏற்படுத்தப்பட்ட முயற்சியே இப்புராணக் கதைகள் எனலாம். வேறொரு வகையில் கூறின் முன்னையவை உயர்மட்டக் குலமரபு மக்களாலும், பின்னது குடிமக்களாலும் பேணப்படும் விதத்தில் புனையப் பட்டன வென்றே கொள்ளுதல் வேண்டும். தமிழர் கண்ட நெறிகள் ஆரியமயமாக்கல் ஏற்பட்ட காலகட்டத்திற் கிராமிய மக்கள் தமது நெறி பிறழ்ந்து விடாது கட்டிக்காக்க முற்பட்டதன் விளைவே பிற்கதையின் தோற்றம் எனலாம். இக்கதைகளின் பொருள் மரபினையொட்டியே தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் பெரும்பான்மையான ஐயனார் ஆலயங்கள் காணப்படுகின்றன. கிராமியப் பண்பாடானது நகர மயமாக்கலாலும் நகரப் பண்பாட்டின் தாக்கத்தாலும் அதன் மரபு பிறழ்ந்து வைதிகஞ் சார்ந்த ஆகமநெறிகளுக்குட்பட்ட வழிபாட்டுத் தன்மையைப் பெற்றுவிடு கின்றது. ஐயனார் வழிபாடு இதற்கு விதிவிலக்கன்று. சிறப்பாக ஈழநாட்டிலே யாழ்பாணக் குடாநாட்டிலே உள்ள ஐயனார் ஆலயங்கள் யாவற்றையும் பெரிதும் இக் கோட்பாட்டினுள் உட்படுத்தலாம். ஆனால், ஈழத்தின் வன்னிப்பிரதேசம் இக் கோட்பாட்டிற்கு விதிவிலக்கானதெனலாம்.

சங்ககாலம் தொடக்கம் பல்லவர்காலம் வரையிலான ஐயனார் பரிணாம வளர்ச்சி சாத்தனாரின் வளர்ச்சியாகவே காணப்படுகின்றது. சோழர் காலத்தில் ஐயனார் பெருந்தெய்வம் என்ற உயர் நிலையை அடையா விட்டாலும், பெருந் தெய்வத்திற்கானதோர் இடத்தைப் பெற்று விட்டார். அவருக்குச் சிற்ப சாத்திர ஆகம விதி முறைக்கமையப் படிமங்களும் சிற்பங் களும் வடிக்கப்பட்டன. ஆகமங்களில் ஐயனார் பூசை விதிக்குரிய சுலோகங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆலயங்களின் மூலமூர்த்தியாகவும் பிரசார மூர்த்தி யாகவும் அமர்த்தப்பட்டார்.

குலாலசாஸ்திரம் சுப்பிரபேதம், அம்கமத்பேதம், பூர்வகாரணாமம் ஆகிய ஆகமங்களிலே ஐயனாருக்குரிய பூசாவிதிகள் பேசப்படுகின்றன என்பர்.

சோழர் காலத்திலே முதலாம் இராசராசனாலும், இரண்டாம் இராசராசனாலும், பின் வந்த அரசர்களாலும் ஐயனாருக்குத் தனிக்

---

18. இந்து தர்மம், 1974, இந்து மாணவர் வெளியீடு, பேராதனை.

கோயில்கள் கட்டி எழுப்பப்பட்டன. திருப்பாட்டூர் உக்கல் ஆலம்பார்க்கம் ஆகிய இடங்களிலே ஐயனாருக்கென்றே தனியான கோயில்கள் கட்டி எழுப்பப் பட்டன. ஆலம்பார்க்கம் ஐயனார் கோயிற் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் இராசராசனின் எட்டாம் ஒன்பதாம் ஆட்சி ஆண்டுக் கல் வெட்டுக்கள் ஐயனார் கோயிலுக்கு வழங்கிய நிபந்தங்கள் பற்றியும் குறிப்பிடு கின்றன.[19] இரண்டாம் இராசராசன் கல்வெட்டு உக்கல் பகுதியில் இருந்த ஐயனார் கோயில், சாத்தகணத்தாரின் பராமரிப்பில் விடப்பட்டதாகக் கூறும்.[20] ஐயனார் கரிய மேனியும் சிவந்த சடையும் உக்கிரகுணமும் உடையவர் என்பர்.[21] இவர் ஊர்களின் எல்லையில் ஊர்காப்புத் தெய்வ மாகவும் ஏரி, குளம், வயல், நிலங்கள் ஆகியவற்றின் காப்புத் தெய்வமாகவும் கருதப்பட்டார். ஐயனாரைச் சிற்பங்களிலோ, படிமங்களிலோ வடிக்கு மிடத்து, சாத்வீக குணமும் தாமசகுணமும் உடையவராய்ச் சமங்க நிலையிலும் அதிபங்க நிலையிலும் படைப்பர். அவரை ஸ்தான மூர்த்தியாகப் படைக்குமிடத்து, சாத்விக குணமுடையவராய்ச் சடாம குடந்தாங்கி, யஞ்ஞோப விதமும் ஊருமாலையும் தரித்து, நான்கு கைகளை உடையவராய் இடக்கரத்தின் முன்கரம் லோலகஸ்தமும் பின்கரம் வீணையைத் தாங்கிய வண்ணமும் வலக்கரத்தின் முன்கரம் அபயகஸ்தமும் பின்கரம் செண்டினைத் தாங்கிய வண்ணமாகவும் அனுக்கிரக மூர்த்தியாய்ப் படைக்கப்பட்டார். சுகாசன மூர்த்தியாய்ப் படைக்கின்ற பொழுது, இடக்காலைக் கீழே நோக்கி மடக்கி ஊன்றி வலதுகாலைத் தொங்க விட்டு, வலதுகையில் செண்டினையோ, வீணையையோ தாங்கி, இடக்கரம் லோங்கஸ்தமாகவோ, கயகஸ்தமாகவோ இடக்காலின் மேல் ஊன்றித் தொங்கவிட்ட வண்ணம் படைக்கப்பட்டார். வடுலூர், புலிவலம், புத்தூர், காரைக்கோவில் பத்து, கண்ணபுரம், வழுத்தூர்முதலான இடங்களிலே ஐயனார் ஆலயம் காணப்படு கின்றது. திருப்பாட்டூரில் உள்ள ஐயனார் சிலை கையில் ஓலைச்சுவட்டினை வைத்திருப்பதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. சேரமான் பெருமாள் நாயனார் கைலாசத்திலே பாடி அரங்கேற்றிய ஞானவுலா, ஐயனாரின் மூலமாக வெளி வந்ததென்ற நம்பிக்கையின் அடிப்படையாகவே இவ்வியல்புகள் ஐயனாரில் இடம் பெற்றது எனலாம். ஐயனாரின் வாகனமாகக் குதிரையும் யானையும் இடம் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலே யானையையும் ஐயனாருக்கு வாகன மாகப் பயன்படுத்தி வருகின்றனர். திருக்குறுங்குடி, வழுவூர் முதலான இடங் களில் குதிரை வாகனமே ஐயனார் வாகனமாகக் காணப்படுகின்றது. ஈழ நாட்டிலே குதிரையே ஐயனாரின் வாகனமாகக் கொள்ளப்படுகின்றது.

பத்தாம் நூற்றாண்டினளவிலே ஐயனார் கோழிக்கொடியோன், காரி, சாதவாகனன், சாத்தன் என்ற பெயர்களாலும்,[22] பின்னர் இவ்வகைப்

---

19. பாலசுப்பிரமணியம், எஸ். கே., 1966, **முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்**, தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு. பக். 104.
20. மேலது நூல், பக். 201.
21. நவரத்தினம், க., 1941, **தென் இந்திய சிற்ப வடிவங்கள்**, திருமகள் அழுத்தகம், சுன்னாகம். பக். 126.
22. சாமி, பி.எல்., 1974, **ஆராய்ச்சி**, பக். 157.

பெயர்களுடன் வெள்ளையானைவாகனன், அறத்தைக் காப்போன், செண்டாயுதன் என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டார்.[23] கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் இந்தியாவை ஆண்ட மன்னர்களுள் சாத்த வாகனரும் ஒருவர். இவர்கள் காலம் சங்ககாலத்துச் சமனாக இருப்பதாலும் பல்லவர்கள் இவர்களின் படைத்தலைவர்களாக இருந்தனர் என்று கருதப் படுவதாலும் இவர்களின் காலத்தில் சாலிவாகன சகாப்தம், சாதவாகன சகாப்தம் வழக்கில் வந்தமையாலும், சாத்தவாகனரின் ஆட்சியின் கீழ் தமிழ் நாடு இருந்தமையினாலும் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சாத்த வாகனரின் நாணயங்கள் தமிழ் நாட்டிலே காணப்படுவதாலும், இம்மன்னர் களின் ஆட்சிக்காலத்திலேதான் சாத்தன் என்ற தெய்வ (ஐயனார்) வழிபாடு தமிழ் நாட்டில் புகுந்ததென்பர்.[24] இவ்வாய்வில் பல உண்மைகள் பொதிந் துள்ள போதும், மேலும் இக்கருத்துக்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

ஆகமநெறிக்குட்படாத ஐயனார் ஆலயங்களிலே பார்ப்பனரல்லாத பூசாரிகளால் பூசைகள் நடத்தப்படுகின்றன. ஓச்சன் அல்லது உவச்சன், பண்டாரம், வேளாளக் குயவர், வேளாளர் முதலானோர்கள் இவ்வாலயங் களின் பூசாரிகளாக விளங்கிய பொழுதும் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர் களே பெரிதும் ஐயனார் கோயில்களின் பூசாரிகளாக விளங்குகின்றனர்[25] இத்தெய்வத்தின் நேர்த்தியின் காணிக்கையாக மண்குதிரை வாகனங்களைச் செய்து வைப்பர். நேர்த்தியாளரின் மன அமைதிக்கும் வருவாய்க்கும் ஏற்ப அதன் அளவு வேறுபட்டுக் காணப்படும். பல நேர்த்தியாளர் ஒன்று சேர்ந்தும் தமது நேர்த்தியை நிறைவேற்றுவர். வேனிற்காலத்தில் மண்குதிரையினைச் செய்து காணிக்கை செலுத்துவதைப் பரவி என்பர். பங்குனி உத்திரத்தின் போது ஐயனாரைக் குதிரை வாகனத்தில் எழுந்தருளப்பண்ணி வையாளி விடும் விழாவினை நம்பிரான் விளையாட்டு என்று அழைப்பர்.[26] தமிழ் நாட்டிலே நடைபெறும் ஐயனார் விழாக்களில் கம்பர் திருவிழாவும் மொந்தையன் விழாவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. கம்பர் திருவிழா ஐயனார் கோயில் உள்ள கிராமங்களெங்கிலும் நடைபெறுவது வழக்கம். ஒரு செவ்வாய்க் கிழமையன்று அலரிப் பூவைப்பறித்து அதனை ஐயனார்க்குச் சார்த்தி விழாவைத் தொடக்கி வைப்பர். அடுத்த செவ்வாய்க்கிழமை ஒரு வேப்பமரத்தின் மூன்று கொம்புள்ள கிளையைக் கோயிலின் வாயிலில் நாட்டுவர். இது ஏனைய கோயில்களிலும் கொடியேற்றம் நிகழ்வதற்கு ஈடானதென்பர். ஒரு கிழமை முழுவதும் மாலைப்பொழுதில் ஆண்கள் அக்கம்பத்தைச் சுற்றி மகிழ்ச்சியால் ஆடுவர். இவ்விழா பத்து நாட்கள் நடைபெறும். எட்டாம் நாள் பொங்கலும் ஒன்பதாம் நாள் தேரோட்டமும்

---

23. பிங்கல முனிவர், 1917, **பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு மூல மும் உரையும்**, மதராஸ் ரிப்பன் அச்சகம், சென்னை. பக். 25.
24. சாமி, பி. எல்., 1974, **ஆராய்ச்சி**, பக். 157-158.
25. ஸ்ரீனிவாசன், பி. ஆர்., 1959, **நாம் வணங்கும் தெய்வங்கள்**, இளங்கோ பதிப்பகம், சென்னை.
26. சாமி, பி. எல்., 1974, **ஆராய்ச்சி**, பக். 154.

மறுநாள் சுவாமி ஊர்வலம் சென்று திரும்பியதும் கும்பம் கலைக்கப்பட்டு பண்டாரம் தன் தாயத்தை வெட்டிக் கிணற்றில் போட்டதும் பூசை முடிவுறும். இறுதிநாள் தெருக்கூத்து, சதுர் ஆட்டம் இடம்பெறும்[27] ஆகம நெறிக்கமைந்த ஆலயங்களில் அறுபத்தி நான்கு வகையான சடங்கு முறைகள் நடைபெறுவது போன்று இவ் ஆலயங்களில் நடைபெறுவதில்லை. ஐயனார் ஆலயத்தின் பரிவார மூர்த்திகளாக மதுரைவீரன், மொந்தையன் முதலானோர் விளங்குகின்றார்கள். ஐயனாருக்கும் மதுரை வீரனுக்கும் ஒருமித்தும் தனித்தும் பூசைகள் நடைபெறுவது வழக்கம். தமிழ் நாட்டில் ஐயனார் பெரிதும் சைவ ஒழுங்கு நெறிக்கமைந்த கடவுளாகவே காணப்படுகின்றார். மதுரைவீரன் கோழி, ஆடு முதலான உயிர்ப்பலி வேண்டும் கடவுளாகக் காணப்படுகின்றார். மதுரைவீரனுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் போது ஐயனார் அதனைப் பார்க்கக் கூடாதென்பதற்காக ஐயனார் முன் திரைச் சீலை போட்டு மறைத்துக் கொள்வர். ஐயனாருக்கு அறுகம் புல்லும் சிறுபுளையும் சைவப்பலியாகப் பூசைக்குப் பயன்படுத்துவர்.[28] இவ்வாலயங்களில் முகூர்த்தங்களை நீராட்டுதல், ஆடை அணிவித்தல், தூபமிடல், நெய்வேத்தியம் கொடுத்தல் போன்ற சடங்குகளே பெரிதும் இடம் பெறுகின்றன. விழாக் காலங்களிலே மக்கள் விரதம் இருப்பதோடு தங்கம், வெள்ளி, பறவை, மிருகம், பால், தின்பண்டங்கள் முதலானவற்றையும் காணிக்கையாகச்செலுத்துவர். விரதம் பூண்டவர்கள் திருவிழாக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து முழுநாளும் விசேட பூசைகளின் போதும் விரதம் இருப்பர். விழாக்காலங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடும் ஒலியாட்டம், பொம்மலாட்டம், தோல் பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் முதலான கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். கோடை விழாவின் போது ஐயனார் ஆலயங்களில் ''ஐயன் கதை'' என்ற வில்லுப்பாட்டும் நடைபெறுவது வழமையாகும்.[29]

தமிழ் நாட்டைப் போன்று கேரள நாட்டிலும் ஐயனார் (சாஸ்தா) வழிபாடு மிகுதியாக வழக்கில் உண்டு. ஆனால், ஆந்திரம், கன்னட தேசங்களில் அவ்வளவாக வழக்கிலில்லை என்பர்.[30] கேரள நாட்டிலே மலையாளக் கறுப்பனும் வேட்டைத் தெய்வமான முத்தப்பனும் ஐயனாருடன் தொடர்பு படுத்தி வணங்கி வருகின்றனர்.[31] இங்குள்ள சைவ வைணவ ஆலயங்களில் தென்மேற்கு மூலையில் ஐயனார் (சாஸ்தா) காப்புத் தெய்வமாக வழிபடப் படுகின்றார். ஐயனாரை முனீஸ்வரனாகப் போற்றும் மரபும் தமிழ்நாட்டிலே உண்டென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

27. சோமலெ., 1974, **தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்**, இந்தியா நேஷனல் புக் டிரஸ்ட், பக். 136-137.
28. சாமி, பி.எல்., 1974, **ஆராய்ச்சி**,
29. சுப்பிரமணியம், வி.எஸ்., 1977, (தொகுப்பு) ஐயனுக்குப் பாடும் பாட்டு, **திறனாய்வுக் கட்டுரை**, அணியகம், சென்னை. பக். 236.
30. ஸ்ரீனிவாசன், பி. ஆர்., 1959, **நாம் வணங்கும் தெய்வங்கள்**, பக். 19.
31. சாமி, பி.எல்., 1974, **ஆராய்ச்சி**, பக். 156-157.

**ஈழநாட்டில் ஐயனார் வழிபாடு**

மேற்காட்டிய ஆய்வின் தொடர்ச்சியாக ஈழநாட்டிலே ஐயனார் வழிபாட்டின் செல்வாக்கை நோக்கின், ஈழநாட்டிலே ஐயனார் வழிபாடு எந்த நூற்றாண்டளவில் செல்வாக்குப் பெற்று வளர்ச்சி அடைந்ததென்று கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஐயனார் வழிபாடு தனித்துச் சைவ மக்களிடையே வழக்கிலுள்ள வழிபாட்டு முறையென்று கூற முடியாது. ஈழத்து பௌத்த மக்களிடத்தில் இவ்வழிபாடு வழக்கில் உண்டு. பொதுவாக ஈழநாட்டு மக்களிடையே காணப்படும் ஐயனார் வழிபாட்டு முறையினைப் பின்வரும் அடிப்படையில் பகுத்து நோக்கலாம்.

1. பௌத்த சிங்கள மக்களும் ஐயனார் வழிபாடும்
2. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐயனார் வழிபாடு
3. மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு
4. வன்னிமைப் பிரதேசத்தில் ஐயனார் வழிபாட்டின் செல்வாக்கு.

**பௌத்த சிங்கள மக்களும் ஐயனார் வழிபாடும்:**

ஈழநாட்டின் பௌத்த மக்கள் தம்பாரிய சமய உறவுகளுடன் வைதிக சமய ஆசாரங்களையும் பேணி வருவதுடன் அச்சமய தெய்வங்களையும் மிகுந்த பயபக்தியுடனும் போற்றி வருகின்றனர். வைதிக சமயங்களுடன் தொடர்புடைய, கிரிஅம்மன் என்று சொல்லப்படும் ஏழு வைதிக சமயம் சார்ந்த பெண் தெய்வங்களையும் ஸ்கந்த (கதரகமா தெய்யோ) கணபதி (கணதெய்யோ) விஷ்ணு (விஷ்ணு தெய்யோ) சிவன் (நாகதெய்யோ) முதலான ஆண் தெய்வங்களையும் வணங்கி வருகின்றனர்[32] இவ் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் சிங்கள பௌத்தமக்கள் வாழும் பல்வேறு பகுதிகளில் வணங்கப்பட்ட போதும், ஐயனார் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் பிரதான தெய்வமாகப் போற்றப்படுகின்றார். இம்மக்கள் ஐயனாரை, ஐயநாயக்க என்றும், ஐயநாயக்கதேவர், ஐயநாயக்க தெய்யோ என்றும் அழைத்து வருகின்றனர். கரையோரப் பகுதிகளில் வாழும் பௌத்த மக்கள் ஐயனாரைப் போக்சல் (Boksal) என்று போற்றுதல் செய்வர் என்பர்.[33]

''சைவர்களிடையே ஐயனார் வழிபாடு வளர்ச்சி அடைவதற்கு முன்பாகவே இந்நெறி பௌத்தர்களிடையே கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பாகவே வளர்ச்சி அடைந்த தென்பர்''[34] இக்கூற்று ஆய்வுக்குரிய தொன்றாகும். கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பே இவ்வழிபாடு பௌத்த மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம். வடமத்திய மகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் கண்டெடுக்கப்பட்ட ஐயனார் சிலைகள், படிமங்கள்

---

32. Parkar, H., 1981, **Ancient Ceylon,** Asian Educational Services, New Delhi. P. 667.
33. மேலது நூல், பக். 668.
34. **இந்துதர்மம்**, 1974.

இதற்கு உதாரணமாக அமைவதோடு[35] அங்குள்ள மக்கள் மத்தியில் இன்றும் போற்றி வணங்கப்படும் சைவ சமயக் கடவுளர்களுள் முக்கியம் பெற்றவராக விளங்குவதையும் இங்கு குறிப்பிடலாம்.

சைவ மக்களிடையே ஐயனார் பற்றி நிலவும் நம்பிக்கைகள், மரபுக் கதைகள் போன்றே பௌத்த மக்களிடையேயும் நிலவுகின்றன. மோகினி ஐயனாரின் தாய் என்றும் அவர் மதுரையில் இருந்து வந்தாரென்றும் வெள்ளை யானை அவர் ஊர்தி என்றும் அவர்கள் நம்புகிறார்கள்[36] மேலும் ஐயனார் வயல் நிலங்களிலும் குளக்கட்டுகளிலும் காடுகளிலும் உறையும் தெய்வமென்றும், தூரதேசம் புறப்படும் போதும் காட்டுவழி செல்லும் போதும் அவர் வணங்கப்பட வேண்டிய தெய்வமென்றும் பௌத்த மக்கள் மானசிகமாக நம்புகின்றனர்.[37] நன்ஹலம்பகவி, ஹலம்ப சாந்திய, கோலகி சந்தேச முதலான சிங்கள இலக்கியங்கள் ஐயனாரைப் போற்றுதல் செய்கின்றன. கேடுகள் வந்து மக்களைத் துன்புறுத்தும் போதும், வரட்சியினால் நோய்கள் வந்து பீடிக்கும் பொழுதும், அக்கேடுகளினின்றும் தம்மைக் காப்பாற்றும் பொருட்டும் ஐயனாரை வேண்டிப் பொங்கல் செய்வர். அத்துடன் குளம் நிரம்பி வழியும் பொழுதும் நெல் அறுவடை முடிந்த பின்பாடும் ஐயனாரை நினைவு கூரும் வகையில் ஐயனாருக்குப் பெருவிழா எடுப்பர். இதனை முட்டிமங்கல என அழைப்பர்.[38] இவ் விழாவினை மாதம்பையிலுள்ள பௌத்த மக்கள் மிகச் சிறப்பாக கொண்டாடுவார்கள். ஐயனாரை, விநாயகருடன் ஒப்ப நோக்கும் மரபும் சிங்கள மக்களிடம் இருப்பது போலத் தெரிகின்றது.[39] ஈழத்து பௌத்த மக்களிடையே காணப்படும் வைதிக சடங்கு முறைகளில் பிரிக்க முடியாத ஒரு கூறாக ஐயனார் பற்றிய நம்பிக்கைகளும் சடங்குகளும் அமைந்து விட்டன எனலாம்.

ஈழநாட்டின் சைவ மக்கள் மத்தியில் பெருந்தெய்வங்களின் பரிவார தெய்வங்களிலொருவராகவும், அவரின் சிறப்பறிந்து பின் பெருந்தெய்வங்களிலொருவராகவும் போற்றி வழிபடப் படுகிறார். அத்துடன் காட்டிலே உறைபவராகவும் வேட்டையில் விருப்பமுடையவராகவும் ஊர்காவல்தெய்வமாகவும் வறட்சியினின்றும் காப்பாற்றுபவராகவும் ஐயனார் வழிபடப்படுகின்றார். இப்பொழுது அடிப்படையில் மேற்கூறிய பிரதேசங்களில் ஐயனார் வழிபாட்டின் முக்கியத்துவத்தினை நோக்கலாம்.

---

35. அநுராதபுரம், சிகிரியா முதலான வடமத்திய மாகாணப் பிரதேசங்களிலும், வடமேல் மாகாணத்தில் மருதமடு முதலான இடங்களிலும் மற்றும், உருத்திரபுரம், கல்லோயா முதலான இடங்களிலும் புராதன ஐயனார் படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
36. இந்து தர்மம், 1974.
37. விமலகீர்த்தி, உதித்த நாயக்க ஸ்தவீர. வீ., 1981, **பாரதீய தர்ம சாத்திர சக சிங்கள சிறித் விருத்**, எம்.டி. குணசேன கொம்பனி அன்லிமிட்டெட், கொழும்பு. பக். 277.
38. Anujatha Seneviratnan 1984-85, **Folk Beliefs and Rituals Associated with Rain and Drought,** Royal Asiatic Society, Colombo, Vol. XXIX, PP. 44-45.
39. மேலது பக், நூல். 45

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐயனார் வழிபாடு:**

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையும் பொது மக்களின் பிரதான வழிபாட்டுக் கடவுளாக ஐயனார் விளங்கினார். விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர், சட்டிபானை வனைவோர், கோவியர் முதலான தொழிலாள மக்களிடையே இவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். கட்டிட அமைப்பிற்கு உட்பட்ட ஆலயங் களிலும் சாதாரண ஆலயங்களிலும் இத்தெய்வத்தின் பூசகர்களாக அவ்வக் குலத்தைச் சார்ந்தோரே பெரிதும் விளங்கினர். அத்துடன் சைவக் குருமார்களும் பண்டாரங்களும் பூசகர்களாக அமர்ந்திருந்தனர். 19ஆம் நூற்றாண்டிலும் அதன் பின்னர் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார, கல்வி மாற்றங்கள் சமய மரபிலும் பெரு மாற்றங்களை ஏற்படுத்தின. ஐயனார் வழிபாட்டு நெறியும் இத்தகைய மாற்றங்களுக்கு விதிவிலக்காக அமையவில்லை. இவை பெரிதும் யாழ்ப்பாணக் குடாநாட்டை மையமாகக் கொண்டே நடைபெற்றன. மரங்களின் கீழும் கொட்டில்களிலும் வீற்றிருந்த ஐயனார், சிற்பசாத்திர, ஆகம விதிமுறைக்கமைந்த ஆலயங்களுள் எழுந்தருள முற்பட்டார். அங்கு ஐயனார் சல, அசலமூர்த்தியாக அமர்ந்திருந்தார். பார்ப்பனர்களே ஆசாரிகளாக விளங்கினர். மரங்களின் கீழும், கொட்டில் களிலும் வணக்கத்திற்காக அமைந்திருந்த சூலங்கள், கற்கள், சிலைகள் முதலானவை தவிர்க்கப்பட்டன. ஆனாலும், யாழ்ப்பாணக்குடா நாட்டின் கிராமப்புறங்கள் பழைய மரபுகளைப் பேணி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இக்குடாநாட்டிலே நெடுந்தீவு, அனலைதீவு, மண்டைதீவு, காரைதீவு, அராலி, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், காங்கேசன்துறை, வரணி, சுது மலை, சுன்னாகம் முதலிய இடங்களில் புகழ் மிக்க ஐயனார் ஆலயங்கள் காணப்படுகின்றன.[40] இவ்வகை ஆலயங்கள் சிலவற்றில், குறிப்பாகச் சுன்னாகம் ஐயனார் கோயில் முதலான ஆலயங்களில் நூற்றுக்கணக்கான ஆடுகளும் கோழிகளும் பலியிடப்படுவது வழக்கமாக இருந்து வந்தது.[41] அரசியல் சட்டங்கள் இறுக்கமடைந்ததால், பலி இடுதல் சட்டத்தால் தடை செய்யப்பட்டிருப்பதால் இவை இன்று தவிர்க்கப்பட்டுள்ளன.

**மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு:**

மட்டக்களப்புப் பிரதேசத்தின் சைவ மக்களின் வழிபாட்டிற்குரிய பெருந் தெய்வமாகக் கண்ணகி அம்மன் விளங்கியபொழுதும், மாரியம்மன், கறுப்பாயி அம்மன், காமாட்சி அம்மன், பேச்சியம்மன், பத்திரகாளி அம்மன், கடல்

---

40. அ. மேலது ஊர்களில் அமைந்த ஆலயங்கள் யாவும் இன்றுவரை சிற்ப சாத்திர-ஆகம முறைக்கமைந்த கட்டிடங்களையும் ஆகம கிரியை முறைகளையும் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆ. பின்னிணைப்பில் ஈழநாட்டிற் காணப்படும் ஐயனார் ஆலயங்களின் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. பார்க்க.

41. Cartman, James, Rev., 1957, **Hinduism in Ceylon**, Colombo, M. D. Gunasena & Co. Ltd., PP. 72-73.

நாச்சி அம்மன், திரௌபதை அம்மன், எக்கலாதேவிஅம்மன் முதலான பெண் தெய்வங்களும் குருநாதர், காத்தவராயர், வைரவர், வதனமார் முதலான ஆண்தெய்வங்களுடன் ஐயனாரும் வழிபாடு இயற்றப் பெறுகின்றார்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் குருக்கள் மடம், மண்டூர், செங்கலடி, கல்முனை, பாண்டிருப்பு, புதுக்காடு என்னும் பகுதிகளில் தான் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிறிய ஆலய வடிவத்தோடு கூடிய கோவில்கள் உண்டு.[42] ஆனால், விவசாய மக்களிடத்திலும் இடையர்கள் மத்தியிலும் ஐயனார் வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. வயற் பிரதேசங்களின் கரைகளிலும், நாற்சந்திகளிலும், காட்டுப் பிரதேசங்களின் நுழைவாசல்களிலும் ஐயனார் ஆலயங்கள் சிறிய வடிவில் காணப்படும். இப்பிரதேசத்தில் அமைந்த ஆலயம் எவையும் ஆகமமுறைக்கமைந்து, பார்ப்பனர்களால் பூசை செய்யப்படுவதில்லை. பிள்ளையார் ஆலயத்துடன் சேர்ந்து ஐயனாரைப் போற்றும் மரபும் இங்குண்டு.

இவ்வாலயங்கள் யாவற்றிலும் சித்திரை வருடப்பிறப்பினை அடுத்து முதற் பதினைந்து நாட்களுள் விழா ஆரம்பித்து முடிவடைந்து விடும். பொங்கல் விழாவே சிறப்பாக நடைபெறும். சில இடங்களில் பொங்கல் விழாவுடன் அலங்கார விழாவும் இணைந்து சிறப்புறும் விழாவாக இடம்பெறுவதுண்டு. வெள்ளியும் செவ்வாயுமே இவ்வாலயங்களுக்குரிய பூசை நாட்கள். ஒவ்வொரு விவசாயியும் அல்லது குடிமகனும் ஐயனாருக்கு நேர்ந்து ஒரு பானையில் நெல் அல்லது அரிசி இட்டு வைப்பர். பொங்கல் வந்ததும் அவ்வரிசியையும், பெரிய வாழைப்பழமும், ரொட்டியும் பிற பண்டப் பொருட்களும் ஆலயத்துக்கு கொண்டு சென்று புதுப்பானையில் ஐயனுக்குப் பொங்கிப்படைப்பர். இப்பொங்கல் ஆலய விசேட விழாக்காலங்களிலும் தனித்தும் இடம் பெறும்.

விசேஷ பொங்கல் விழாவின் பொழுது, ஐயனாருக்கும் அவரின் பரிவார தேவர்களுக்கும் மடை பரவப்படும். பூதப்படைகள், பைரவர், வீரபத்திரர், வதனமார், அநுமன், இருளன், மருளன், நீலாசோதயன்[43] மகாகாளன், மாடன், சுடலைமாடன், ராக்கிஷன் சண்டி வடுகன், பன்றிமாடன், வீரவாளன் வடுகன், சண்டி வீரன் குமுறன், பேயன், கறுப்பன், சாரி, சாக்கியர், இரா

42. மட்டக் களப்புப் பிரதேச ஐயனார் ஆலயங்கள் பெரிதும் ஒரு சிறிய இறையகத்தைக் கொண்டனவாயும் பெரும்பாலன இவ்வமைப்புக்கு உட்படாததாய் மரங்களின் கீழ் அமைந்த கொட்டில்களிற் கல் வடிவிலும் தலவடிவிலும் ஐயனார் உருவகப்படுத்தப்பட்டு வழிபாடு இயற்றப் பெறுகின்றார். வீரசைவர்களும் பொதுமக்களுமே பூசர்களாக விளங்குகின்றார்கள்.

43. அம்மையையு மப்பனையும் அன்புடனே தான் வணங்கப்
புவனத் திறையாக்கிப் பூதகணந் தானளித்து
உருத்திர புதமு முவப்புடனே தான் கொடுத்து
மூவிலைச் சூலம் முதற்கையி லேயிலங்க
மூன்று புவனம் முதன்மைபெறக் காவல் செய்தார்
பூதைப்படைகள் புடைசூழ்ந்து ஏவல் செய்ய
வையிரவர் வீரபத்திரர் வதனமார் காத்திருந்தார்

சத்தி[44] அத்துடன் அக்கினி முதலானோருக்கு மடை பரவப்படும். ஐயனார் மடையின் இருமருங்கும் பூரணை, புட்கலை ஆகியோருக்கும் மடை போடப் படும். இவற்றிலே ரொட்டி, பெரிய மொந்தன் வாழைப்பழம் உட்பட ஏனைய மடைப் பொருட்களும் பொங்கலும் வைக்கப்படும். மடை பரவிய பிற்பாடு, ஐயனார் அகவல்,[45] ஐயனார் காவியம்[46] ஆகியன படிக்கப்படும். சில சமயங்களில் மடை பரவ ஆரம்பித்த பிற்பாடும் படிப்பதுண்டு. இந் நூல்கள் ஐயனாரின் தோற்றத்தையும் படைப்பலத்தையும் வீரத்தையும் புகழ்தல் செய்வதோடு, அவரின் அருட்பிரவாகத்தையும் குறிப்பிட்டு அவனருள் வேண்டி போற்றுவனவாக உள்ளன.[47]

---

அனுமா னிருளன் மருளனுடன் முன்னோடி
நீலா சோதயனும் நெடுங்காவல் தானிருந்தார்
பூரணையும் புட்கலையும் புகழா யருகிருக்க
மதயானை வாகனத்தில் வந்தார் மாகாளர்.

கணபதிப்பிள்ளை, சி., 1970, 'ஐயனார் அகவல்', மகாமாரித், தேவி திவ்விய கரணி, விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம் பக். 128-129.

44. எங்கணு முலாவுமா டன்சுடலை மாடன்
இருளனொடு உச்சிமரு ளன்விறும ராக்கிஷன்
வெங்கொடிய சண்டிவடு கன்பன்றி மாடன்
வீரவாளன் வடுகன் மிகசண்டி வீரன்
தங்குகுமு தன்பேயன் கறுப்பனா சாரி
சாக்கியர் ராச்சாதி ஒடிடாக் கினியாம்
மங்குபுகழ் துஷ்டதே வதைகளைச் சாடியே
வையமதி ஐயனார் வந்துறை வினரே.

(ஐயனார் காவியம், மகாமாரித் தேவி திவ்வியகரணி,1970,பக் 146.)

45. இந்நூல் யாரால் பாடப்பட்டதென்பது அறியுமாறில்லை. அகவல் பாவால் அமைந்த இந்நூல் 53 வரிகளைக் கொண்டது.

46. இந்நூலின் ஆசிரியர் யாரென அறியுமாறில்லை. இந்நூல் காவியம் என்று கூறப்பட்டாலும் காவிய அமைப்புக்கேற்பப் பாடப்பட்ட தல்ல. இது விநாயக வணக்கம் உட்பட பதினான்கு எண்சீர்விருத்தப் பாக்களைக் கொண்டது. மேற்குறிய இவ்விரு நூல்களும் சி. கணபதிப்பிள்ளை என்பவரால் தொகுக்கப்பட்ட மகாமாரித் தேவி திவ்விய கரணி (1970) என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன.

47. பஞ்சாட் சரத்தைப் பதிய மனதில் வைத்து
மூலப் பொருட்கு முதற்பூசை செய்த பின்பு
கரும்பு மிளநீருங் கமுகமலர் பூவகையுஞ்
சாந்து சவாது சந்தமும் வெண்ணீறும்
அத்தர்பன் னீருடனே அபிஷேக பூசை செய்தார்
வாழைப் பழமும் வருக்கைப்ப லாக்கினியுஞ்
தேடி வரமருளச் செய்தார் சிவபூசை
ஐயனார் தன்னுடனே ஆறுமுகர்க் கும்பூசை
கறுப்பாயி மாலையுடன் காத்தவர்க் கும்பூசை
பூசை முடித்தார்கள் பூசாரி மார்கூடி
மஞ்சள் குளித்து மகாகாளர் பூசை செய்தார்
ஐயரிட கோவிலிலே அனைவோரும் பூசைகொண்டார்
வணிகர்குல தெய்வமென வந்தவ ரேசரணம்
ஏழைகளைக் காக்கு மிறையவ ரேசரணம்
அசமுகி யின்கரத்தை அறுத்தவ ரேசரணம்
அபாயமென்ற போதருகில் அணைபவ ரேசரணம்
சரணஞ் சரணம் ஐயப்ப சுவாமி
அடியேனு முந்த னடைக்கலந் தானோ.

மகா மாரித்தேவி திவ்வியகரணி, ஐயனார் அகவல், வரி, 36-53.

இப்பிரதேசத்தில் சமூக ஏற்றத்தாழ்வுகள் பெரிதும் பேணப்படாமை யினால் எல்லா மக்களும் சென்று, தமது ஆன்மீக ஒருமைப்பாட்டிற்கேற்ப பொங்கிப் படைத்து அருள் வேண்டி வருவர். ஆலயத்திற்குச் செல்லும் பொழுது, அரிசி, பழம், வெற்றிலை, கமுகம்பாளை, மஞ்சள், பூ முதலான வற்றை ஏந்திச் செல்வர். இதனை மடைப்பெட்டி என்று அழைப்பர். இம் மக்கள் இதனை நேர்த்தியாகவும் வழமையாகவும் கருதிச் செய்து வரு கின்றார்கள். ஐயனுக்கு வருடத்தில் ஒரு முறை கட்டாயம் பொங்கல் செய்ய வேண்டும். அப்பொழுது தான் தம் குடும்பம் சுகமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையும், தமது செல்வங்கள் அனைத்தையும், குறிப்பாக ஆடு, மாடு முதலானவற்றைக் காக்கும் கடவுளாக ஐயப்பன் விளங்குகின்றான் என்ற நம்பிக்கையும் பொதுவாக அவன் காத்தற் கடவுளே என்ற உணர்வும் இப் பிரதேச மக்களை அவன்பால் அன்பு கொண்டு போற்றுதல் செய்யக்காரணங் களாக அமைந்தன எனலாம்.

புத்தளம், சிலாபம் முதலான இடங்களில் உள்ள முஸ்லீம் மக்களிடத்தில் ஐயனார் காத்தற் கடவுள் என்ற நம்பிக்கை உண்டு. அவர்கள் வேட்டைக்குச் செல்லும்பொழுது, காட்டிற்குள் நுழைந்ததும் தம்மைக் காத்தருளும்படி ஐயனாரை வேண்டி,அங்குள்ள மரக்குழைகளை ஒடித்துப் போட்டுப் போற்று தல் செய்து விட்டே வேட்டைக்கு உள்நுழைவர்.[48] இது முஸ்லீம் மக்களுக் கும் ஆரம்பகாலத்தில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் இடையேயுள்ள சமூக உறவின் நிமித்தமாக ஏற்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடலாம்.

**வன்னிமைப் பிரதேசங்களில் ஐயனார் வழிபாட்டுநெறி:—**

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அப்பால் வன்னிமைப் பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு மரபு வழிப்பட்ட தொன்றாய் சிறப்புற்று விளங்குகின்றது. வன்னிமையில் சிவன், பிள்ளையார், முருகன் ஆகிய பெருந் தெய்வங்களுக்கு ஆகம, சிற்ப சாத்திர விதிக்குட்பட்ட ஆலயங்களும் வழிபாடுகளும் காணப் பட்ட போதும், பொதுமக்கள் மத்தியில் ஐயனார் பெறும் முக்கியத்துவத்தை இவை பெற்றுவிடவில்லை எனலாம். வன்னிமை மக்களால் வழிபாட்டுக் குரிய நெறியாகக் கொள்ளப்படும் ஐயனார்வழி, முற்றாக ஆகமவிதிகளுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வழமைகளுக்கும் வேறுபட்டனவாக அமைந்து காணப்படுகின்றது. அவை வன்னிநாட்டிற்கென்றே சிறப்பான பொதுப் பண்புகளை உள்ளடக்கித் தனித்தன்மை பெற்றதாய் விளங்குகின்றது. இத்தகைய தனித்துவத்தை வன்னிமக்கள் பேணிக்காத்தற்கு அடிப்படைக் காரணமாக அமைவன, சோழநாட்டின் தொண்டை மண்டலப்பகுதியிலே இருந்து வன்னிமக்கள் குடியேறினர் என்று கருதப்படுவதும், சோழப் படை களில் இடம் பெற்ற வேளைக்காரப் படையினர் இப்பிரதேசத் தலைவராகி வன்னிமைகளைத் தோற்றுவித்து மக்களைக் குடியமர்த்தி ஆட்சி செலுத்தி

48. இத் தகவல்களைத் தந்துதவியவர் புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் ஆவார். இவர் யாழ் பல்கலைக் கழக மெய்யியல் துறை விரிவுரையாளரும் ஆவார்.

பழைய மரபுகளைப் பேணி வந்தமையுமே முதன்மையான காரணங்களாக அமையலாம். அத்துடன், யாழ்ப்பாணக்குடா நாட்டு மக்களுடன் எவ்வித நெருக்கமான தொடர்பும் வைத்திராது தமக்கே உரித்தான பண்புகளை இறுக்கமாகப் பேணி வந்தமையும் பிறிதோர் காரணமாகக் கூறலாம். சோழர் ஆட்சியிலேதான் ஐயனார் தனிதெய்வமாகவும் பரிவாரத் தெய்வமாகவும் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்கினார் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது. மேலும், வன்னிமைகளின் இயற்கை அமைப்பும் ஐயனார் வழி பாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தின. வன்னிமைகள் அடர்ந்த காடுகளையுடையனவாகவும் கொடிய விலங்குகள் அங்கு வசிப்பனவாகவும் காணப்பட்டன. இவற்றினின்றும் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் காட்டுத் தெய்வத்தின் மகனும் காட்டிலே உறைபவனும் ஊர்க்காவல் தெய்வ மாகக் கருதப்பட்டவனுமாகிய ஐயனாரை இடையறாது வழிபாடு இயற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. இதனால் வன்னிகளில் வாழும் மக்கள் ஐயனாரை ஏனைய தெய்வங்களை விட பெருந்தெய்வமாகக் கருத முற்பட்டனர். வன்னிமை மக்கள் ஐயனார் நீர்ப்பாசனக் குளங்களிலும் வயல் நிலங்களிலும் உறைபவனாகவும் கொடிய விலங்குகளினின்று தம்மைக் காப்பவராகவும் வறட்சிக் காலங்களிலோ மற்றும் வேளைகளிலோ ஏற்படும் கொடிய நோய்களினின்று மக்களைக் காப்பவரென்றும் ஆன்மீக உணர்வோடு நம்புகின்றனர். இத்தகையப் பயன்களை வன்னிமை மக்கள் பெறுவதினாலே சிறப்பாக ஐயனார் வழிபாட்டைக் கடைப்பிடித்து வருகின்றனர். ஐயனாருக்கு விழா எடுக்கும் காலங்களிலே தம்மை அறியாமலே ஆன்மீக உணர்வினைப் பெற்றுக் கொள்வதோடு அன்றாட வாழ்விலும் 'ஐயனே' 'ஐயனாரே' என்று அவனது நாமத்தை உச்சாடனம் செய்வதன் மூலம் தமது ஆன்மீக உணர்வினைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

வன்னிமைப் பிரதேசத்தில் ஆத்திக்குளம், வெள்ளம் குளம், சம்புவெளி, காகங்கரைந்தான், துணுக்காய்[49] ஆதிசடன்குளம், கோடலிக்கல்லையன், அச்சிலாய், செம்பெடுத்தகுளம், கூளாவாடி, பூநகரி, (பண்டா) ஆண்டான் குளம், ஆராட்சியாகுளம், கொக்குளாய், கொக்குத்தொடுவாய், வறளாய், சொல்லவிளாங்குளம், கல்விளான், வன்னிவிளாங்குளம், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, சின்னடம்பன் முதலான பல இடங்களிலே ஐயனார் ஆலயங்கள் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றன. பொதுவாக வன்னிமைகளில் ஐயனார் ஆலயம் இல்லாத இடமே இல்லையென்று குறிப்பிடலாம்.[50] இங்கமைந்த ஆலயங்கள் யாவும் குளக்கட்டுகளிலும் அன்றி அதனை அண்டிய பகுதிகளிலும் காட்டின் மத்தியிலும் வயல் வெளிகளிலும் அமைந்து காணப்படுகின்றன.

---

49. "வந்தவரித் தோர் ஆத்திக்குளமாம்
வாவாள கல்வடெ வெள்ளாங்குளமாம்
கந்துமுறு சம்புவெளி காகங்கரைஞ்சான்
கருதினிய துணுக்காய் நெறபதிதனிலே யமர்ந்து"
[கட்டுரையாசிரியர் திரட்டியது]

50. மெற்றாஸ் மயில், செ., (தொகுப்பு) 'ஐயனார் சிந்து', **வன்னிவள நாட்டுப் பாடல்கள்,** பக். 52-55.

ஐயனார் மரத்தின் கீழோ குடிசையின் உள்ளோ சூலத்தினையோ கல்லினையோ வைத்து வழிபட்டுவரப்படுகின்றார். ஆகம சிற்ப சாத்திர விதிக்கமைந்த, திராவிட மரபு சார்ந்த ஆலயங்கள் யாதும் ஐயனாருக்கு இற்றைவரை எழவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

வன்னிமையின் கிராமிய மக்கள் ஐயனாரை, அறிந்தோ அறியாமலோ மெய்யியல் சார்ந்த உணர்வோடு உருவகப்படுத்தித் தமது அன்றாட வாழ்வில் தொழில்துறைகளிலே போற்றிப் பாடி வருவதை அவதானிக்கலாம். ஐயனாரின் பரத்துவத்தைப் பின்வருமாறு போற்றுதல் செய்வர்.[51]

"அரனுக்கும் அரிக்கும் மைந்தனாகக் கையிலே உதித்தவனே!
அவர்களின் அருள் திறனையும் ஆற்றலையும் பெற்றவனே!
எங்கும் நிறைந்தவனே! அளவிடுதற்கரியனே! படைப்
பலத்தைக் கொண்டவனே! அகதி பரதேசியாய்
(குருவடிவாய்) வந்து அருள்பவனே!
மெய்ப்பொருளே! நற்கதியை அடியவர்களுக்கு
அளிப்பவனே! பூமிபாலகர்களாகிய யாம்
உமது சரணமலர் பொற் பாதமே சரணமென்றே
துதித்தோம்; வரம் தாரும் ஐயனே!

ஐயனாரது தடித்த இலட்சணத்தின் தோற்றப் பொலிவினைப் பின்வருமாறு புகழ்ந்து பரவுவார்.[52]

வெள்ளையானையின் மீதிருப்பவனே அம்பும் வில்லும் பொற்சிலம்பும்
கைகளிலே ஏந்தியவனே! மார்பிலே மலர்மாலைகளையும், பொற்பதங்
களையும் அணிந்து, கைகளிலே நாதமிக்க கெஞ்சைகளை
அணிந்தவனே! இடையிலே அமேனிக் கெஞ்சையினையும் சிலம்பு
அன்னம், சொர்ணம் முதலான அணிகலங்களைத் தரித்தவனே!
மடமாதர்கள் மணக்கவுரியும் சாமரையும் வீச, வல்லியர்
படைத்தலைவர் வெண்கொற்றக் குடைபிடிக்க, பூமி
பாலகரும் விறுமனும் அட்டபாலகரும் வைரவரும், வடுகரும்,
மறவரும், பிறமானிடரும் பணிந்தேற்ற வீரமாகாளரும்
மற்றும் பரிகலங்களும் சேனையொடு பணிந்து நிற்க; பலர்
மேலாப்புப் பிடித்து வர, தாளத்தின் இசையும் மத்தளத்தின்
ஒலியும், தாளம் தப்பாது ஒலிப்ப, அவன் அருளை வேண்டிப்
பாடுவோர் ஆடுவோர் பலகோடி சூழ்ந்து வர
காட்சி கொடுப்பவனே!

ஐயனார் வழிபாடு வன்னிமைகளில் பின்வரும் நிகழ்ச்சியின் பொழுது சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அவையாவன:

1. ஊர்க்காவல் முறை

---

51. மேலது நூல், பாடல். 7.
52. மேலது நூல், பாடல். 11.

2. வெளிமுழக்கம்
3. பொங்கல் விழா (ஆண்டுப் பொங்கல்)

**ஊர்க் காவல் முறை**

ஊர்க்காவல் முறையானது கிராமத்திலே தீராத நோய் பரவி வரும் பொழுதும் கொடிய வறட்சி ஏற்படுகின்ற பொழுதும் நோய்களில் நின்று கிராமத்தைக் காப்பாற்றும்படியும், மாரி பொழிதற்கும் ஐயனாரை வேண்டி எடுக்கப்படும் விழாவாகும். இச்சடங்கு பூசாரியாரின் தலைமையிலே நடை பெறும். இச்சடங்கு நடைபெறுவதற்கு முன்பு ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதியை அண்ணளவாகக் கொண்டு எல்லை குறித்துக் கொள்வர். பொது மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல நாளைக் குறித்துப் பூசாரியாருக்கு அறிவித்து விட்டு, மடைப் பண்டங்களைப் பூசாரியார் வீட்டிலோ ஆலயத் திலோ கொண்டு சென்று வைப்பர். இச்சடங்கன்று பூசாரியார் ஆசாரத்துடன் கோயிலுக்குச் சென்று பூசைகள் முடித்துக்கொண்டு மடைப்பண்டங்களை எடுத்துக் கொண்டு பூசாரியார் முன்னே செல்ல, ஏனையோர் பின்தொடர்ந்து செல்வர். அங்கு வெள்ளைச் சேலையிலே பண்டவெட்டையிலே மடைப் பண்டங்களை வைப்பர். அங்கு பூசாரியார் உருக்கொண்டு, எண்திசையும் நோக்கி வணங்கி பல்வகை சூல வடிவங்களில் மண்ணிலே சூலங்கள் போட்டு ஐயன் பரிகலங்களை அழைத்து சடங்கு செவ்வனே நிறைவேற வேண்டிக் கொள்வர். அதன் பிற்பாடு கச்சுநேருதல், மடைபரவுதல், பொங்கல், பரிகலம் வழிவிடல் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறும். பரிகலங்களை குறிப்பிட்ட எல்லையிலே விட்டு, மக்களை நோய், பிணி முதலியன அணுகாவண்ணம் காப்பாற்றும்படி வேண்டிக் கொள்வர். பொதுவாக ஊர்க்காவல் முறை ஐயன்கோயிலிலே ஐயன் பொங்கலின் போது பூசாரியினால் நடத்தப்படும் என்பர். ஊரிலே இன்னல்கள், நோய்கள் பரவாவண்ணம் இருப்ப அவரே ஊர்க்காவல் சடங்கினைச் செய்வர்.

**வெளிமுழக்கம்**

வெளிமுழக்கத்தினை வெளிமடை என்றும் அழைப்பர். வெளிமுழக்கம் சிறப்பாக ஐயனார் கோயில்களிலே செய்யப்படும் சடங்கு முறையாகும். இதனைக் கூட்டாகவோ தனித்தோ ஐயன் கோயிலிலோ வெளியிலோ செய்யலாம். இச்சடங்கினைச் செய்யும்போது, பூசாரி வீட்டிலோ, கோயிலிலோ மடைப்பண்டங்களை வைத்து வயல்வெட்டுக்கு பூசாரியாருடன் நோன்புக் காரரும் பிறரும் புடைசூழ, பறை அதிரக் கொண்டு சென்று பண்டை வெட்டையிலே பண்டங்களைப் பந்தலின் கீழ் வைப்பர். பின்னர் பறை முழக்க பூசாரியார் உருக்கொண்டு ஆடி இன்று பொங்கலாம் என்றால் பொங்கலாம். பொங்கக் கூடாதென்றால் பொங்குதல் தவிர்க்கப்பட்டு மடை மாத்திரம் போடுவர். பூசாரியார் தொடர்ந்தும் பூசாரியார் உருவுடனே ஆடித் திக்குப் பாலகர்களை நோக்கி வேண்டி, கைமுத்திரைகள் மூலமும் பல்வேறு சூல வடிவிலும் நிலத்திலே கீறுவர். கச்சுநேருதல், பண்டமெடுத்தல், மடைபரவுதல் பொங்கல், பரிகலம் வழிவிடுதல் முதலான சடங்குகள் நடைபெறும். இங்கு கும்பம் வைப்பது இல்லை. தட்டிலோ நிலத்திலோ பரிகலங்களை ஆகாவனம் செய்வர். பண்டப்பொருள்களாக 1008 முதல் 12000 வரையிலான பாக்கு,

வெற்றிலை, பழம் முதலான பொருட்கள் வேண்டப்படும். வெளிமுழக்கம் எந்த நேர்த்திக் கடனுக்கும் ஐயனார் கோயிலிலே செய்யலாம் என்பர். ஊர்க் காவல்முறை, வெளிமுழக்கம் போன்ற நிகழ்ச்சிகள் இன்று வழக்கில் இல்லாத படியினால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. ஒரு விதத்தில் இடத்துக்கிடம் இவற்றின் சடங்கு முறைகள் வேறுபட்டு அமைந் திருக்க வேண்டும் போல் தெரிகின்றது. களக்காவல் முறையும் ஐயனார் வழி பாட்டைச் சேர்ந்ததே என்பர்.

**பொங்கல் விழா (ஆண்டுப் பொங்கல்)**

வன்னிமைகளில் அமைந்து காணப்படும் ஐயனார் கோயில்கள் யாவற்றிலும் ஆண்டுக்கு ஒரு முறையே அதுவும் ஒருநாளே விழாநடைபெறும். அந்த விழா பொங்கல் விழாவாக அமையும். அதனை ஆண்டுப் பொங்கல் என்று குறிப்பிடுவர். வன்னிமையில் அமைந்த ஐயனார் ஆலயங்கள் பல வற்றிலும் ஆண்டான் குளத்து ஐயனார் கோவிலும் சடவன்குளத்து ஐயனார் கோவிலும் அருள்பாலிக்கும் புகழ் மிக்க ஆலயங்கள் என்பதில் மக்கள் மிகுந்த நம்பிக்கை உடையவர்கள்.[53] ஐயனார் ஆலயங்களுள் ஆண்டான் குளத்து ஐயனார் ஆலயமே காலத்தால் முற்பட்டதாகும்.[54] ஆண்டான் குளத்து ஐயனாரை ஏனைய ஐயனார் ஆலயங்களுடன் தொடர்புபடுத்திப் பேசுவர். வன்னிமையில் அமைந்த ஐயனார் ஆலயங்களின் பத்ததிகள் யாவும் தமிழ் மொழியில் அமைந்து, வடமொழித் தமிழ் மந்திரங்களாகக் காணப்படு கின்றன. ஆனால். நடைமுறைகள் மாறுபட்டனவாகக் காணப்படும். அவை, பத்ததிகளை நன்கு புரிந்துகொள்ளாமை, மடைப்பண்டங்களை விரைவாகப் பெறக்கூடிய போக்குவரத்து சாதனங்களின் வசதி இன்மை, சந்தைப்படுத்தல் இன்மை முதலான காரணங்களால் ஏற்பட்டன எனலாம். வன்னிமையி லுள்ள ஐயனார் கோயிற் பொங்கல்கள் யாவும் ஆனி முதல் ஆவணிக் கடைசி மாதத்திற்குள் முடிவடைந்து விடுகின்றன. ஆண்டான் குளத்து ஐயனார் கோயிற் பொங்கல் விழா ஆவணி மாதத்தில் பறுவமும் சனிக்கிழமையும் இணையும் நாளிலே நடைபெறும். அதுவும், ஐயனார் பூசாரியாருக்குக் கனவில் தோன்றிப் பொங்கல் செய்வதற்குச் சம்மதம் கொடுத்த பின்னரே பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வர். இல்லையேல், பொங்கல் அவ் வருடம் நடைபெறமாட்டாது. ஏனைய ஆலயங்களிலே குறிப்பிட்ட முகூர்த்த தினத்தில் அதனை நடத்தி முடிப்பர்.

பொங்கல் நடைபெறுவதற்கு முன்பாகவே உள்ளூர் மக்களுக்கும் அயற் கிராமங்களுக்கும் சீட்டு எழுதி அனுப்புவர். சீட்டு கொண்டு செல்பவரிடத்தே மக்கள் பொங்கலுக்கான தம்மாலான உதவிகளைக் காசாகவோ பொரு ளாகவோ கொடுத்து உதவுவர். இதனைப் பணத்தெண்டல் என்பர். அன்று தவறுவோர் பின்னர் நேரடியாக ஆலயத்திற்குக் கொண்டு வந்து காணிக்கை யாகக் கொடுப்பர். இது எல்லாக் கிராமங்களுக்கும் பொது என்பதை விட

---

53. கனகரத்தினம், இரா. வை., 1982, 'வன்னி மக்களின் மரபும் பண்பாடும்', **பண்டார வன்னியன் விழா மலர்**, பக். 46.
54. தமிழரசி, ச., மேலது நூல், பக். 72.

இதுவே பழைய மரபு எனலாம். இன்றும், சில வன்னிமைகளில் நடைபெற்று வரும் வழமையுமாகும். இதனை ஒரு விதத்தில் பாக்குத்தெண்டல் நிகழ்ச்சி யோடும் ஒப்பிடலாம். பொங்கல் நிகழ்ச்சி, சமகாலத்திலே நோன்புக்காரர் களான சலவைத் தொழிலாளி (கட்டாடியார்), கோவியர், சவரத்தொழிலாளி (அம்பட்டர்), மட்பாண்டத் தொழிலாளி (குயவர்), தோட்டி (பறையர்), மரவேலைத்தொழிலாளி (தச்சன்) முதலானோருக்கும் அறிவிக்கப்படும். ஆண்டான் குளப் பொங்கலின் போது பதினெண் குடிமக்களுக்கும் பொதுவாகச் சொல்லப்படும் என்றும் முக்கியமாக மேற்காட்டியோரின் வருகையை அனுசரிப்பர். பொங்கல் நடைபெறுவதற்கு எட்டு நாட் களுக்கு முன்பாகவே பூசாரியாரும் நோன்புக்காரரில் சிலரும் சென்று பொங்கல் நடைபெறுவதற்கான ஆயத்தங்களைச் செய்வர். பிரதம பூசாரியார் விரதம் மேற்கொள்வார். பொங்கல் சடங்குகளை மேற்கொள் வதற்கு முன்பாக நோன்புக்காரர் அனைவருக்கும் ஐயனை நேர்ந்து கை களில் கங்கணவேளை கட்டுவர். இச்சடங்கினை நோன்புகுத்தல் என்பர். கங்கணவேளை கட்டப்பட்ட எவரும் கோயிலின் எல்லையை விட்டுத் தாண்டுதல் கூடாது. தமது வீட்டிற்குச் செல்லுதல் அடியோடு தவிர்க்கப்பட்டுள்ளது. மகோட்சவ விழாவின் போது ஆலயப் பிரதம குருவும் மகோட்சவ விழா முடியும் வரையும் வீட்டிற்குச் செல்லுதல் கூடாது என்பது சிறப்பான விதியாக உள்ளது என்பதையும் ஒப்பிட்டு மனங் கொள்ளல் வேண்டும். கங்கணவேளை கட்டியவரில் சிலர் ஆலயங்களைச் சுத்தம் செய்தலாகிய பற்றைகள், புல், பூண்டுகளை வெட்டுதல், கூட்டுதல், பெருக்குதல் முதலான பணிகளிலும், விளக்குத்திரிகள் பலவற்றைத் திரித்து வெண்ணெய்யில் ஊறவிடல், பாத்திரங்களைக் கழுவுதல், அரிசிமா இடித்தல் முதலான செயல்களிலும் ஈடுபடுவர். சில வன்னிமைகளில் நோன்புகுத்தப்பட்டவர் மடைப்பண்டப் பொருட்களை வாங்கச் செல்லும் பொழுது எவ்வித காரணம் கொண்டும் அவ்வூரிலே தங்காது பண்டங்களைக் கொண்டு வரச் செல்ல வேண்டும் என்ற நியதிகளும் உண்டு. எட்டாம் நாள் பொங்கல் அன்று குடிமக்கள் நோன்புக்காக அழைக்கப்படுவர். அவர்களுள் கோவியர் பொங்கலுக்கான நெல்லைக் குற்றிக் கொடுப்பதோடு நோன்புக் காரர்களின் சமையலுக்கு உதவுதல், பொங்கலுக்கு உதவுதல் முதலான கருமங்களில் ஈடுபடுவர். சலவைத் தொழிலாளி பூசாரியார் நோன்புக் காரர்களுக்கு வேண்டிய வெள்ளை வேட்டி, கச்சு, வெள்ளைத்துணி முதலியவற்றைக் கொடுப்பார். அம்பட்டர் பூசாரியாருக்கும் நோன்புக் காரர்களுக்கும் முகச்சவரம் செய்வார். குயவர் நோன்புக்காரர்களுக்கு வேண்டிய புதிய சட்டி, பானைகளை அளிப்பர். சாம்பன் வேண்டும் பொழுதெல்லாம் பறையை முழக்கி பத்தியை மேலிட வைப்பர். ஆண்டான் குளத்திலே நோன்புக்காரர் அனைவரும் எட்டு நாட்களும் நோன்பிருந்து ஒன்றாகவே உணவுபரிமாறி ஒத்தாசையோடு பொங்கலை ஆரம்பிப்பர். சடவன் குளத்திலே எட்டாம் நாளே குடிமக்கள் நோன்பிற்காக வரவழைக்கப் படுவர். மற்றும், வன்னிமைகளிலும் எட்டாம் நாளே குடிமக்கள் நோன்பிற் காக வரவழைக்கப்படுவர். நோன்புக்காரர் எவரும் விரத ஒழுங்கு நெறி யினின்று சிறிதேனும் பிறழாது அதனை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில்

ஐயனார் ஏனைய தெய்வங்கள் போன்று குற்றத்தைப் பொறுக்க மாட்டார். ஐயனார் குற்றம் படாத தெய்வம். குற்றமே பொறுக்காத் தெய்வம் என்பது இவர்கள் நம்பிக்கை. மிகுந்த ஒழுங்கையும் ஆசாரத்தையும் வன்னிமையின் ஐயனார் கோயில்களில் காண்பதில் எவ்வித வியப்புமில்லை.

**மடைப்பண்டம் எடுத்தல்**

ஐயனார் கோயிலுக்கான மடைப்பண்டங்கள் யாவும் நேரடியாக ஐயனார் ஆலயத்திற்குக் கொண்டு செல்வதில்லை. இது எல்லா ஐயனார் கோயில்களுக்குமான பொது விதியாகவே காணப்படுகின்றது. பண்டங்கள் யாவற்றையும் அருகில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைத்து, பிள்ளையார் பூசையை முடித்துக் கொண்ட பிற்பாடே பூசாரியார் நோன்புக்காரர்களும் அடியார்களும் சூழ்ந்துவர பறை முழங்க உருவுடன் மடைப்பண்டம் இருக்கும் இடத்தை நோக்கிச் செல்வர். அங்கு ஒவ்வொரு பண்டங்களாக நோன்புக் காரரிடம் கலையோடு எடுத்துக் கொடுப்பர். அங்கிருந்து பண்டங்களை ஐயனார் கோயிலுக்கு எடுத்துச் செல்வர். பனங்காம வன்மைப் பிரதேசத்தில் மடைப்பண்டம் எடுக்கும்பொழுது வடமொழி மந்திரத்தினை ஓதுவர்.

**கும்பம் வைத்தல்**

கும்பங்கள் பானையிலோ வெங்கலச் சருவங்களிலோ வைக்கப்படும். கும்பத்திலே தேங்காய் வைத்து பத்திரிக்குழை சாத்தி, நூல் சுற்றி ஐயனார் முகவாடாகத்தை இவற்றோடு இணைத்து வைப்பர். மற்றும் சிறிய கும்பங் களும் வைக்கப்படும். இக்கும்பத்தை வைக்கும் பொழுது "ஓம் தன்னூல மண்டல சவுணடிகாநம ஐயனே சிவாயநம" என்ற மந்திரத்தை ஓதுவர். இக்கும்பங்களிலே ஐயனாரும் வந்து அவரது பரிகலங்களும் வந்து அமரும்படி ஆவகணம் செய்வர் பூசாரியார். இதற்கு முன்பாக பூசாரியார் இறைவனை நோக்கி வேண்டி அவ்வத் தெய்வங்களுக்குரிய வடிவங்களை வெவ்வேறு வகையான சூலவடிவிலே நிலத்திலே தட்டத்திலுள்ள அரிசியிலே தனது பிரம் பால் போடுவார். இதனை **இயந்திரம் தாவுதல்** என்றும் இயந்திரம் போடுதல் என்றும் அழைப்பர்.

**கச்சுநேரல்**

சலவைத் தொழிலாளியால் கொடுக்கப்படும் தூய வெள்ளைத் துணியினை வாங்கி, கொய்து நான்கு திக்கும் நின்று ஒவ்வோர் திக்குகளிலு முள்ள தெய்வங்களை வேண்டி நேர்ந்து அதிலே ஆவகணம் பண்ணி நோன்புக்காரரிடம் கொடுப்பர். இவ்வேளை பூசாரியார் பறை முழக்க உருக் கூடிய நிலையிலே காணப்படுவார். இக்கச்சு நேர்ந்த சேலைகளையே மடை பரவுதலுக்குப் பயன்படுத்துவர். இது பொதுவிதி. ஆனால், சில இடங்களிலே கச்சு நேர்ந்த இடத்திலேயே ஒரு சேலையை விரித்து அதிலே ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி வாழை இலையின்மேல் அரிசியினைப் போட்டு, அதன்மேல் பழம், பாக்கு, வெற்றிலை வைப்பர். ஒவ்வொரு பிரதான செயல்களுக்கும் முன்பு தேவதைகளைத் திருப்திப் படுத்தும் வகையில் இந் நிகழ்ச்சி மேற்கொள்ளப்படுகின்றதெனலாம். இச்சடங்கு சடவன்குளத்து ஐயனார் கோயிலிலே நடைபெறுவதை அவதானிக்கலாம்.

**வளர்ந்து நேருதல்**

கச்சு நேருதல் பரிகலங்களை அழைத்த பிற்பாடு பொங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்வர். பறை முழங்க தாள அதிர்வுக்கேற்ப பூசாரியார் உருக்கொண்டு ஆடியவாறு வளர்ந்தினை எடுக்கச் செல்வார். வளர்ந்துகளை ஒவ்வொன்றாக எடுக்கும் பொழுது அதனை மிகுந்த லாவகமாகத் தூக்கி நான்கு திக்கும் காட்டி எறிந்து ஏந்தி உருவேறிய பக்தி நிலையில் ஆடுவார். இந்நிலையில் ஐயனாரின் பரிகலங்களுக்குப் பச்சையரிசியை வானத்தை நோக்கி எறிவார். பொங்கல் இனிது நிறைவெய்த தேவர்களையும் தேவதைகளையும் வேண்டுதல் செய்தலே வளர்ந்து நேரல் என்பர். நேர்ந்த வளர்ந்துகள் ஒவ் வொன்றையும் நோன்புக்காரரிடம் கொடுப்பர். இதனை ஒட்டி வெற்றிலை நேருதலும் நடைபெறும்.

**தீர்த்தம் எடுத்தல்—பொங்கல்**

பொங்கல் தீர்த்தத்தை அயலில் உள்ள கிணற்றிலோ குட்டையிலோ ஓடையிலோ பூசாரியார் நோன்புக்காரர் பக்தர்கள் சூழ்ந்துவர பறைமுழங்க எடுத்து வருவர். தீர்த்தம் எடுத்தல் ஒரு பிரதான நிகழ்ச்சியாக ஐயன் கோயில் களில் நடைபெறுவதாகத் தெரியவில்லை. பொங்கல் வளர்ந்துக்கு வெற்றிலை கட்டி, குறியிட்டு அடுப்பில் ஏற்றுவர். பொங்கல் வளர்ந்துகளின் எண்ணிக்கை கோயில் வளர்ச்சிகளின் தன்மையைப் பொறுத்து அமைகின்றது. பொதுவாக மூன்று வளர்ந்து முதல் ஆறு வளர்ந்துகளைப் பொங்கலுக்கு உபயோகப் படுத்துவர். சடவன்குளத்து ஐயனார் கோயிலில் ஆறு வளர்ந்துகள் வைப்பர். இவ்வளர்ந்துகளில் பிரதான வளர்ந்தினை நாசவளர்ந்து என்பர். பொங்கல் வளர்ந்தினை ஏற்றும் போது,

> "அந்தரம், சுவர்க்கம், பூமிமண்டலங்கள், எட்டுத் திக்கும்
> பதினாறு கோணங்களையும் ஆளும் புட்கலையாள்
> முதல் அறுபத்திநான்கு நூறாயிரம் மற்றுமாக்களையும்
> படைத்துக் காக்கும் தம்பிரானுக்கும் தம்பிராட்டிக்கும்
> அபயம் அடைக்கலம்."[55]

என்று மிகுந்த பணிவோடும் பக்தியோடும் வேண்டிக் கொண்டு வளர்ந்தினை அடுப்பிலே ஏற்றுவர். பொங்கல் பானையில் முதல் அரிசியை இடுபவர் பூசாரியேயாகும். இதனைத் தொடர்ந்து ஏனைய பொங்கல் வளர்ந்திற்கு நோன்புக்காரர்கள் அரிசியினைப் போடுவர். பசும்பாலும் பச்சை அரிசியுமே பொங்கற் பொருட்களாக இருக்கும். வேறு எந்தப் பொருட்களும் சேர்க்கப் படுவதில்லை. இதனைத் தொடர்ந்து ஏனைய அடியவர்களும் தமது நேர்த்திப் பொங்கல் பானையை ஏற்றிப் பொங்குவர். நோன்புக்காரர் பொங்கலை இனிது முடிக்க ஒத்தாசை புரிவர்.

---

55. சடவன் குளத்து ஐயனார் கோயில் பூசாரியார் திரு. செயம்பு என்பாரின் பத்ததியில் இருந்தவாறு

**மடைபரவுதல்**

ஐயனாருக்கு மடைபரவும் பொழுது 12, 000 பாக்கு, 12,000 வெற்றிலை, 12, 000 பழம் ஆகியன முக்கியமாக மடையிலே பொருளாய் இருத்தல் வேண்டும் என்பது பத்ததி விதியாகும். ஆனாலும், கோயிலின் வருவாய்க்கும் பூசாரிமார்களினதும் மக்களினதும் இயல்புக்கும் ஏற்றாற்போல் இதன் எண்ணிக்கை மாறுபட்டு அமையும். பொங்கல் நடைபெற்றுக் கொண்டிருக் கையிலே மடைபரவ ஆரம்பிப்பர். கச்சு நேரப்பட்ட மூன்று வெள்ளைத் துணியை (16 முழம்) விரிப்பர். பண்டங்களை ஒன்றின் மேல் ஒன்றாகப் பிரித்து ஒவ்வொரு சீலையிலும் மடை பரவுவர். மடையின் போது பொங்கல் அமுது, கரும்பு, எலுமிச்சம்பழம், தோடை, மாதுளை, பலா, வடை, இளநீர், முதலிய பொருட்களும் வைப்பர். ஐயனார் பன்னீராயிரம் படைக்கலம் உடையவர் என்பர். இத்தொகைப் படைக்கலங்களுக்குப் பதிலாக இருபத்தி ஏழு மடைக்கு மேல் போட வேண்டும் என்பர். ஆண்டான்குளம், சடவன் குளம் ஆகிய ஐயனார் கோயில்களிலே மாத்திரம் இத்தகைய வழமைகள் நடைபெறுகின்றன.

ஐயனார் பூரணை, புக்கலை, பிள்ளையார், முருகன், பரிகலை வைரவர், நோன்பு வைரவர், இளந்தாரி வைரவர், விறுமன், நாச்சியார், சங்கிலிக்கறுப்பன், நாகதம்பிரான், வன்னியர், அண்ணமார், பெரிய தம்பிரான், காத்தவராசன், அம்மன் போன்ற தெய்வங்களோடு பதினெண் வைரவர்களான ஆதிவைரவர், சடைவைரவர், ஆகாசவைரவர், பாதாள வைரவர், கிறிவ்ட்டதுட்ட வைரவர், சங்கார வைரவர், அகோர வைரவர், ஈக்கி வைரவர், ஆதிக்க வைரவர், வடுக வைரவர், மனோவிர வைரவர், நிர்வாணி வைரவர், கலியாணி வைரவர், கபாலவைரவர், உருத்திர வைரவர், உக்கிர வைரவர் ஆகியோருக்கும் மடை பரவப்படும். மடையைச் சுற்றி வைக்கப்பட்ட நெய்விளக்குகள் ஒளி பரப்பிக்கொண்டும் தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டும் இருக்கும். மடை பரவிய பிற்பாடு பூசாரியார் தெய்வங்களையும் பரிகலங்களையும் தாம் படைத்து மடையை ஏற்றுக் கொள்ளுமாறு பக்தியோடும் பணிவோடும் அழைப்பர். அழைக்கும் போது;

''ஐயனாருக்கும் பரிகலத்துக்கும் அவையும் அடைக்கலம்
நல்லதம்பிரானே நாயகனே களனியிலே பால் கிடையாத நேரம்
ஏந்தியும் இரந்தும் மடிப்பிச்சை வாங்கியும் எட்டிலொன்று
குறையாதிருக்கின்றது, பெற்றும் பெறாத பாவிகட்கு மண்டு
விளக்கிச் செல்வம் உண்டாக்கி, இருக்க வேண்டும், காட்டுக்குப்
போனேன் என்று நிற்க வேண்டாம். வைத்த மடையறியேன்
வையாத மடை அறியேன், இடமறியேன், வலமறியேன்,
மடையில் வந்து கண்ணை முழித்துப் பார்க்க வேண்டும்''[56]

எனப் பக்திப் பரவசத்துடன் போற்றுதல் செய்வர்.

இவ்வாறு மடையிலே தெய்வங்களைப் பாடி அழைத்த பிற்பாடு, அத் தெய்வங்களையும் ஐயனாரையும் பூசாரியார் மக்கள் விருப்பம் குறித்தும்,

56. சடவன் குளத்து ஐயனார் பத்ததி

உள்ளூர் நிலைமைகள் குறித்தும் நல்லவை நடைபெற வேண்டிப் பிரார்த்திப்பார். என்ன நோக்கத்தோடு கால்கோள் விழா ஆசிரியரின் அருளால் தொடக்கப் பெற்றதோ அதனையே பூசாரியார் ஏகோபித்த விருப்பமாகக் கொண்டு வேண்டிக் கொள்வர். அது பின்வருமாறு அமையும்.[57]

"ஆனைகரடி கடியாமல்
ஆனதோர் சர்ப்பம் தீண்டாமல்
மானமருத்துவம் இல்லாமல்
மைந்தனைப் பெற வரம் தா"

வேறு ஆலயங்களில்,

"பட்டிபெருக வேணும்
பாற்பானை பொங்க வேணும்
தேசம் செழிக்க வேணும்
செங்கோல் வளங்க வேணும்
நாடு தளைக்க வேணும்
நல்ல மழை பெய்ய வேணும்-நாயகனே
நல்லதம்பிரானாருக்கும் பயமடைக்கலமாக இருக்கவேணும்"[58]

எனப் போற்றுதல் செய்வர்.

பூசாரியாரும் நோன்புக்காரரும் மடை பரவும் வேளையிலே பக்தர்களும் அடியவர்களும் பிள்ளையார் சிந்து, சிவபெருமான் சிந்து, முருகன் சிந்து, ஐயனார் தோத்திரம், ஐயனார் சிந்து, வீரபத்திரர் சிந்து, வைரவர் சிந்து, விறுமன் சிந்து, அண்ணமார் சிந்து, நாகதம்பிரான் சிந்து, அம்மன் சிந்து, வதனமார் சிந்து முதலான சிந்துகளையும் தோத்திரங்களையும் முறையே படிப்பர். வேறு வன்னிமைகளில் ஐயனார் அகவல் அல்லது ஐயனார் அடைக்கலம்[59] என்னும் நூலைப் படிப்பர்.

---

57. மேலது நூல்
58. **ஆலங்குளத்து ஐயனார் கோயில் பத்ததி**
59. 'ஐயனார் அடைக்கலம்' என்னும் பிரபந்தம் ஆலங்குளத்து ஐயனார் கோயில் பத்ததியின் ஒரு பகுதியாகும். இது அகவல் பாவினாலேயே அமைந்திருக்கின்றது. நாற்பத்திரண்டு அடிகளைக் கொண்டது. இப்பாடல் ஐயனார் "தமக்கு அடைக்கலமாக யிருக்க வேணும்" என்று இரந்து போற்றுதல் செய்வதினால் பொதுமக்கள் இதனை **ஐயனார் அடைக்கலம்** என்றனர் போலும். இப்பாடல் பின்வருமாறு அமையும்.
ஐயனே நல்ல தம்பிரானே ஐயனாருக்கும்
ஐயனாளந்தாரி கரும பயமடைக்கலமா யிருக்க வேணும்
பூரணை புட்கலை நாச்சிமாருக்கும்
வீரமா காளருக்கும் பய மடைக்கலமாகயிருக்க வேணும்
படைக்குப்படை பன்னீராயிரம் படைக்கும்
பய மடைக்கலமா யிருக்க வேணும்
சயம்ப னென்னும் கட்டாடி துகிலெடுத்து
நிலப்பாவாடை தூளி மேலாப்பு முதலாக
வெடி கொடி மேளதாளம் வீதி சூளது வெளி(ட)

**பலியிடுதல்**

ஐயனார் கோயில்கள் எங்கும் பலியிடும் வழக்கம் இடம் பெற்று வந்தன. பலி நடைபெறும் கோயில்களிலே ஐயனார் மடைக்கு முன்பு ஒரு சீலையைத் தொங்க விட்ட பின்னர் வைரவர் முன்பு செல்வர். ஈழத்தில் ஐய்னார் கோயில்களிலே பலியிடும் வழக்கம் இருந்த போதும் அது ஐயனை வேண்டிச் செய்யப்படும் நிகழ்வு அன்று. ஐயனார் பலி வாங்கும் தெய்வமாக வன்னி மக்கள் கருதுவதில்லை. ஐயனார் பலி வாங்கும் தெய்வமும் அன்று. முன்பு நோக்கியவாறு தமிழகத்திலே உறையும் ஐயனாரைப் பலி வாங்கும் தெய்வமாக அடியவர் கருதுவதில்லை. அவரது பரிவார தேவர்களில் ஒருவரான மதுரைவீரரே பலி வாங்கும் தெய்வமாக கருதப்படுகின்றார். மதுரை வீரனுக்கு பலிப் பொருட்களைச் செலுத்துமிடத்து ஐயனார் முன் திரைச்சீலை ஒன்றினைப் போட்டு மறைத்தல் அந்நாட்டு மரபு. ஐயனார் வேண்டுவது சைவப் பலியேயாகும். அவருக்கு அறுகம்புல்லும் சிறுபுனையும்

---

மடையிருப்ப ஐயனே மெய்யனே ஆதியாகிய
அநாத நாட்டி நதி சூறகும பயமடைக்கலம்
அழகமர் பிராட்டிக்குமய படைக்கலமாயிருக்க வேணும்
தில்லைவனம் முதலாயக் குறிஞ்சிநில மிறாய
ஆயிரத்து எண்நூற்றெட்டுக் காதவளிக்கு மடங்கிய தேவதைகளும்
ஆனை குதிரை படை பண்டார முதலாயக்
குதிரை மலையிலே வந்து குடியிருக்கின்ற நாயகனே
நல்லதம்பி நாற்கும் பயமடைக்கலமா யிருக்க வேணும்
அந்த இடத்திலே இந்துதிசை வீதி பார்த்துக்
கலவத்திடலிலே வந்து களவரைக் குத்தி
காடேற்றுகின ஐயனாருக்கு மய யனின்
நதாரிக்கு மலைகாத்த தண்டனுக்கு
மற்றுமுள்ள தேவாதிகளுக்கும் பயமடைக்கலமா யிருக்கவேணும்
அந்த இடத்திலே யிருந்து நயினாதீவிலே வந்
தவதரித்த ஐயனே ஆதியாகிய தம்பிரானே
நயினாதீவிலே யிருந்து வளிதிசை நோக்கி
காயா முனையிலே வந்தவதரித்தபடி நாடுமுதலாய
வெளனிலை அடைக்கமாய விதம் பெறு கற்
பூரம் சாந்து சந்தனம் முதலாயச் சகல
மனதும் ஒப்புக் கொள்ளும் நாயகனே
நல்ல தம்பிரானுக்கும் பயமடைக்கலமாக யிருக்க வேணும்
வையத்தமடை அறியேன் வையாமடை
அறியே னயிட கனாக அறியேன்
பலசுவை யறியேன் நாயகனே நல்லதம்பிரானே
கட்டாடி நாய மாருக்கும் பயமடைக்கல மாயிருக்க வேணும்.
நாச்சிமா ரென்றில பன்னிரு பேருண்டு தீபாலாஞ்ச
நாச்சிமாருக்கும பயமடைக்கலமா யிருக்கவேணும
பட்டிபெருக வேணும் பாற்பானை பொங்க வேணும்
தேசம் செழிக்க வேணும்
செங்கோல் வளங்க வேணும்
நாடு தளைக்க வேணும்
நல்லமழை பெய்ய வேணும்-நாயகனே
நல்ல தம்பிரானுக்கும் பயமடைக்கலமா யிருக்கவேணும்
(உயிலங்குளம் ஐயனார் கோயில் ஏட்டிலிருந்து கட்டுரையாசிரியரால் தொகுக்கப்பட்டது. இவற்றில் சில சொற்கள் பொருள் விளங்கு மாறில்லை)

பலிபொருளாகப் படைக்கின்றனர் என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. வன்னிமைகளில் ஐயனார் பெருந்தெய்வம். அவரது பரிவார தேவர்களில் ஒருவரான வைரவருக்கே பலியிடப்படுகின்றது. அதிலே அவரது பரிகலங்களும் பங்கு கொள்வர் என்று மக்கள் நம்புகின்றனர். இங்கு ஆடுகளே பெரிதும் பலிப் பொருளாக விளங்குகின்றன. பலிப்பொருளாக நேர்த்திக்குட் படுத்தப்பட்ட ஆட்டினை நீராட்டி அலங்கரித்து நிற்ப, பூசாரியார் நேர்த்தி முடித்த பின், அவர் தூக்கி நிற்க பலி இடம்பெறும். ஏனைய நேர்த்திப் பொருட்களான கோழி, ஆடுகள் பிறவும் கூறி விற்று ஆலயத்தின் உபயத்திற்கு அளிப்பர். இன்று இவ்வழக்கம் அடியோடு ஈழமெங்கிலும் தவிர்க்கப் பட்டுள்ளது.

வன்னிமைகளைப் பொறுத்தமட்டில் ஆண்டவனுக்குப் பலியிடுதல் தவிர்க்க முடியாத செயலாக அமைந்திருக்க வேண்டும். அடர்ந்த காட்டின் மத்தியிலும், ஆங்காங்கே பாலைவனச் சூழ்நிலையும், அவ்வப்போது தொடர்ச்சியான வெள்ளப் பெருக்கையும் வறட்சியையும் தாங்கியும், இத்தகைய இயற்கைச் சக்திக்குப் பயந்தும், அடர்ந்த காட்டினுள்ளே கொடிய விலங்குகளுக்கும், தீய சர்ப்பங்களுக்கும் அஞ்சி வாழ வேண்டிய சூழ்நிலையிலே வாழ வேண்டி இருந்த மக்கள், பண்டைய தமிழ் மக்கள் போன்று இயற்கையின் ஆதார சக்தியினை அமைதிப்படுத்துவதற்காகவும் கொடிய விலங்குகளிடமிருந்தும், ஊர்வனவற்றிடமிருந்தும் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் பலியிடும் வழக்கத்தை மேற்கொண்டனர் போலும். இவற்றைச் செவ்வனே செயற்படுத்துமிடத்து இயற்கைச் சக்தியும், தீய தேவதைகளும் அமைதி பெற்று தமது அமைதியான சுபீட்ச வாழ்வுக்கு உறுதுணை புரிந்து வருகின்றன என பூரணமாக நம்பினர். ஒரு விதத்தில் தீய சக்திகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி தம்மைக் காக்கக் கூடிய பெருந் தெய்வம் ஐயனாரும் அவரது பரிவார மூர்த்திகளும் பரிகலங்களும் என்று கொண்டனர் போலும். இதனாலே வன்னிமை மக்களால் ஐயனார் பெருந் தெய்வமாகக் கருதப்பட்டார். வன்னிமை எங்கும் ஐயனார் ஆலயங்கள் நிறைந்து காணப்படுவதற்கு இந்த நம்பிக்கையே காரணமெனலாம்.

பொங்கல், மடைபரவல் முடிந்த பிற்பாடு ஐயன் மருந்து வேளை ஓதிக்கட்டுதல், நேர்த்திக்கடன் செய்தல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், சாமி ஆடிச்சொல்லுதல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

**ஐயன்வேளையும் மருந்தும்**

பொங்கலின் இறுதியிலே மஞ்சள் நிற சிறு வில்லைகள் போன்ற மருந்தினையும் சுமார் ஆறு அங்குல நீளமுள்ள வேளையினையும் பூசாரியார் வேண்டும் அடியார்க்கு வழங்குவர். ஐயன் வேளையும் மருந்தும் நோய் பிணி தீர்க்கும் அருள் பொருந்திய ஔடதம் என்று கருதுவதோடு அவை துஷ்ட தேவதைகளினின்றும் தம்மைக் காப்பாற்றும் ஆற்றல் வாய்ந்தவை என்பதிலும் மக்கள் அசையாத நம்பிக்கை உடையவர்கள். உடற்கூற்று

நோய்களின் போதும் பிரசவத்தின் போதும் ஐயன் மருந்தினை[60] நீரில் கரைத்து உட்கொள்வதின் மூலமும் பிரசவ நோய்களும் பிறவும் எவ்வித கஷ்டங்களுமின்றி தீர்க்கப்படுகின்றன என்பதில் இன்றும் வன்னிமை மக்கள் நம்பிக்கை உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

நோய்வாய்ப்பட்ட போதும், துஷ்ட தேவதைகளால் தாம் பீடிக்கப்பட்டிருப்பதாக உணரும் போதும் பூசாரியிடமிருந்து வேளை கட்டுவர். அவர் ஓதிக் கட்டுவதால் இதனை "வேளை ஓதிக்கட்டுதல்" என்பர். இவ்வேளை ஓதிக்கட்டுவதன் மூலம் மக்கள் குணம் பெற்று வருவர்.

### தண்ணீர் ஓதுதல்

வயல் நிலங்களில் நெற் செய்கையின் போதும் பயறு, உளுந்து முதலான மேட்டுப் பயிர் செய்கையின் போதும் விலங்குகள், வராவண்ணமும் பூச்சி, புழுக்கள், பறவைகள் முதலானவை பயிர்களைத் தாக்கா வண்ணமும் இருப்பதற்காக ஐயனாரை வேண்டி தண்ணீர் ஓதுவித்து, வயல் நிலங்களுக்கும் மேட்டு நிலங்களுக்கும் அவற்றைக் கொண்டு சென்று தெளிப்பதன் மூலம் விலங்குகள், மிருகங்கள், பறவைகள், பூச்சி, புழுக்கள் முதலான தீய ஜந்துக்களிடமிருந்து பயிர்ச்செய்கைகளைக் காப்பாற்றலாம் என்பது அவர்களது நம்பிக்கையாகும்.

### சாமி ஆடிச் சொல்லுதல்

பூசாரியார் ஐயன் மேற்கொண்ட ஆசார அனுசரணையாலும் அவன் மேற்கொண்ட பக்தியின் ஈடுபாட்டாலும் அவன் புகழ் வியந்து பாடும் பொழுது உருக்கொண்டு அக்கிராமத்திலோ அன்றி சமூகத்தினரிடையோ நடைபெற இருக்கும் வருங்காலம் பற்றிய நிகழ்வுகளைச் சூசகமாகவோ வெளிப்படையாகவோ குறிப்பிடுவதோடு, அடியவர்களுள் வேண்டுவார் வேண்டவும் பயன் சொல்வார். இதனைச் சாமி ஆடிச்சொல்லிற்றென்றும் கட்டுச்சொல்லுதல் என்றும் குறி சொல்லல் என்றும் மக்கள் அழைப்பர். தமிழ் நாட்டிலே இந்நிகழ்ச்சியினை ஆவேசம் கொள்ளுதல் என்று அழைப்பர். பூசாரியார் சொல்லிய அறிவுரை, குறிப்புரைகளைக் கொண்டு மக்கள் தமது வருங்கால சமூக, வாழ்க்கையில் ஈடுபடுவர்.

### நேர்த்திக்கடன்

ஐயன் பூசைகளின் போதும் இடை நிலைகளிலும் மக்கள் தமது நேர்த்திகளான அன்றாகாசும் தென்னம்பிள்ளையும், பிள்ளைகூறுதல், (பிள்ளையைக் கூறி விற்று வாங்குதல்) காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி ஏற்றுதல், பாற்

60. ஐயன் மருந்து உள்ளி, நற்சீரகம், வேர்க்கொம்பு, மஞ்சள், பனங் கற்கண்டு ஆகிய எழு பொருட்களையும் ஒன்றாய்ச் சேர்த்து இடிப் பதன் மூலம் இம்மருந்தினைத் தயார் செய்வர். இதனை நோன்புக் காரர்களே செய்வர். பெண்கள் ஐயன் கோவிலில் எதனையும் செய்வதில்லை. ஐயன் சடங்கில் எதிலும் பங்குபற்றுவதுமில்லை. ஐயன் பிழை பொறுக்காத் தெய்வம் என்பது இப்பிரதேச மக்களின் முழுமையான நம்பிக்கையாகும்.

சொம்பு எடுத்தல், மடிப்பிச்சைகொணர்தல், காணிக்கை செலுத்துதல் முதலான கடன்களைச் செய்து நேர்த்தியைப் பூர்த்தி செய்து கொள்வர்.

**தூளிபிடித்தல்**

திருக்குளிர்த்தி, அம்மானை பாடுதலுக்கு முன்பாகத் தூளிபிடித்தல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். இரு சலவைத் தொழிலாளி வெள்ளைத் துணியைப் பிடித்திருக்க பூசாரியார் உருக்கொண்டு அதிலே ஐயன் மந்திரம் தாவி பிரம்பு, அம்பு, வில்லு வைத்து அவற்றுடன் 9 பாக்கு, 9 வெற்றிலை, அரிசி, திரி என்பவற்றை வைத்து பிரம்பினை எடுத்து, திக்குப் பாலகரை வேண்டி உருவேறி நிற்க ஒவ்வொரு பாக்கும் வெற்றிலையும் மடித்துக் கொடுக்க நான்கு திக்கும் நேர்ந்த பின் தூளிக்கு மேலாக வீசுவார். அவ்வாறே அரிசி, கொழுத்திய திரி ஆகியவற்றையும் நான்கு திக்கும் நேர்ந்து அரிசியை எறிந்து திரியை அணைப்பர். ஐயனின் தேவதைகளைப் பிரீதி செய்வதே இதன் நோக்கமெனலாம். தூளி பிடிக்கும் பொழுது சில வன்னிமைகளில் பின்வருமாறு போற்றுதல் செய்து அழைப்பர்.[61]

"ஆதிபரமேசுவர மதகரி
இவ்விடத்தே வா வா
ஓம்பரிகலமே வா வா
ஓம்சனிசத்திய ஆதி நாராயண்ணா
உனிய வா, வா.

தூளிபிடித்த பிற்பாடு ஐயனார் தோத்திரத்தை அவரது மனங்குளிரப் பாடி அவனுக்கு இசைந்த விளையாட்டான யானையேற்றம், குதிரையேற்றம் முதலான விளையாட்டுகளை விளையாடுவர். நோன்புக்காரரே பூசாரியார் இவ்விளையாட்டை விளையாடுவதற்கு உதவுவர். ஆனால், இன்று இவ்விளையாட்டுக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

**பரிகலம் வழிவிடுதல்**

ஐயனாரின் பொங்கலின் இறுதி நிகழ்ச்சியாக வழிவிடுதல் அல்லது பரிகலம் வழி விடுதல் அல்லது பரிகலம் வழி வெட்டுதல் என்னும் சடங்கு நடைபெறும். கும்பத்திலும் தூளியிலும், கச்சிலும் மற்றுஞ் சடங்குகளிலே அழைக்கப்பட்ட ஐயனாரின் பரிகலங்களை வாழ்த்திப்பாடி வழி அனுப்பும் சடங்கே பரிகலம் வழிவிடும் சடங்காகும். பூசாரியார் முன் செல்ல நோன்புக்காரரும் அடியவர் சிலரும் பின்னே செல்ல பறை அதிர பலிப் பொருட்களைக்கொண்டு பரிகல வெட்டை என்ற வெளியான இடத்தை அடைவர். அங்கே பூசாரியர் இளநீர் வெட்டி பல்வகைச் சூலங்களைப் பல்வகை வடிவங்களில் நிலத்திலே இட்டு, உருவுடன் எண் திசையும் நோக்கி வணங்கி வெற்றிலை, பாக்கு, பழம் முதலான பொருட்களை நிலத்திலேவைத்து,

"வந்த பரிகலமே வாராமல் நின்றவரே
காவல் நில்லாது நீங்கள் இருக்கும்
தேசத்திற்குச் செல்லவே சுவாகா![62]

61. உயிலங்குளத்து ஐயனார் கோயில் பத்ததி இதனை உதவியவர் இவ்வாலய சுப்பிரமணிய பூசாரியார் ஆவார்.
62. மேலது நூல்.

என வாழ்த்தி அனுப்புவர். பின்னர் தலை முழுகி உடை மாற்றுவர். ஐயனார் கோயிலின் பூசாரிமார்களின் உடைகள் வேறுபட்டனவாகவே காணப்படுகின்றன. சடவன்குளத்து பூசாரியார் தைத்த ஆடைகளை அணிவர். ஏனைய ஆலய பூசாரிமார் வெள்ளை வேஷ்டியும் கச்சுவும் அணிந்து கொள்வர். பரிகலம் வழி விட்ட பின்னர் பூசாரியார் குளித்து ஆலயத்துக்கு வந்து கும்பபூசை நோன்பழித்துக் கொண்டு மடை பிரித்து பொங்கல் பண்டங்களை அடியவர்களுக்கும் பக்தர்களுக்கும் வழங்குவார்.

சிலர் வன்னிமக்களால் போற்றப்படும் வன்னித் தெய்வத்தை ஐயனாருடன் இனங்காண முற்படுவர்.[63] வன்னித் தெய்வத்தின் முக்கியத் துவம் ஆடு, மாடு முதலான வீட்டு மிருகங்களையொட்டியதாகவே காணப் படுகின்றது. ஐயனாரை வன்னிமை மக்கள் பல்வகை நோக்கில் வழிபடு கின்றனர். அவ்வகை நோக்கில் எவ்வித அம்சங்களோ வன்னித் தெய்வத்தில் இனங் கொள்ளுவதற்கில்லை. வன்னி என்ற பெயரைக் கொண்டு குமாரக் கடவுளின் பெயர் வன்னக்கருப்பன் என குறிக்கப்படுகின்றது. சிவன் வன்னிக்கருப்பன் என்றும் அக்கினி வன்னிநாதன் என்றும் அழைக்கப் படுவதாகக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஐயனாரின் பெயர் வன்னி என்ற சொற்பதத்தைக் கொண்டே பொருள் அமைதி கொண்டோ எங்கும் அமையவில்லை. வன்னித்தெய்வம் வன்னிராஜன் என்ற கிராமதேவதை யாகவே இனங்காண முடிகின்றது. அந்தவகையில் வன்னித்தெய்வம் வேறு, ஐயனார் வேறு. வன்னித்தெய்வத்தை ஏனைய கிராம தேவதைகள் போன்றே கொள்ளுதல் வேண்டும். ஆனால், வழிபாட்டு முறையில் வன்னித் தெய்வத்திற்கும் அண்ணமார் தெய்வத்துக்கும் சில உடன்பாடுகளை அவதானிக்க முடிகின்றது.

முடிவாக, சங்ககாலத்திலே வீர வழிபாட்டின் மையமாக விளங்கியவர் ஐயனாராவார். இக்காலத்தை அடுத்து வந்த காலப்பகுதியிலே பௌத்த, சமண மதங்களின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்பட்டமையால் ஐயனார் சாஸ்தாவாக இனங் கண்டு கொள்ளப்பட்டு ஒரு பரிணாம வளர்ச்சியைப் பெற்றார். பல்லவர் காலத்தில்ஏற்பட்ட பக்தி இயக்கம் சாஸ்தாவை சிவனின் புத்திரனாகக் கருதியதோடு புதிய பௌராணியக் கதைகள் தோன்றி அவரை அரிகரபுத்திரனார் ஆக்கியது. சோழர் காலத்தில் ஐயனார் மூல மூர்த்தி யாகவும் பரிவார மூர்த்தியாகவும் விளங்கியதோடு சிற்ப, விக்கிரக, வார்ப்புக் கலைகளுள்ளும்உட்படுத்தப்பட்டார். சோழர் காலமே ஐயனாரின் பரிணாம பரிபூரண நிலை எனலாம். ஈழநாட்டிலே ஐயனாரின் தோற்றம் சிங்கள மக்களிடையே ஆரம்பித்தன என்று கருதப்பட்ட பொழுதும் அவ்வழி பாட்டின் முழுமையும் நிறைவும் தமிழ் மக்களிடையே மாத்திரம் காணப்படு கின்றதெனலாம். யாழ்பாணக்குடா நாட்டில் பெரிதும் ஐயனார் வழிபாடு ஆகம, சிற்ப, சாத்திர விதிகளின்படி அமைந்து, ஆலயங்கள் பார்ப்பனரால்

---

63. முல்லை மணி., 1967, 'வன்னி நாட்டின் காவல் தெய்வம்' முன்னியவரே சைவநெறிக் கழகம் ஆண்டுமலர். பக். 20.

வழி நடத்தப்படுகின்றது. குடா நாட்டினுள்ளே ஐயனாரின் முக்கியத்துவம் மிகக் குறைவே. தீவுப்பகுதி இதற்கு விதி விலக்கெனலாம். வன்னிமைகளில் ஐயனார் வழிபாடு சோழ நாட்டுத் தொண்டைமண்டல மக்களின் குடிப் பெயர்வும் வேளைக்காரப் படையினர் நிலை பெற்றமையும் முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தன எனலாம். வன்னிமைகளே ஐயனார் வழிபாட்டின் தூய்மைக்கும் தனித்துவத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஆலய அமைப்பில் வழி பாட்டுச் சடங்கு முறையில் ஆகமத்தில் (பத்ததி) வன்னிமை யாழ்பாணக் குடா நாட்டினின்றும் முற்றிலும் வேறுபட்டது. பரம்பரைப் பூசாரிகளால் சுயமொழியில் யாவரும் புரிந்து கொள்ளும் முறையில் சடங்குகளை நடத்திச் செல்வதோடு சந்நிதி விரோதமின்றி மக்கள் யாவரும் இறைவனின் குழந்தைகள், அவன் அடியவர்கள், பக்தர்கள் என்ற மட்டில் மனமொருமித்த வழிபாடு நடைபெறும் இடமாகவும் இல்வாலயங்கள் விளங்குகின்றன. பல நூற்றாண்டுகளாக அடர்ந்த காட்டின் மத்தியிலே கொடிய விலங்குகளின் நடமாட்டத்திற்கிடையிலும் தீய ஜந்துக்கள் பீடைகளுக்கிடையிலும் 'ஐயனே' என்று போற்றி,அவனருளால்எவ்விதகுறைகளும் இன்றி,சுபீட்சமாக வாழ்ந்து வருவதைக் காணும்பொழுது, வன்னிமை மக்களின் தூய பிரார்த்தனையை ஐயன் செவிமடுக்கின்றான் என்ற கூறுதல் வேண்டும். உலகாயுத நம்பிக்கை யினின்றும் முற்றிலும் வேறுபட்டது ஆத்மீக நம்பிக்கை. இவ்வாத்மீக நம்பிக்கையின் ஒரு பகுதியாகவும் அதன் வளர்ச்சிக் கட்டத்தின் ஒரு படி யாகவும் ஐயனார் வழிபாடு தமிழ் மக்களிடத்தில் நிலவி வருவதென்பதோடு, அதுவே ஒரு குழு மக்களின் உலகியல் வாழ்வின் பிடிமானத்துக்கும் உரைக் கல்லாகவும் அமைந்து விளங்குகிறதெனில் அது பொருள்முதல் வாதத்தை அறியாதோரின் கூற்றன்று.

# ஈழநாட்டில் ஐயனார் ஆலயங்கள்

| ஆலயங்களின் பெயர் | அமைவிடம் | பூசகர் | விழாக்கள் தினம் | பிரபந்தங்கள் | அரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| | | யாழ்ப்பாண மாவட்டம் | | | |
| உயரப்புலம் ஐயனார் ஆலயம் | 1ஆம் வட்டாரம், நெடு-மேற்கு, நெடுந்தீவு | பிராமணர் | மகோற்சவம் ஆனி | திரு ஊஞ்சல் | நெடுந்தீவு |
| ஐயனார் கோயில் | அனலைதீவு | ,, | ,, | திரு ஊஞ்சல் கவசம்;அகவல் தோத்திரம் தனிப்பாடல் | ஊர்காவற்றுறை தீவுப்பகுதி-வடக்கு |
| *ஐயனார் கோயில் | 5-ஆம் வட்டாரம் அனலைதீவு | ,, | பொங்கல் சித்திரை | — | ,, |
| ஐயனார் கோயில் | சுருவில், ஊர்காவற்-றுறை | ,, | பொங்கல், விசேட பூசைகள், தை | — | ,, |
| வியாவில் ஐயனார் கோயில் | காரைநகர் | ,, | ,, | — | ,, |
| ஸ்ரீ ஐயனார் கோயில் | அராலி-கிழக்கு அராலி | ,, | விசேட பூசை, பொங்கல் | — | சங்கானை(வலிகாமம் -மேற்கு) |
| ஐயனார் கோயில் | வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக் கோட்டை | ,, | பொங்கல் | — | ,, |

| ஆலயங்களின் பெயர் | அமைவிடம் | பூசகர் | விழாக்கள் தினம் | பிரபந்தங்கள் | அரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| கரண்டன்குளம் ஐயனார் கோயில் | தெல்லிப்பளை | பிராமணர் | மகோற்சவம் பங்குனி | திருஊஞ்சல் | தெல்லிப்பளை (வலி காமம்-வடக்கு) |
| *காகங்கரைந்தான் ஐயனார் கோயில் | பொன்னாவெளி, பாலாவி, பூநகரி | பூசாரி | பொங்கல் | சிந்து | பூநகரி |
| ஐயனார் கோயில் | சாவகச்சேரி | பிராமணர் | விசேட பூசை | — | சாவகச்சேரி (தென்மராட்சி) |
| வரணி ஐயனார் கோயில் | | | பொங்கல் | — | கராவட்டி (வட மராட்சி-கிழக்கு) |
| மகாமாரி ஐயனார் கோயில் | கொழும்புத்துறை கிழக்கு, கொழும்புத் துறை | ,, | ,, | — | யாழ்ப்பாணம் |
| சுன்னாகம் ஐயனார் கோயில் | ஐயனார் வீதி, சுன்னாகம் | ,, | மகோற்சவம் மாசி | திருஊஞ்சல், பதிகம், தோத்திரம், கப்பற்பாட்டு | உடுவில் |
| ஐயனார் கோயில் | சுதுமலை | ,, | மகோற்சவம் | திருஊஞ்சல் | ,, |
| மாத்தளை ஐயனார் கோயில் | வடலியடைப்பு, பண்டத்தரப்பு | ,, | விசேட பூசை | — | சண்டிலிப்பாய் |
| ஐயனார் கோயில் | கட்டுவன், சரவணை கிழக்கு, சரவணை | ,, | விசேட பூசை பொங்கல் | — | வேலணை (தீவுப்பகுதி தெற்கு) |
| ஐயனார் கோயில் | மண்டைதீவு | — | பொங்கல் | — | ,, |
| ஐயனார் கோயில் | வேலணை-மேற்கு வேலணை | — | ,, | — | ,, |

| ஆலயங்களின் பெயர் | அமைவிடம் | பூசகர் | விழாக்கள் தினம் | பிரபந்தங்கள் | அரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| | | வவுனியா மாவட்டம் | | | |
| *சடவன்குளத்து ஐயனார் கோயில் | ஆதிசடவன்குளம், வவுனியா | கட்டாடி (பூசாரி) | பொங்கல் மடை ஆவணி | ஐயனார் தோத்திரம், ஐயனார் சிந்து† | நெடுங்கேணி (வவுனியா-வடக்கு) |
| *உச்சிமலை ஐய்னார் கோயில் | நெடுங்கேணி | ,, | பொங்கல் | சிந்து | ,, |
| *ஐயனார் கோயில் | பாலமோட்டை | ,, | ,, | ,, | ,, |
| *ஐயனார் கோயில் | சேமமடு | பூசாரி | ,, | ,, | ,, |
| *ஆதிஐயன் கோயில் | கனகராசன் | ,, | பொங்கல் மடை | ,, | ,, |
| *ஐயனார் கோயில் | தவசியாகுளம் | கட்டாடியார் | பொங்கல் | ,, | ,, |
| *ஐயன்ார் கோயில் | நொச்சிக்குளம் | பூசாரியார் | ,, | ,, | ,, |
| *ஐயனார் கோயில் | மரையடித்தகுளம் | ,, | ,, | ,, | ,, |
| *ஐயனார் கோயில் | ஆத்திகுளம் | கட்டாடியார் | ,, | ,, | ,, |
| | | முல்லைத்தீவு மாவட்டம் | | | |
| *வலைஞ்ஞன் மடம் ஐய்னார் கோயில் | வலைஞ்ஞன் மடம், வட்டதொட்ட வழி, முல்லைத்தீவு | பூசாரி | பொங்கல் ஆனி | சிந்து | முல்லைத்தீவு (கரைத் துறைப் பற்று) |

| ஆலயங்களின் பெயர் | அமைவிடம் | பூசகர் | விழாக்கள் தினம் | பிரபந்தங்கள் | அரசாங்க அதிபர் பிரிவு |
| --- | --- | --- | --- | --- | --- |
| *ஆண்டான்குளம் ஐயனார் கோயில் | ஆண்டான்குளம் முல்லைத்தீவு | ,, | பொங்கல், மடை, ஆனி | ஐயனார் தோத்திரம் ஐயனார் சிந்து | முல்லைத்தீவுகாரைத் துறைப்பற்று |
| *ஐயனார் கோயில் | கச்சிலைமடு, ஒட்டி சுட்டான்-முல்லைத்தீவு | ,, | பொங்கல் மடை | | ,, |
| *ஐயனார் கோயில் | ஒட்டிசுட்டான் முல்லைத்தீவு | ,, | பொங்கல் | சிந்து | ,, |
| *ஐயனார் கோயில் | புதுக்குடியிருப்பு | ,, | ,, | ,, | புதுக்குடியிருப்பு |
| *ஐயனார் கோயில் | கல்வினான் | ,, | பொங்கல், மடை ஆவணி | ஐயனார் பதிகம் | துணுக்காய் |
| *ஐயனார் கோயில் | துணுக்காய் | ,, | ,, | — | ,, |
| *ஐயனார் கோயில் | உயிலங்குளம் | ,, | பொங்கல் மடை ஆவணி | ஐயனார் அகவல் | ,, |
| *ஐயனார் கோயில் | கொல்ல விளாங்குளம் | பூசாரியார் | ,, | | பாண்டியன்குளம் (மந்தை-கிழக்கு) |
| *ஐயனார் கோயில் | வன்னிவிளாங்குளம் | ,, | பொங்கல்,ஆனி | | ,, |
| *ஐயனார் கோயில் | கிடாப்பிடிச்சகுளம் | ,, | பொங்கல்,ஆவணி | | ,, |
| | | மட்டக்களப்பு மாவட்டம் | | | |
| *ஐயனார் கோயில் | மண்டூர் | பூசாரி (கட்டாடி) | | ஐயனார் அகவல்‡ ஐயனார் காவியம்‡ | |
| *பரமரையினார் | புளியன்தீவு மட்டக்களப்பு | கட்டாடி | | — | மண்முனை-வடக்கு |

| ஆலயங்களின் பெயர் | அமைவிடம் | பூசகர் | விழாக்கள் தினம் | பிரபந்தங்கள் | அரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| *ஐயனார் கோயில் | எருவில், களுவாஞ்சிக்குடி | காட்டாடி | | ஐயனார் அகவல் ஐயனார் காவியம் | களுவாஞ்சிக்குடி மண்முனை-தெற்கு எருவில்பற்று |
| *சபரி ஐயப்பன் கோயில் | குருக்கள்மடம் | — | பொங்கல் | — | ,, |
| *ஐயனார் கோயில் | செங்கலடி | ,, | ,, | ஐயனார் காவியம் ஐயனார் அகவல் | வாழைச்சேனை |
| | | **திருகோணமலை மாவட்டம்** | | | |
| *ஐயனார் கோயில் | கொக்குளாய் | பூசாரி | பொங்கல் | — | |
| *ஐயனார் ஆலயம் | தென்னமரவாடி | ,, | ,, | — | |
| | | **புத்தள மாவட்டம்** | | | |
| *உப்புக்குளத்தடி ஐயனார் கோயில் | உப்புக்குளம், உடப்பு, சிலாபம் | பூசாரி | பொங்கல் | — | ஆராய்ச்சிக்கட்டு |
| *மருதங்குளத்து ஐயனார்கோயில் | மருதங்குளம், சிலாபம் | ,, | ,, | — | ,, |
| | | **அம்பாறை மாவட்டம்** | | | |
| *ஐயனார் கோயில் | தளவட்டான், கல்முனை | பூசாரி | பொங்கல் | | கல்முனை |
| *ஐயனார் கோயில் | புதுக்காடு, இராமநாதபுரம் | ,, | ,, | | ,, |
| *ஐயனார் கோயில் | பாண்டிருப்பு | ,, | ,, | | ,, |

குறிப்பு :

* இவ்வடையாளம் கோயில்கள், ஆகம, சிற்ப சாத்திர விதிமுறைகளுக்கு அமையாது, சிறிய கோட்டங்களாகவும், மரங்களின் கீழும் அமைந்த ஆலயங்களாகக் காணப்படுவன.

† வன்னிப் பிரதேசத்திற் போற்றப்படும் சிந்தில் ஒவ்வோரிடத்திலும் அமைந்து காணப்படும் ஐயனார் போற்றப் படுவதினால் இப்பிரதேசத்தின், எல்லா ஆலயங்களிலும் ஒருவகையான சிந்து படிக்கப்படுகின்றது. ஆனால், இதற்கு விதிவிலக்காகப் பூநகரி துணுக்காய் பிரதேசங்களில் இவ்வாலயங்களுக்குச் சிறப்பாக அமைந்த சிந்து படிக்கப்படுவதை அவதானிக்கலாம். சிந்து வடிவத்தினைப் பதிகம் என்று சொல்லும் வழக்கும் இப்பிரதேச மக்களிடம் உண்டு.

‡ ஐயனார் அகவல், ஐயனார் காவியம் ஆகிய இரு நூல்களும் மட்டப்பிரதேச ஐயனார் ஆலயங்களில் போற்றப் படுகின்றன. அவ்வப் பகுதிக்கான சிறப்பான பிரபந்தங்கள் இன்றும் எழவில்லை.

இவ்வாய்வுக்கான களவாய்வினை மேற்கொண்ட பொழுது தம்மாலான உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கிய பின்வருவோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| பெயர் | வயது | தொழில் | வதிவிடம் |
|---|---|---|---|
| செல்லையாசயம்பு | 67 | பூசாரியார் | ஆதிசயன்குளம் |
| தம்பையா சுப்பையா | 86 | பூசாரியார் | நெலுக்குளம் |
| இராசையா கார்த்திகேசு | 62 | பூசாரியார் | மல்லாவி, துணுக்காய் |
| சுப்பிரமணியம் | 50 | கமம் | உயிலங்குளம் |
| கார்த்திகேசு | 81 | கமம் (பூசாரி) | உயிலங்குளம் |
| ஐயம்பிள்ளை | 61 | கமம் | குமிழமுனை |

# Book Review

| | | |
|---|---|---|
| Title of the Book | : | The King and Clown in South Indian Myth and Poetry |
| Author | : | David Dean Shulman |
| Publisher | : | Princeton University Press, New Jersey |
| Year | : | 1985 |
| Pages | : | 15+408 |

The author rightly refers to culture's search for meaning in the inner and outer "semantic dimension of social reality." However, without proceeding to explain the range of cultural meanings in all that belongs to the Dravidian, the author has descended into the political order. In this pursuit, he thinks in terms of *"a strong political centre"* as against what Heesterman calls "the king's ultimate separation from the transcendent authority rooted in Brahminical values." How far Heesterman was right in bringing the Dravidian concept of kingship to fall in line with a common ancient concept is one to be seen from different disciplinary efforts. The Brahmanical identity and superiority become an obsession with the author and helps him greatly to confuse and mystify the Northern and Southern patterns. The Tamil king in tradition was not the embodiment of a sacrificial persona though the Cōḷa dynasty appears to have copied much of the Aryan concepts through import of Brahmin settlers. The author refers to Parantaka I ordering the gift of three villages in the Toṇṭai region as *prammatēya*. The concern of the author appears to lie with the Aryan-Brahmin supremacy to the neglect of the more valuable and meaningful Dravidian. The Brahmins to him become "the repositories and symbols of the supreme values of the tradition." Hence "ritualistically the king will seek to transfer his load of evil to the Brahmins" (Page 30). ' The Brahmin carries with him the ultimate values of the society, and its ultimate authority." (Page 31)

Due to incomprehension of the hold Saivism had on the Tamil people and on the Tamil kingly order as well, as failure to understand the symbolism of surrender at the Still Point which is the Resting Foot of the Cosmic Dancer, the author connects up his theme by devious devices and inferences. Chidambaram or Thillai was the centre of

consciousness in Saiva tradition. The reference to Kūṟṟuvanāyanār, "the pure *Cēra* of great lineage" speaks sufficiently of the author's ignorance and indifference to basic and substantial values which the kingly order was expected to uphold. The understanding of Cēkkiḻār in this regard by the author shows a profound ignorance of the *Cēra, Cōḻa, Pāṇṭya* order of kingship and a lack of comprehension of Saivism's role in giving meaning to kingship. (Pages 32.33). Even the understanding of the majestic compilation called *Periya Purāṇam* is disfigured by Aryan-Brahmanical obsession. The story of *Cuntarar* has a symbolism all its own and to infer clownishness reveals lack of insight.

If the king was able to live out "the fervently admired processes of softening, flowing, dissolving one's heart and mind in the liquid sensation of ultimate truth" (P. 255) it alone showed perfectitude in the kingly order. It is wrong therefore to conclude that the South Indian kingdom was "a state without a centre" (P. 256). Rather it has to be conceived of as the only State with a centre and therefore the valid thing in kingship. The Centre was there at the Still Point of the turning world which is where the Dance of Siva always is. That represented a symbol with a redeeming power.

Space prevents a detailed examination of the entirely misleading and subjective treatment of the subject by the author. Since, as the author observes, "there is an historical link between the Brahmin and the clown" (P. 152), I shall leave out any more of the author's "psychology of Brahmin clowning".

Failure, on the other hand, to project the science of Saiva Sitthanta into the understanding of Tamil tradition has made the book deviate from the objectivity that should have held ground. The book itself is possessed by "the demons of the Triple City" which Saivism calls for destruction *āṇavam, kaṉmaṉ, māyai.* Brahminism had only one role to play which was to keep the temples built by the kings sacred through Sanskrit incantations. What, had resulted has been no doubt a heroic tragedy which is the author's own comic transformation by which the most valued and sacred has to be figured out at the most profane levels. In the author's own concluding words it is a 'negation through comic transformation and transcendence."

The author has failed to grasp the meaning of kingship as understood in the Tamil tradition. Kingly power was the essence called *Caiva niti* which gave the final meaning to *aṟam*. The author has

unfortunately failed to fathom the depths of Tamil in the *Cittānta cāctrās* when he writes his Chapter VIII. The Cōḷa king Rācarāca I built the Brahadisvara temple in Tanjore. All temples were masterpieces of dedication through the art called *cilpa-cāctra*. It was the Tamil king who led in pilgrimage. The idea of "ascension of Siva's heroic clowns" in Brahadisvara is too far-fetched because the temple signified for king and commoner a *tiruviḷaiyāṭal* wherein life took its most symbolic and significant role. In the natural rhythm of life was the inter-play of the opposites and kingship showed the way to a reconciliation. There was no "mixed outlook" for the *Cōḷa* king's and nothing called the 'comic' however much the author may make it appear as a "transformation and transcendence".

The Tamil tradition took dance as the essential component of education along with literature and music. Bharata Natyam is the rich cultural inheritance of the Tamil people and, during the Cōḷa period, architecture and sculpture reached the highest peak. Dance meant that of gnosis which was a real and meaningful experience. There was hence no need of a clown to play tortuous and irreverant roles.

It was a fallacy to have thought of the Brahmin as the "womb" of kingship and of the world (P. 110). Tamil, unsullied by Sanskrit, had a character all its own which modern research appears to ignore. The author's eloquent style of writing has taken the better of the objectivity needed for a difficult subject dealing wholly with the Tamil.

C. RAJASINGHAM

# நூல் மதிப்புரை

நூல் பெயர் : தமிழ் அறிவுக் கோட்பாடு
ஆசிரியர் : பேராசிரியர் க. நாராயணன், எம்.ஏ., எம்.எட்.,
பதிப்பகம் : தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
ஆண்டு : 1985
விலை : ரூ. 12-50
பக்கம் : 114

புதுச்சேரியில் தாகூர் கலைக்கல்லூரியின் மெய்ப் பொருளியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றுபவர் இந்த நூலாசிரியர். இந்த நூலின் மூலம் தமிழிற்கு ஒரு புதிய சிந்தனையை—தமிழில் ஒரு புதிய சிந்தனையைத் தருவதற்குத் திரு. நாராயணன் முயன்றுள்ளார். இந்நூல் தமிழிற்கு ஒரு புதிய வரவு மட்டும் அன்று; தமிழ் மொழியை வளப்படுத்துவதற்குரிய புதிய சிந்தனைச் செல்வம் இது.

### புதிய வரவு

இந்த நூலிற்கு அணிந்துரை வழங்கிய அறிஞர், ''ஒரு புது (வகை) நூல் படைத்து இருப்பது கண்டு **தமிழ்த்தாய்** பெருமை கொள்வாள் என்று உறுதியாக நம்புகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது.

### கொள்கையா? கோட்பாடா?

''அறிவுக் கோட்பாடு'' எனும் தலைப்பில் உள்ள ''கோட்பாடு'' எனும் தொடர்மொழி பொருத்தம் அற்றது. இதற்குரிய காரணம் இந்த நூலில் தான், முதன்முதலாகத் தமிழரின் அறிவு பற்றிய சில கொள்கைகளை உருவாக்க முயன்றுள்ளார். அதற்குள் அவற்றைக் 'கோட்பாடு' எனும் பெயரால் சுட்டுவது தவறு என்பது இந்த மதிப்புரையாளனுடைய கருத்து.

உலகப் புகழ்வாய்ந்த பெட்ராண்ட் ரஸலே, தம்முடைய நூலிற்கு 'Theory of knowledge' என்றுதான் பெயரிட்டுள்ளாரே யொழிய, Doctrines of knowledge' எனப் பெயரிடவில்லை என்பது இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்.

### சிறப்பியல்பு

இந்த நூலிற்குரிய தனிப்பெருஞ் சிறப்பு, முதன்முதலாக தமிழருடைய சிந்தனையில் அறிவின் தோற்றம், இயல்பு, வகை, பயன் முதலியவற்றைத் தத்துவ நோக்கில்—சிறப்பாக நுண்பொருளியல் (Metaphysics) அறிவாராய்ச்சி இயல் (Epistemology) எனும் சிந்தனைத் துறைகளின் சுடரொளியில், தமிழருடைய அறிவுநலம் பற்றி ஆராய்ந்துள்ளமையாகும்.

"பழந்தமிழ் இலக்கியங்களில் இலை மறை காய்போல, மறைந்து இருக்கும், பொதிந்து இருக்கும் அறிவாதார முறை இயலை வெளிக் கொணர்ந்து காட்டுவதே, இந்நூலாசிரியரின் நோக்கம். இந்த நோக்கத்தில் அவர் பெரு வெற்றி பெற்றுள்ளார் எனக் கூறலாம்.

## நூலின் அமைப்பு

இந்த நூல் ஏழு இயல்களையும், இருபத்து நான்கு துணைத் தலைப்பு களையும், 172 அடிக் குறிப்புகளையும் கொண்டதாகும்.

"இந்தியத் தத்துவங்களில் அறிவுக்கோட்பாடு" எனும் இயலோடு இந்நூல் தொடங்குகிறது. தமிழர் அறிவுக்கோட்பாடு, அறிவின் இயல்பு, அறிவின் வகைகள், அறிவின் மூலங்கள், அறிவின் ஏற்புடைமை, அறிவின் பயன் என்னும் இயல்புகளைக் கொண்டது இந்நூல்.

## சிந்தனைச் சிறப்பு

மனித இனத்தின் தனிப் பெருஞ்சிறப்பே சிந்தனைத் திறனைப் பெற்று இருப்பதாகும் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். "சிந்தனையின் பயனே அறிவு' என்பதனையும் அவர் தெளிவுறுத்தியுள்ளார். இங்கே 'உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே' எனும் தொல்காப்பிய (சொல். 1) நூற்பாவை இணைத்து விளக்கியிருப்பாரானால், இந்நூலாசிரியரின் கருத்து, வலிவும் வனப்பும் பெற்று இருக்கும்.

'சிந்தனை என்பது யாது?' எனும் வினா அல்லது ஐயம் நமக்கு எழலாம். இதற்குச் 'சிந்தனை என்பது மனத்தின் இயக்கம்' (பக். 18) என எளிமையும் தெளிவும் வாய்ந்த விளக்கத்தை அளித்துள்ள இவ்வாசிரியரைப் பாராட்ட வேண்டும்.

'வட இந்தியத் (இலக்கியங்களில்) தத்துவங்களில் அறிவுக் கோட்பாடு' எனும் பகுதியில், பரந்து பட்ட பாரதத்தின் சம்ஸ்கிருதச் சார்புடைய அறுவகை தரிசனங்களும், சமணம், பௌத்தம் எனும் சமய தத்துவங்களும் க்ண்ட 'அறிவுக் கொள்கையைச்' சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். அவற்றுள் சாங்கிய தத்துவத்தில் இடம்பெற்றுள்ள அறிவுக் கொள்கைக் 'காரண—காரியக் கோட்பாடு' எனும் தலைப்பில் யாவரும் புரிந்துகொள்ளத் தக்க வகையில், சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது எனலாம். இந்த இயலிலேயே, இந்நூலிற்குத் தேவைப்படும் கலைச் சொற்களை, ஆசிரியர் நயமுறப் படைத்துக் கொண்டுள்ளார்.

## அறிவுக்கொள்கையின் இயல்புகள்

இரண்டாவது இயலில் 'தமிழர் அறிவுக்கோட்பாடு' எனும் பொதுத் தலைப்பில், இவ்வாய்விற்கு அடிப்படையான பல செய்திகளும், கருத்துகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

"அறிவுக் கோட்பாடு என்பது தத்துவக் கோட்பாடுகளுள் முதன்மை யானது; உறுதிப் பொருளை அறிவதற்கான மனிதனின் திறன்; அறிவைத் தரும் மூலங்கள், அறிவதற்கான வடிவங்களும் நெறிமுறைகளும், உண்மையும்

அதனை அறிவதற்கான வழிகளும்—என்பன பற்றிய கொள்கைகள் இவ் வறிவுக் கோட்பாட்டில் இடம்பெறுகின்றன'' (பக். 39) என்று திரு. நாராயணன் குறிப்பிட்டுள்ளமை, இந்த நூலின் நோக்கத்தையும் போக்கையும் புரிந்துகொள்ள உறுதுணையாகிறது.

**நான் யார்?**

'அறிவின் இயல்பு' எனும் நான்காம் இயலில், 'அறிகின்றவனாகிய நான்' எதைச் சுட்டுகிறது என்பதை விளக்கும் ஆசிரியர், தன்முனைப்பற்ற நிலையில் 'ஆன்மாவைக் குறிக்கும்' எனத் தெரிவிப்பது, இந்தியத் தத்துவத்தின் ஆணி வேரைப் பிடுங்கி, எடுத்துக் காட்டுவதாக அமைகிறது (பக். 56). அடுத்து அறிவானும், அறிவிப்பானுமாக அமைவதும் ஆன்மாவே என்பதனை ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ளார் (பக். 56-58). இங்கு நம் சமய அருளாளர்கள் 'அறிவானும் அறிவிப்பானும் தானே' என இறைவனையே சுட்டுவர் என்பது நினைவுகூரத் தக்கது.

நான்காம் இயல் 'அறிவின் வகைகள்' என்பதாகும். இத்தலைப்பில் ஒரு சிறு தவறு புகுந்துள்ளது. 'வகை' என்பதே பன்மை, எனவே 'வகைகள்' என எழுதத் தேவை இல்லை.

**அறிவின் வகைப்பாடு**

இதனுள், ''அறிவு என்பது ஒரு பெருந்தொகுதி; அதனுள் பற்பல வகைகள் உண்டு'' எனத் தெரிவிக்கும் ஆசிரியர், (பக். 61). காட்சி அறிவு (Empirical Knowledge), வடிவியல் அறிவு (Formal Knowledge), மதிப்பீட்டு அறிவு (Formative Knowledge) எனும் மூன்றுவகைப்பாட்டைப் பல வகையான மேற்கோள்களைத் திருக்குறளில் இருந்தும் பிற பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்தும் தக்க சான்றுகள் காட்டித் தெளிவுறுத்தும் ஆசிரியரின் திறன் போற்றத் தக்கதாகும்.

**எண்ணும் எழுத்தும்**

''வள்ளுவர் இவ்வடிவ இயல் அறிவுக்குச் சிறப்பிடம் தந்து விரிவாகப் பேசுகின்றார். வடிவவியல் அறிவை 'எண் அறிவு' என்றும், பிறவியல் அறிவை 'எழுத்தறிவு' என்றும் அவர் வகைப்படுத்தியுள்ளார். ''எண்ணும் எழுத்தும் அறிவுத் தொகுதியின் இரு பிரிவுகள். இவை இரண்டும் மனித வாழ்வைச் சிறக்கச் செய்யும் இரு கண்கள்'' எனும் ஜார்ஜ் ராஸ் (George Ross) என்பவர், 'சிந்தனையின் வரம்புகள் (The limits of Reasons) எனும் நூலில் வெளியிட்டுள்ள கருத்தினை, இந்நூலாசிரியர் மேற்கோளாகத் தந்துள்ளமை (பக். 65). திருவள்ளுவரின் சிந்தனைக்கு ஒளியூட்டுவதாக அமைந்துள்ளது எனலாம்.

**அறிவின் ஆதாரம்**

இந்நூலில ஐந்தாவது இயல், 'அறிவின் மூலங்கள்' (Sources of Knowledge) என்பதாகும். மேற்கோள், அனுபவம், சிந்தனை, உள்ளுணர்வு என்பன அறிவிற்குரிய அடிப்படை ஆதாரங்கள் என்பதை வள்ளுவர் வழிநின்று விளக்கியுள்ளார். இப்பகுதிக்கு, மணிமேகலைக் காப்பியத்தின்

சமயத் திறங்கேட்ட காதை'யை இந்த நூலாசிரியர் பயன்படுத்தி இருந்தால்; அவருடைய கருத்துகள், மேலும் ஏரும் எழிலும் பெற்றிருக்கக் கூடும்.

**செல்லாக்காசா?**

அடுத்த இயலில், 'அறிவினால் ஆராய்ந்து கொள்ளும் முடிவுகள், ஏற்புடையனவாக இருக்குமா?' என்பதனை 'அறிவின் ஏற்புடைமை' (Validity of knowledge) எனும் தலைப்பில் ஆழமாக ஆசிரியர் ஆராய்ந்துள்ளார். பிரதிக் கோட்பாடு (பக். 99-100) (Correspondence Theory), இயைபுக் கோட்பாடு (பக். 101-102), (Cobber Theory), பயன்வழிக் கோட்பாடு (பக். 102-103) (Pragmatic Theory) என்பனவற்றைப் பண்டைத் தமிழருடைய சிந்தனையில் பொருத்திக் காட்டியுள்ளமை சிறப்புடையதாகும்.

'அறிவின் பயன்' என்பது இந்நூலை நிறைவுசெய்யும் இயலாகும். உலகியல் பயன், அறப்பயன், ஆன்மப் பயன் எனும் மூவகைப் பயன்களைப் பழைய தமிழ் இலக்கியங்களின்வழி, ஆசிரியர், நன்கு தெளிவுறுத்தியுள்ளார்.

அறிவின் குறிக்கோள் ஆன்மிக விடுதலையை அடைவதே. இதனையே அறிவின் முடிந்த பயனாகப் பேராசிரியர் நாராயணன் அறிவுறுத்துகிறார். இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை!

''அறிவறிவு என்றிங்கு
அரற்றும் உலகம்
அறிவுஅறி யாமை
யாரும் அறியார்
அறிவுஅறி யாமை
கடந்த அறிவானால்
அறிவுஅறி யாமை
அழகிய ஆறே'' (திருமந்.

எனும் திருமூலர் திருமொழியை இங்கு நினைவுகூர்வோமாக.

**பாராட்டுதலுக்குரிய சிறந்த முயற்சி**

'தமிழரின் அறிவுக் கோட்பாடு' எனும் இந்நூல் முதல் முயற்சி; முழுமையான முயற்சியாக அமையாவிட்டாலும், போற்றிப் பாராட்டத் தக்க புதிய முயற்சி. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழில் வெளிவந்துள்ள நூல்களுள், தலைசிறந்த நூல் இது. ஆசிரியரின் முதன்மைத் திறத்தை (Originality) வெளிப்படுத்தும் சிறந்ததொரு நூல் இது. இந்நூலாசிரியருக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டும் கடப்பாடுடையதாகும்.

க. த. திருநாவுக்கரசு

**The Books Published between January 1986 and June 1986**

1. **Ilakkaṇap patippukkaḷ**

   Dr. K. Nachimuthu

   [Dr. U. V. Swaminathaiyer Endowment Lecture Publication Series]

   P. N. 121, 1986, Rs. 12, Pages VII+124

   In this work the author explains in detail the literary Contribution of Dr. U. V. Swaminathaiyer in editing the four grammatical works namely, i) Puṟapporuḷ veṇpāmālai ii) Naṉṉūl Mayilai nātar Urai, iii) Naṉṉūl Caṅkaranamaccivāyar Urai and iv) Tamiḻ neri Viḷakkam.

2. **Makāmatip Pāvalar**

   [Sadhavathani Seygu thambip Pavalar Endowment lecture Publication Series]

   Dr. S. Fazulu Mohideen

   P. N. 122, 1986, Rs. 11, Pages VI+108

   The author in this work elucidates the life history and writings of Sadavathani Seyguthampi Pavalar. It could be inferred that his contribution to Tamil literature is notable among the other Muslim poets.

3. **Heritage of the Tamils Education & Vocation**

   Editors

   Dr. S. V. Subramanian

   Dr. V. R. Madhavan

   P. N. 123, 1986, Rs. 50, Pages XII+506

   This work is a compilation of 34 Research Articles contributed by emient scholars of various disciplines. The articles cover various topics such as Education, Professon and Art and culture of the Tamils.

4. **Ulaka Mutaṉ moḻi Tamil**

   [Dr. G. Devaneya Pāvaṇar Endowment Lecture Publication Series.]

   Dr. K. Poongavanam

   P. N. 124; 1986, Rs. 12, Pages IV+118

   Pavanar has come to a conclusion that Tamil language occupies the fore most position among the other languages. The present author with ample evidences tries to establish what Pavanar has said.

# A System of Transliteration of Tamil

## உயிரெழுத்துகள் — Vowels

| குறில் — Short | | நெடில் — Long | |
|---|---|---|---|
| அ | a | ஆ | ā |
| இ | i | ஈ | ī |
| உ | u | ஊ | ū |
| எ | e | ஏ | ē |
| ஒ | o | ஓ | ō |

ஐ ... ai

ஔ ... au

ஃ ... h

## மெய்யெழுத்துகள் — Consonants

| வல்லினம்—Hard | | மெல்லினம்—Soft | | இடையினம்—Medial | |
|---|---|---|---|---|---|
| க் | k | ங் | ṅ | ய் | y |
| ச் | c | ஞ் | ñ | ர் | r |
| ட் | ṭ | ண் | ṇ | ல் | l |
| த் | t | ந் | n | வ் | v |
| ப் | p | ம் | m | ழ் | ḻ |
| ற் | ṟ | ன் | ṉ | ள் | ḷ |

R. No. 30339 / 72

Books for Review and typed Articles for Publication should be sent in *triplicate*, making use of the system of transliteration indicated on the reverse page, addressed to :

The Editor-in-Chief,
Journal of Tamil Studies,
International Institute of Tamil Studies,
C. I. T. Campus,
T.T.T.I. Post, Madras-600 113.
Tamil Nadu, India.

## SUBSCRIPTION

| | Within India | | Outside India | | | |
|---|---|---|---|---|---|---|
| Annual | Rs. 25-00 | U.S. | $ 10 | or | Rs. | 100 |
| Single Copy | Rs. 15-00 | U.S. | $ 5 | or | Rs. | 50 |
| Life membership | Rs. 300-00 | U.S. | $ 100 | or | Rs. | 1000 |

Published on August 1987 by Dr. A. N. Perumal, Editor-in-Chief and Director, International Institute of Tamil Studies, on behalf of the International Institute of Tamil Studies and Printed by Novel Art Printers, Madras-14.